


# VIRAKESARI வீரகேசரி

THE PREMIER NATIONAL TAMIL DAILY IN SRI LANKA
Registered as a Newspaper at the G.P.O No. QD/133/News/2021 www.virakesari.lk
பிராந்திய,நகரப்பதிப்பு




மலர் : 92 இதழ்: 92 கொழும்பு பிலவ வருடம் கார்த்திகை மாதம் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (23.11.2021) ஹிஜ்ரி 1443 ர.ஆகிர் 17 விலை :ரூ.30 பக்கங்கள் : 20

## பட்ஜட்டின் இரண்டாம் வாசிப்பு நிறைவேற்றம்

**ஆதரவாக 153, எதிராக 60 பேர் வாக்களிப்பு; எதிரணியை சேர்ந்த இஷாக் ரஹுமான், டயானா கமகே, அரவிந்தகுமார், அலி சப்ரி ரஹீம், முஷாரப், ஹரீஸ், பைசல் காசிம், நசீர் அஹமட் ஆதரவு**



(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவின் முதலாவதும், 2022ஆம் ஆண்டுக்கான துமான அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவாக 153 வாக்குகளும், எதிராக 60 வாக்குகளும் நேற்று பாராளுமன்றில் அளிக்கப்பட்டதுடன் 93 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது. 09

**கூட்டமைப்பு ஜே.வி.பி. ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பு**

## எம்.பி.க்கள் எம்முடன் இல்லாவிட்டாலும் வடக்குக்கு நிதி

(ஆர்.யசி,எம்.ஆர்.எம்.வசீம்)



முழுநாட்டையும் ஒன்றாக கருதி வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து கிராமசேவகர் பிரிவுகளுக்கும் உள்ளூராட்சி பிரிவுகளுக்கும் கட்சி, இன, மத, குல பேதமின்றி ஒரே அளவான நிதி வழங்கப்பட்டுள்ளது. பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய நிதியை அரசுடமையாக்கியதை போன்று, வேறு ஏதேனும் மோசடியுடன் தொடர்புடைய நிதி இருக்குமாக இருந்தால் 08

## இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ள பஷில்

(இராஜதுரை ஹஷான்)

நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ எதிர்வரும் நாட்களில் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்தியாவுக்கு செல்லவுள்ளார். கடன் பெறுவதை நோக்காக கொண்ட விஜயமாக இது அமையாது. கடன் பெறுவது அரசாங்கத்தின் நோக்கமல்ல. மாற்று வழிமுறைகள் ஊடாக நாட்டுக்கு தேவையான வெளிநாட்டு 09

## உணவுப்பொதி,தேநீர் விலைகள் அதிகரிப்பு

(இராஜதுரை ஹஷான்)

உணவுப்பொதி ஒன்றின் விலை 20 ரூபாவினாலும் தேநீர் கோப்பை ஒன்றின் விலை 5 ரூபாவினாலும் அதிகரிக்கப்படுவதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். மேலும் ஏனைய உணவுப் பொருட்களின் விலைகளும் ஒப்பீட்டளவில் அதிகரிக்கப்பட்டுள்ளன. சமையல் எரிவாயு மற்றும் மரக்கறி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் 09




உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதலில் பலியானவர்களுக்கு நீதி வழங்கக் கோரியும் அருட்தந்தை சிறில் காமினியை தொடர்ந்து விசாரணைக்கு அழைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் கொழும்பு மறை மாவட்டத்தின் நூற்றுக்கணக்கான அருட் தந்தையர்கள் அமைதியான வழியில் போராட்டமொன்றை கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள குற்றவியல் விசாரணை திணைக்களத்துக்கு முன்னால் நேற்றைய தினம் நடத்தியபோது... (படப்பிடிப்பு:திஸெந் சமலக)

## மாவீரர் நாள் நிகழ்வுக்கு தடை கோரிய விண்ணப்பங்கள் நிராகரிப்பு

**சாவகச்சேரி, மல்லாகம் மற்றும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றங்கள் கட்டளை**

(எம்.நியூட்டன்)

யாழ்ப்பாணத்தில் மாவீரர் நாள் நிகழ்வுக்குத் தடை விதிக்கக்கோரி பொலிஸாரினால் முன்வைக்கப்பட்ட விண்ணப்பங்களை சாவகச்சேரி, மல்லாகம் மற்றும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றங்கள் தள்ளுபடி செய்து கட்டளையிட்டன. விண்ணப்பங்களில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளோர் குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை மற்றும் கொவிட் 19 தனிமைப்படுத்தல் 08

## புதிய தேர்தல் சட்டம் இயற்றாது மாகாண சபைத் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றது

(இராஜதுரை ஹஷான்)



மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பில் புதிய தேர்தல் சட்டம் இயற்றாது மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது. மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலான பிரச்சினைகளுக்கு நல்லாட்சியின் அரச தலைவர்கள் பொறுப்புக்கூற வேண்டும். உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஒருவருட காலத்துக்குப் பிற்போடும் 09

## இரசாயன உரம் இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்படவில்லை

**ஜனாதிபதியின் தீர்மானம் குறித்து அமைச்சர் மஹிந்தானந்த சபையில் தெரிவிப்பு**

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

இரசாயன உரத்தை இறக்குமதி செய்வது தொடர்பில் ஜனாதிபதியுடனான கூட்டத்தில் தீர்மானங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அதேநேரம் இது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தினால் எந்தவொரு வர்த்தமானி அறிவித்தலும் விடுக்கப்படவுமில்லை என சபையில் தெரிவித்த 09







## 69 இலட்சம் மக்களின் நம்பிக்கையை பெற்ற ஜனாதிபதி பைத்தியக்காரரா?

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

**ஜனாதிபதியின் விம்பத்தை சிதைக்க வேண்டாம் என்கிறார் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க**

நாட்டில் 69 இலட்சம் மக்களின் நம்பிக்கையை பெற்ற ஜனாதிபதியை பைத்தியக்காரன் எனவும் சேர் பெயில் எனவும் கூறுவது நியாயமா? 09

**பசுமை விவசாய கொள்கையில்**

## எவ்வித மாற்றமும் கிடையாது

**ஜனாதிபதி திட்டவட்டம்**

(எம்.மனோசித்ரா)

சேதன உரத்தைப் பயன்படுத்தி பசுமை விவசாயத்தை மேம்படுத்துவது தொடர்ந்தும் அரசாங்கத்தின் கொள்கையாகக் காணப்படும். 08




**'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணி மூலம்**

## அரசாங்கம் ஒரு சமூகத்தை முற்றாக புறக்கணித்துள்ளது

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

**எதிர்க்கட்சி தலைவர் சஜித்**

ஒரே நாடு ஒரே சட்டத்தை உருவாக்குவதாக தெரிவித்து ஆட்சிக்குவந்த அரசாங்கம் புதிய செயலணி அமைத்து ஒரு சமூகத்தை முற்றாக புறக்கணித்திருக்கின்றது. இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டு 09



# பாதுகாப்புப் படைகளே இந்த நாட்டின் உண்மையான சுமை

## கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

அரச ஊழியர்கள் நாட்டுக்கு சுமையென கூறும் அரசாங்கம் தமது இருப்பை தக்க வைக்கவும் வாக்கு வங்கியை பாதுகாக்கவும் பாதுகாப்புப்படைகளை பலப்படுத்துகின்றது. யுத்தம் முடிவுக்கு வந்ததில் இருந்து தற்போது வரையில் பாதுகாப்புக்கு மாத்திரம் 3790.8 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை சபையில் சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், பாதுகாப்புப்படைகளே இந்த நாட்டின் உண்மையான சுமை எனவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை, வரவு செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான இறுதிநாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு கொவிட் தொற்று ஒரு காரணமாக இருந்தாலும் கூட நாட்டின் தவறான பொருளாதார கொள்கையும் முகாமைத்துவமுமே பிரதான காரணமாகும். பாதுகாப்புக்காக மிகப்பெரிய தொகையை ஒதுக்குவதே நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணியாகும். யுத்தம் முடிவுக்கு வந்ததில் இருந்து பாதுகாப்புக்கு 3790.8 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அரச சேவையாளர்கள் நாட்டுக்கு சுமையென அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் பாதுகாப்பு படைத்தரப்பே இந்த நாட்டுக்கு சுமையாகும். ஆட்சியாளர்கள் தமது ஆட்சியை தக்கவைக்க இராணுவ ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளவும் அவர்களின் வாக்கு வங்கியை தக்கவைக்கவுமே இவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர். அரச சேவையில் நிபுணத்துவ அதிகாரிகளை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை நியமிக்கின்றனர்.

பயங்கரவாத தடைச் சட்டம் வெளிநாட்டிலுள்ள முதலீட்டாளர்களுக்கு முதலீடு செய்ய தடையாக உள்ளது. குறிப்பாக உலகப்பரப்பில் உள்ள ஈழத் தமிழர்கள் சொந்த மண்ணில் அதிக பற்றுக்கொண்டவர்கள். அவர்கள் முதலீடு செய்ய முன்வந்தால் அவர்களை அச்சுறுத்தி பணம் பறிப்பதும் பயங்கரவாத பிரிவுக்கு அழைத்து பயமுறுத்துவதும் அவர்களுடைய முதலீட்டை தடுக்கின்றது. இலங்கைக்கு வருமானத்தை தருகின்ற சுற்றுலாப்பயணிகள் மிக முக்கியமானதாகும். இலங்கைக்கு சுற்றுலாப்பயணிகளாக வருபவர்களில் 50 வீதமானவர்கள் வடக்கு கிழக்கின் புலம்பெயர் தமிழர்கள் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

வடக்கு கிழக்கு மீனவர்கள், விவசாயிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோல் பொருட்களின் விலையேற்றம் காரணமாக மக்கள் பதற்றமான சூழலில் உள்ளனர். தமிழர்களின் இருப்பை அழிக்க அரசாங்கம் சிங்களக் குடியேற்றங்களை முன்னெடுத்து வருகின்றது. அவசரமாக இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவற்றை நாம் கண்டிக்கின்றோம் என்றார்.




# புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்பது கானல் நீராகிறது

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

(இராஜதுரை ஹஷான்)

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்பது கானல்நீர் போல காட்சியளிக்கிறது. பல்லின சமூகம் வாழும் நாட்டில் அனைத்து இன மக்களின் அபிலாசைகளையும் உள்ளடக்கிய வகையில் குறுகிய காலத்தில் அரசியலமைப்பு ஒன்று உருவாக்குவது சாத்தியமற்றதாகும். அரசியலமைப்பில் குறைபாடுகள் காணப்பட்டால் அது சமூகத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் வினவிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

புதிய அரசியலமைப்பு ஊடாக இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணப்பட வேண்டும் என்பது லங்கா சமசமாஜக் கட்சியின் பிரதான கோரிக்கையாக காணப்படுகிறது. 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் காலங்களில் தேர்தல் மேடைகளில் அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம்,புதிய அரசியலமைப்பு ஆகிய விடயங்கள் பிரதானவையாக காணப்பட்டன.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தை நீக்கி 20 ஆவது திருத்தத்தை கொண்டு வருவதற்கு அரசாங்கம் காட்டிய அக்கறை புதிய அரசியலமைப்பு உருவாக்கம் விவகாரத்தில் காட்டப்படவில்லை என குறிப்பிட வேண்டும். புதிய அரசியலமைப்பு தொடர்பில் நிபுணர் குழு நியமிக்கப்பட்டது அக்குழுவினரது செயற்பாடுகள், மக்களின் அபிப்பிராயத்தை கோரியமை தொடர்பில் முன்னேற்றகரமாக காணப்படுகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

புதிய அரசியலமைப்புக்கான மூல வரைபு இம்மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டது. இருப்பினும் இதுவரையில் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்பது கானல் நீர்போல காட்சியளிக்கிறது.

பல்லின சமூகம் வாழும் நாட்டில் அனைத்து இன மக்களின் அபிலாசைகளையும் உள்ளடக்கிய வகையில் புதிய அரசியலமைப்பை குறுகிய காலத்தில் உருவாக்குவது சாத்தியமற்றது.அரசியல் நோக்கத்துக்காக அரசியலமைப்பு அவசரமாக உருவாக்கப்பட்டால் அது சமூக மட்டத்தில் பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தும். அரசியலமைப்பு அடிக்கடி திருத்தம் செய்யும் போது அரசியலமைப்பு மீதான மக்களின் பற்று மழுங்கடிக்கப்படும் என்றார்.

### நாட்டுக்கு இராணுவம் சுமை என்ற

# கூட்டமைப்பின் கருத்தை பொது எதிர்க்கட்சி ஏற்றுக்கொள்கின்றதா?

## ஆளுந்தரப்பு சபையில் கேள்வி : ஏனைய தேர்தல்களுக்கு முன்னர் பாராளுமன்ற தேர்தலுக்கு செல்வோம் எனவும் வலியுறுத்துகின்றது

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

நாட்டுக்கு இராணுவம் சுமை என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்து தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் தமது நிலைப்பாட்டை கூற வேண்டும். இதுவா பொது எதிர்க்கட்சியின் நிலைப்பாடு என சபையில் கேள்வி எழுப்பிய இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசிறி, மாகாணசபைத் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தலை நடத்த முன்னர் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவோம். மீண்டும் மக்கள் ஆணையை கேட்போம் எனவும் அவர் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதிநாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாட்டுக்கு இராணுவம் சுமை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறு ப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சபையில் கூறுகின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த கருத்து தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் தமது நிலைப்பாட்டை கூற வேண்டும். இதுவா பொது எதிர்க்கட்சியின் நிலைப்பாடு என்பதை கூற வேண்டும். கூட்டமைப்பினர் இவ்வாறு சபையில் கூறுகையில் அதனை எதிர்த்து எவருமே கருத்து தெரிவிக்கவில்லை.

இன்று நாம் பல சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றோம். ஆனால் சவால்களை கண்டு நாம் அஞ்சவில்லை. பல சவால்கள், நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து மீண்டுவருகின்றோம். நாட்டுக்குள் மீண்டும் டொலர்களை கொண்டுவரும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனை குழப்பவே எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றனர்.

நாம் தேர்தல்களுக்கு அஞ்சவில்லை. மாகாண சபைத் தேர்தலை, உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துங்கள். ஜனாதிபதித் தேர்தலை நடத்துங்கள் என எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர். அதற்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவோம். இரண்டரை ஆண்டுகளில் பாராளுமன்றத்தை கலைக்க முடியும். எனவே மீண்டும் பாராளுமன்றத் தேர்தலை நடத்தி மக்கள் ஆணையை பெற்றுக்கொண்டு ஆட்சியை அமைக்க போட்டியிடுவோம் என்றார்.

# விமர்சனங்களுக்காக அரசிலிருந்து விலகோம்

## அமைச்சர் அமரவீர

(எம்.மனோசித்ரா)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்ந்தும் அரசாங்கத்துடன் இருக்க வேண்டும் என்பதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிலைப்பாடாகும். 2014 இல் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தோல்வியடையச் செய்தவர்கள் இன்று எம்மை விமர்சிக்கின்றார்கள் என்பதற்காக சுதந்திரக் கட்சி அரசாங்கத்திலிருந்து விலகாது என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்துக்கான புதிய தொகுதி அமைப்பாளர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை நேற்று திங்கட்கிழமை சு.க. தலைமையகத்தில் இடம்பெற்றது. இதன் போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், வேலைகளை செய்ய முடியாதவர்களே ஒவ்வொரு கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர். அவற்றை நாம் கவனத்தில் கொள்வதில்லை. காரணம் நாம் ஒப்பந்தங்களை முன்னெடுத்திருப்பது அவர்களுடன் அல்ல. தற்போது சுதந்திரக் கட்சியை விமர்சித்துக் கொண்டிருப்பவர்கள் 2014இல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை தோல்வியடையச் செய்தவர்களாவர். இவ்வாறானவர்கள் அடுத்த முறையும் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு எதையாவது செய்ய வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

நாம் பொதுஜன பெரமுனவின் தலைவர்களுடனேயே ஒப்பந்தங்களில் ஈடுபட்டுள்ளோம். அதற்கமைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்ந்தும் அரசாங்கத்துடன் இருக்க வேண்டும் என்பதையே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறுகின்றார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் பங்காளிக் கட்சிகள் தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கோ ஒத்துழைப்பு வழங்கும் வகையில் சுதந்திரக் கட்சி நடவடிக்கைகளை முன்னெடுக்காது. நாம் எடுக்கும் அனைத்து தீர்மானங்களும் நாட்டுக்கானவையாகும். எதிர்க்கட்சி கூறும் வகையில் எம்மால் செயற்பட முடியாது. எம்மனதில் பல விடயங்கள் காணப்பட்டாலும் எதிர்க்கட்சி நன்மை கிடைக்கும் வகையில் நாம் தீர்மானங்களை எடுக்கப்போவதில்லை என்றார்.

# முதலாளிமார் சம்மேளனமும் தொழிற்சங்கங்களும் சந்திப்பு

(எம்.மனோசித்ரா)

சம்பள நிர்ணய சபையினூடாக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளம் நிர்ணயிக்கப்பட்டதையடுத்து அந்த மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் மற்றும் தோட்ட நிர்வாகத்துக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான தொழில் பிணக்குகளை பொலிஸ் நிலையத்தின் ஊடாக தீர்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளமை தொடர்பில் பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் முதலாளிமார் சம்மேளனத்திடம் எடுத்துரைத்துள்ளன.அதற்கமைய வேலை நாட்களை அதிகரித்து தொழிலாளர்களின் வேலைப்பழுவைக் குறைக்குமாறு இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளதோடு தொழில் பிணக்குகள் காணப்படுகின்ற இடங்களை இனங்கண்டு அவை தொடர்பில் எழுத்து மூலம் முதலாளிமார் சம்மேளனத்துக்கு அறிவிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைய ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த சந்திப்பு முதலாளிமார் சம்மேளனத்தின் செயலாளர் மங்கல யாபா தலைமையில் இடம்பெற்றது. இதில் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களான இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் , இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் கூட்டு தொழிற்சங்க அமைப்பு என்பன பங்குபற்றின. அத்தோடு கம்பனிகள் சார்பில் லலித் ஒபேசேகர மற்றும் ரொஷான் ராஜதுரை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பு தொடர்பில் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் குறிப்பிடுகையில்,

பெருந்தோட்ட கம்பனிகளையும் தொழிற்சங்கங்களையும் சந்திக்குமாறு முதலாளிமார் சம்மேளனத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அதற்கமையவே மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கம்பனிகள், தொழிற்சங்கங்களுக்கிடையிலான சந்திப்பு முதலாளிமார் சம்மேளனத்தில் இடம்பெற்றது.

இதன்போது அண்மைக்காலமாக பெருந்தோட்டங்களில் நிலவுகின்ற அசாதாரணமான நிலைமைகளை முழுமையாக தெளிவாக நாம் எடுத்துரைத்தோம். கூட்டு ஒப்பந்தம் இல்லாமலாக்கப்பட்டு சம்பள நிர்ணயசபை மூலமாக கிடைக்கப்பெற்ற சம்பள நிர்ணயத்தின் மூலமாக பெருந்தோட்ட மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் மற்றும் பெருந்தோட்ட நிர்வாகங்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான தொழில் பிணக்குகளை பொலிஸ் நிலையத்தின் ஊடாகவே தீர்க்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றமை தொடர்பிலும் இதன் போது அவதானம் செலுத்தப்பட்டது.

இந்த சந்திப்பில் சம்பளம் தொடர்பான வழக்கின் தீர்ப்பை நீதிமன்றம் வழங்கும் வரை காத்திருப்பதாகவும் ஆனால் தொழிலாளர்கள் எதிர்கொண்டுள்ள அன்றாட பிரச்சினைகளுக்கான தீர்வு காண்பதற்கு இதன்போது இணக்கம் காணப்பட்டது. அத்தோடு இது தொடர்பில் அடுத்த கட்ட பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கும் எந்தெந்த பகுதிகளில் இவ்வாறான பிரச்சினைகள் காணப்படுகிறது என்பதை இனங்கண்டு அது குறித்த தகவல்களை முதலாளிமார் சம்மேளனத்தில் எழுத்து மூலமாக சமர்ப்பிப்பதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது. அரசாங்கத்தின் ஊடாகவோ அரச சார்பற்ற தரப்பினர் ஊடாகவோ வெளியார் பெருந்தோட்டங்களுக்குள் உள்நுழைவதற்கு இடமளிக்கக்கூடாது என்பதையும் இதன்போது தெளிவாக எடுத்துரைத்தோம். எக்காரணம் கொண்டும் வெளியாருக்கு பெருந்தோட்டங்களுக்குள் நுழைவதற்கோ காணிகளை பகிர்ந்தளிப்பதற்கோ தொழிற்சங்கவாதிகள் என்ற ரீதியில் நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. அவ்வாறே கம்பனிகளும் அதற்கு இடமளிக்கக்கூடாது என்பதை ஸ்திரமாகத் தெரிவித்துள்ளோம். மேலும் வேலை நாட்களை அதிகரித்து, வேலைப்பழுவை குறைக்குமாறும் இதன்போது வலியுறுத்தினோம். காரணம் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும் தோட்ட நிர்வாகத்தினருக்கும் முரண்பாடுகள் ஏற்படுவதற்கு இதுவே பிரதான காரணியாகும். எனவே வழமைக்கு மாறான இவ்வாறான செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்ளுமாறு நாம் வலியுறுத்தினோம் என் றார்.

# நாய்கள் குரைப்பதால் நிலவுக்கு களங்கம் இல்லை

## பெரமுனவின் விமர்சனங்களுக்கு சுதந்திரக் கட்சி பதிலடி

(எம்.மனோசித்ரா)

நாய்கள் குரைக்கின்றன என்பதற்காக நிலவுக்கு கலங்கம் ஏற்படாது. பொதுஜன பெரமுனவிலுள்ள சிலர் சுதந்திரக் கட்சியை விமர்சிக்கின்றனர் என்பதற்காக நாம் எமது இலக்கு நோக்கிய பயணத்தை இடைநிறுத்திவிடப்போவதில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 18 இலட்சம் வாக்குகள் கிடைத்திருக்காவிட்டால் பொதுஜன பெரமுனவினால் வெற்றி பெற்றிருக்க முடியாது என்பதை அறியாதவர்களே எம்மை விமர்சித்துக் கொண்டிருக்கின்றனர் என்று சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாச தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்துக்கான புதிய தொகுதி அமைப்பாளர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை நேற்று சு.க. தலைமையகத்தில் இடம்பெற்றது. இதன் போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியாகும். பொதுஜன பெரமுனவுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பல இணக்கப்பாடுகள் பல உள்ளன. எனினும் தற்போது வேகமாக மீறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக கட்சி ஆதரவாளர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். சமூகத்திலுள்ள பல்வேறு தரப்பினராலும் கடும் எதிர்ப்புக்கள் வெளியிடப்படுகின்றன.

நாடளாவிய ரீதியிலுள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களங்களுக்கு இளைஞர் யுவதிகள் நீண்ட வரிசையில் காத்திருப்பதன் ஊடாக எதிர்பார்ப்புக்கள் எந்தளவுக்கு நிறைவேற்றப்படவில்லை என்பது தெளிவாகிறது. அரசாங்கம் ஆட்சியைப் பொறுப்பேற்ற போது சுவர்களில் சித்திரங்களை வரைந்து பாரிய எதிர்பார்ப்புக்களுடன் இருந்த இளம் தலைமுறையினர் இவ்வாறானதொரு நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளமை மிகவும் கவலைக்குரியதாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 18 இலட்சம் வாக்குகள் கிடைத்திருக்காவிட்டால் பொதுஜன பெரமுனவினால் வெற்றி பெற்றிருக்க முடியாது என்பதை அறியாதவர்களே எம்மை விமர்சித்துக் கொண்டிருக்கின்றனர். இரவில் நாய்கள் குரைக்கின்றன என்பதற்காக நிலவுக்கு களங்கம் ஏற்படாது. எனவே எம்மை விமர்சித்துக் கொண்டிருப்பவர்களால் எமது செயற்பாடுகள் எவையும் ஸ்தம்பித்து விடாது.நாம் எமது இலக்கை நோக்கி பயணிப்போம். ஆரோக்கியமான விவாதங்களுக்கே நாம் தயாராக இருக்கின்றோம் என்றார்.

## சுபயோகம்

23..11.2021 பிலவ வருடம் கார்த்திகை மாதம் 7 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

கிருஷ்ண பட்ச சதுர்த்தி திதி முன்னிரவு 10.27 வரை. அதன்மேல் பஞ்சமி திதி. திருவாதிரை நட்சத்திரம் பகல் 12.20 வரை. அதன்மேல் புனர்பூசம் நட்சத்திரம். சிரார்த்த திதி தேய்பிறை சதுர்த்தி. மரணயோகம். மேல்நோக்கு நாள். சந்திராஷ்டம நட்சத்திரங்கள் கேட்டை, மூலம். சுபநேரங்கள் பகல் 10.30 –11.30, மாலை 4.30 –5.30, ராகுகாலம் 3.00 –4.30, எமகண்டம் 9.00 –10.30, குளிகை காலம் 12.00 –1.30, வாரசூலம் வடக்கு, பரிகாரம் பால்.

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | சந் |
| குரு | திருகணித கிரகநிலை கார்த்திகை 07 செவ்வாய் | | |
| சனி | | | |
| சுக் | சூரி, புத, கேது | செவ் | |

| | |
|---|---|
| மேடம் | – தனம், பணவரவு |
| இடபம் | – உயர்வு, மேன்மை |
| மிதுனம் | – நோய், வருத்தம் |
| கடகம் | – பயணம், செலவு |
| சிம்மம் | – புகழ், செல்வாக்கு |
| கன்னி | – நட்பு, உதவி |
| துலாம் | – காரியசித்தி, அனுகூலம் |
| விருச்சிகம் | – ஈகை, புண்ணியம் |
| தனுசு | – கீர்த்தி, புகழ் |
| மகரம் | – அன்பு, இரக்கம் |
| கும்பம் | – அமைதி, தெளிவு |
| மீனம் | – அன்பு, பாசம் |

இன்று சங்கடஹர சதுர்த்தி விரதம். விநாயகப் பெருமானை வழிபடல் நன்று.

அதிர்ஷ்ட எண்கள் – 1, 5, 9

பொருந்தா எண்கள் – 6, 8

அதிர்ஷ்ட வர்ணங்கள்– மஞ்சள், ஊதா

இராமரத்தினம் ஜோதி
(தெஹிவளை ஸ்ரீ விஷ்ணு கோயில்)

# அடிப்படைவாத செயற்பாடுகளை தடுப்பதற்கு ரஷ்யாவுடனான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இலங்கை தயார்

## ரஷ்ய பாதுகாப்பு சபை செயலாளரிடம் ஜனாதிபதி தெரிவிப்பு



(எம்.மனோசித்ரா)

அடிப்படைவாத மற்றும் சைபர் அச்சுறுத்தல் செயற்பாடுகளை நிறுத்துதல் என்பவை தொடர்பில் இலங்கை மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் ஒத்துழைப்பினை மேலும் வலுப்படுத்துவதற்கு இலங்கை தயாராகவுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ரஷ்யாவின் பாதுகாப்பு சபை செயலாளர் நிகோலாய் பட்ருஷேவ் நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியை சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

சோவியத் அரசின் அரச புலனாய்வு பிரிவு மற்றும் ரஷ்யாவின் பெடரல் பாதுகாப்பு சேவையின் நீண்ட அனுபவமுடைய நிகோலாய் பட்ருஷேவ் கடந்த 2008 ஆம் ஆண்டிலிருந்து ரஷ்யாவின் பாதுகாப்பு சபை செயலாளராக பணியாற்றி வருகின்றார்.

இலங்கை மற்றும் ரஷ்யாவிற்கிடையில் இரு தரப்பு உறவிற்கு 2022 பெப்ரவரி 19 ஆம் திகதியாகும் போது 65 வருடங்கள் பூர்த்தியாகின்றன. நிகோலாயின் இந்த விஜயத்தின் மூலமாக அந்த தொடர்புகள் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி இதன் போது தெரிவித்தார்.

நிகோலாய் இலங்கைக்கு மேற்கொண்டுள்ள இந்த விஜயத்தின் போது கொண்டு வந்த 5000 ஸ்புட்னிக் தடுப்பூசிகள் , தடுப்பூசி வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்காக ரஷ்யாவிடமிருந்து கிடைக்கப் பெற்ற நிவாரணம், கொவிட் தொற்றின் போதிலும், 49 379 ரஷ்ய சுற்றுலாப்பயணிகளை நாட்டுக்கு அனுப்பியமை என்பவற்றுக்காக ஜனாதிபதி இதன் போது நன்றி தெரிவித்தார்.

ரஷ்யாவின் ஜீ.எஸ்.பீ. முறைமையின் கீழ் ஏற்றுமதி உற்பத்திகளை விரிவுபடுத்துவதற்கு இலங்கை எதிர்பார்த்துள்ளது. கொழும்பு துறைமுக நகரம், வலுசக்தி, மருந்து உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் அடிப்படை வசதிகள் உள்ளிட்ட துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு ரஷ்ய முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுப்பதாக ஜனாதிபதி இதன் போது தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினராக, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் அமைதி மற்றும் பாதுகாப்பிற்காக முன்னிற்பதற்காக ரஷ்யாவிற்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை கூட்டத்தொடரில் இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்பிற்கும் நன்றி தெரிவித்தார்.

தீவிரவாதத்திற்கு எதிராக இலங்கை முன்னெடுத்த போராட்டத்தின் போது ரஷ்யாவின் பாரிய ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. புலனாய்வு தகவல்களை பகிர்ந்து கொண்டமை, தீவிரவாத செயற்பாடுகளுக்காக முன்னெடுக்கப்பட்ட நிதி கொடுக்கல் வாங்கல்களை நிறுத்தியமை மற்றும் அடிப்படைவாத, சைபர் அச்சுறுத்தல் செயற்பாடுகளை நிறுத்துதல் என்பனவற்றுக்காக இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் ஒத்துழைப்பினை மேலும் வலுப்படுத்துவதற்கு இலங்கை தயாராகவுள்ளதாக ஜனாதிபதி இதன் போது தெரிவித்தார்.

இலங்கைக்கான ரஷ்ய தூதுவர், ரஷ்ய பாதுகாப்பு சபையின் பிரதி செயலாளர்கள், ஜனாதிபதி செயலாளர் உள்ளிட்ட பலரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி கோரி குற்றப்புலனாய்வு பிரிவிற்கு முன்னால் அமைதி போராட்டம்

( எம்.எம்.சில்வெஸ்டர்)

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதலில் பலியானவர்களுக்கு நீதி வழங்கக்கோரியும் அருட் தந்தை சிறில் காமினியை தொடர்ந்து விசாரணைக்கு அழைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் கொழும்பு மறை மாவட்டத்தின் நூற்றுக்கணக்கான அருட் தந்தையர்கள் அமைதியான வழியில் போராட்டமொன்றை நேற்றைய தினம் நடத்தினர்.

கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள குற்றவியல் விசாரணை திணைக்களத்துக்கு முன்னால் நடைபெற்ற இந்த அமைதியான போராட்டத்தில், கொழும்பு மறை மாவட்டத்தின் நூற்றுக்கணக்கான அருட் தந்தையர்கள் பங்கேற்றனர். அவர்கள் தங்களது கைகளில் பலியானவர்களின் உருவப் படங்களை ஏந்தியவாறும் பதாகைகள் தாங்கியவாறும், செபங்களை கூறியவாறும் இந்த அமைதியான போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அருட் தந்தை நாகரட்ணம் மனோ குமாரன்,

"இன்றும்(நேற்று) மூன்றாவது நாளாக அருட் தந்தை சிறில் காமினி அடிகளாரை விசாரணைக்காக அழைத்துள்ளனர். இந்த பயங்கரவாத தாக்குதலில் பலியான மக்களுக்கு நீதி கிடைப்பதற்காகவே நாம் இங்கு அமைதியான முறையில் போராட்டம் நடத்துகின்றோம். அவ்வாறு பலியான மக்களுக்கு நீதி கிடைப்பதற்காகவே அருட் தந்தை சிறில் காமினியும் குரல் எழுப்பினார். இவ்வாறு தொடர்ச்சியாக அவரை விசாரணைக்கு அழைப்பது முறையாகாது. ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சூத்திரதாரிகளை அழைத்து விசாரிப்பதை விடுத்து, தாக்குதலில் பலியான மக்களுக்கு நீதி வேண்டி போராடுபவர்களை அசௌகரியப்படுத்துவதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்" என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த கொழும்பு மறை மாவட்ட பேராயர் இல்லத்தின் சமூக மற்றும் தொடர்பாடல் பணிப்பாளர் அருட் தந்தை ஜூட் கிரிஷாந்த,

"இந்த நாட்டு நிலைமை குறித்து சகலரும் அறிந்துள்ளார்கள். மூன்றாவது நாளாகவும் அருட் தந்தை சிறில் காமினி அடிகளாரை சி.ஐ.டி.க்கு விசாரணைக்காக அழைத்துள்ளனர். அவரை மென்மேலும் சௌகரியப்படுத்துவதற்கான வேலையையே செய்து வருகின்றனர். ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை அறிக்கையிலும், பாராளுமன்ற குழு அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் வெளியே சுற்றித் திரிகின்றனர். அவர்களை இதுவரை விசாரணைக்கு கூட அழைக்கவில்லை. இது தொடர்பில் இதுவரை சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அருட் தந்தை சிறில் காமினியை இவ்வாறு விசாரணைக்கு அழைப்பது இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பிலான சகல விடயங்களையும் அறிந்து கொள்வதற்காவென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவால் ஒரு வருட காலமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பில் அந்த ஜனாதிபதி ஆணைக்குழு ஆழமாக ஆராய்ந்து பார்த்தே ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையை வெளியிட்டுள்ளனர். யார் யாரை அழைத்து விசாரிக்க வேண்டும் என்பது குறித்து சகல விடயங்களும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளமை நகைப்புக்குரியது. உண்மையான தகவல்கள் அனைத்தும் அந்த அறிக்கையிலுள்ளன. உங்களுக்கு அந்த அறிக்கையில் உள்ளவற்றைக் கொண்டு செயற்பாடுகளை ஆரம்பிக்கலாம். இந்த தாக்குதலுக்கு பின்னணியில் உள்ளவர்களை கைது செய்ய முடியும். இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதியை நிலைநாட்டவும், நியாயத்தை பெற்றுக்கொடுக்கவும் ஜனாதிபதியும் பிரதமரும் நடவடிக்கை எடுங்கள்" என்றார்.

# நல்லாட்சியில் இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமென எதிர்பார்த்தோம்

## புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்கான சிறந்த வாய்ப்பு தவறவிடப்பட்டது என்கிறார் டிலான் பெரேரா

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

பிரதான இரண்டு கட்சிகள் இணைந்து 2015ஆம் ஆண்டில் உருவாக்கிய அரசாங்கத்தில் சிறந்த அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டு இன முரண்பாடுகளுக்கு தீர்வு கிடைக்கும் என எதிர்பார்த்தோம். ஆனால் அது வெற்றி பெறவில்லை என சபையில் தெரிவித்த ஆளுங்கட்சி உறுப்பினர் டிலான் பெரேரா, இலங்கையர் என்ற உணர்வுடன் அனைவரும் சிந்திக்காத வரையில் நாடாக முன்னேற முடியாது என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை, வரவு,செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதிநாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

மிகவும் கடினமான பாதையொன்றில் பயணிக்கும் போதே நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவிற்கு இந்த வரவு, செலவு திட்டத்தை முன்வைக்க நேர்ந்துள்ளது. பொதுமக்களுக்கு அதிக நெருக்கடி கொடுக்காது, சுமைகள் தெரியாது அதேபோல் வரிகளை பெற்றுக்கொள்ள வேண்டிய நபர்களை நெருக்கும் வரவு, செலவு திட்டமாக கருத வேண்டும். இதுவரை காலமாக முன்னெடுத்த பொருளாதார கொள்கையே இன்று நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய சகலரும் இதற்கு பொறுப்புக்கூற வேண்டும். அனைவருமே ஏதோ ஒரு காலகட்டத்தில் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தியவர்களே.

இந்த அரசாங்கத்தில் நல்ல வேலைத்திட்டங்கள் எடுத்ததை போன்று தவறான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. உரப்பிரச்சினை என்பன தவறான தீர்மானம். ஆனால் தடுப்பூசி பெற்றுக்கொடுத்த வேலைத்திட்டம் மிகச்சிறந்த ஒன்றாகும். தவறுகள் விடப்பட்ட இடங்களை அடையாளம் கண்டு உடனடியாக அதனை சரி செய்ய வேண்டும். அதனை செய்ய முயற்சிக்கும் வேளையில் அதனையும் தடுப்பது ஆரோக்கியமான அரசியல் அல்ல.

நாட்டில் பல்வேறு மாறுபட்ட ஆட்சியை உருவாக்கியும் அவற்றில் முழுமையாக வெற்றி கிடைக்கவில்லை. 2015ஆம் ஆண்டில் பிரதான இரண்டு கட்சிகள் இணைந்து உருவாக்கிய அரசாங்கத்தில் நாட்டுக்கு ஏற்ற சிறந்த அரசியல் அமைப்பு உருவாக்கப்படும் என எதிர்பார்த்தோம். இன முரண்பாடுகளுக்கு தீர்வு கிடைக்கும் என எதிர்பார்த்தோம். ஆனால் அது வெற்றி பெறவில்லை.







உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதலில் பலியானவர்களுக்கு நீதி வழங்கக்கோரியும் அருட் தந்தை சிறில் காமினியை தொடர்ந்து விசாரணைக்கு அழைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் கொழும்பு மறை மாவட்டத்தின் நூற்றுக்கணக்கான அருட் தந்தையர்கள் அமைதியான வழியில் போராட்டமொன்றை கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள குற்றவியல் விசாரணை திணைக்களத்துக்கு முன்னால் நேற்றைய தினம் நடத்தினர். இதன்போது எடுக்கப்பட்ட படங்கள். (படப்பிடிப்பு திநெத் சமல்க)

### நாட்டிற்கு முதலீட்டாளர்களை வரவழைக்க

# ஆளும், எதிர்க்கட்சி தரப்புக்கள் இணைந்து செயற்படவேண்டும்

## சபையில் எஸ்.பி. திசாநாயக்க கோரிக்கை

(ஆர்.யசி,எம்.ஆர்.எம்.வசீம்)

கொரோனா பாதிப்பு காரணமாக வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இணைந்து செயற்பட வேண்டும்.அவ்வாறு இல்லாமல் முதலீட்டாளர்கள் வருவதை தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது என எஸ்.பி திசாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2022ஆம் வருடத்துக்கான வரவு, செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதிநாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாடு பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்த நிலையில் அரசாங்கத்துடன் இணைந்து நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு மக்களை தூண்டி விடும் நிலையே காணப்படுகிறது. இந்நிலையில் நாட்டின் பொருளாதாரம் அன்றி கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கையே அதிகரிக்கும்.

பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நாட்டுக்குவரும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் சந்தேகத்தை நீக்குவதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளும்போது முதலீட்டாளர்கள் நாட்டுக்குவரும் சந்தர்ப்பங்களே இழக்கப்படும். கொரோனா வைரஸ் சூழ்நிலைக்குப் பின்னர் ஆசிய நாடுகளில் 1.2 ட்ரில்லியன் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தியா, சீனா, சிங்கப்பூர், வியட்நாம்,பங்களாதேஸ் போன்ற நாடுகளிலேயே அந்த முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எமது நாட்டுக்கும் முதலீட்டாளர் வருகை தர வேண்டுமானால் எதிர்க்கட்சியின் பூரண ஒத்துழைப்பு அவசியமாகும். நாட்டில் அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இணைந்து செயற்படுவதை சர்வதேச சமூகம் பார்க்க வேண்டும். அப்போதுதான் நாட்டிற்கு சர்வதேச முதலீட்டாளர்கள் வருகை தருவர். அரச அதிகாரிகள் மத்தியில் உள்ள பயம் நீக்கப்பட வேண்டும். அமைச்சர்கள் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசியலமைப்பின் 52.2ல் அமைச்சர்கள் எடுக்கக்கூடிய தீர்மானம் தொடர்பில் சரத்துக்கள் உள்ளன. அதனை முறையாக பயன்படுத்தி அதிகாரிகள் பயமின்றி செயற்படுவதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பது அமைச்சர்களின் பொறுப்பாகும் என்றார்.

# பெண்களை அபகீர்த்திக்குள்ளாக்கும் வகையில் தெரிவித்த கருத்து தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி சபாநாயகரிடம் சபையில் முறைப்பாடு

(ஆர்.யசி,எம்.ஆர்.எம்.வசீம்)

பெண்களை அபகீர்த்திக்கு உள்ளாக்கும் இரட்டை அர்த்தத்தில், ஆளும் கட்சி உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி கீழ்த்தரமான வகையில் கருத்து வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரட்ண தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமை பிரச்சினையை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் 20 ஆம் திகதி திஸ்ஸ குட்டியாராச்சி பாராளுமன்றத்தில் மேற்கொண்ட உரையில், அபகீர்த்தி, வஞ்சித்தல் மற்றும் வக்கிரத்தனமான வகையில் சபையில் ஒருபோதும் பயன்படுத்தப்படாத வசனத்தை பயன்படுத்தியிருந்தார்.

அன்றைய தினம் நான் சபையில் தெரிவிக்காத வசனத்தையும் பொருளொன்றையும், அதன் விலையையும் கூறி மகிழ்ச்சியா என்று கூறியதாக குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு நான் எந்தப் பொருளின் பெயரையும் அவ்வாறு குறிப்பிட்டிருக்கவில்லை. ஆனால் அவர் குறிப்பிட்ட பொருளின் பெயரை குறிப்பிட்டு இரட்டை அர்த்தத்தில் கருத்து வெளியிட்டுள்ளார். அந்த வசனத்தின் உள் அர்த்தத்தை பார்க்குமாறு நான் கேட்கின்றேன்.

இத்துடன் இந்த சபையில் இல்லாத, இங்கு கூறும் கருத்துக்களுக்கு எந்தவகையிலும் தொடர்புபடாத ஜலனி பிரேமதாச தொடர்பிலும் குறிப்பிட்டு அவர் தொடர்பிலும் அவருக்கு அகௌரவப்படுத்தும் வகையில் கீழ்த்தரமான வசனத்தை பயன்படுத்தியிருந்தார். அவர் இந்தக் கருத்தை கூறும் போது, சபைக்கு தலைமை தாங்கிய உறுப்பினருக்கு நளின் பண்டார எம்.பி. அவ்வாறான அநாகரிகமான வசனத்தை சுட்டிக்காட்டி, ஹன்சாட்டிலிருந்து நீக்குமாறும் வலியுறுத்தியுள்ளார். ஆனால் அந்தக் கருத்துக்கள் தொடர்பில் அவர் புரிந்துகொள்ளவில்லை. அப்படியாயின் அந்த ஆசனத்தில் இருந்த அஜித் ராஜபக்ஷவுக்கு அந்த கதிரையின் முக்கியத்துவம் தொடர்பில் தெளிவுபடுத்துமாறு நான் சபாநாயகரிடம் கேட்கின்றேன்.

ஆளும் கட்சி உறுப்பினர் பெண்களை அபகீர்த்திக்குள்ளாக்கி தெரிவித்த கருத்துக்களை பிரதமர், சபாநாயகர், சபை முதல்வர், ஆளும் கட்சி பிரதம கொறடா ஆகியோர் அனுமதிக்கின்றீர்களா என்று கேட்கின்றேன். ராஜபக்ஷவினர்களும் இதனை ஏற்றுக்கொள்கின்றீர்களா? என கேட்கின்றேன் என்றார்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் குறித்த சந்தர்ப்பத்தில் சபைக்கு தலைமை தாங்கிய உறுப்பினர் தலைமை தாங்க தகுதியில்லை என்றார். இதற்கு சபாநாயகர் பதிலளிக்கையில், இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து நாளைய தினம் (இன்று) அறிவிப்பேன் என்றார்.


## தங்க ஆபரணங்கள் ஏலவிற்பனை

பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனமாகவும் இலங்கை மத்திய வங்கியின் நிதி சபையின் அனுமதிபெற்ற கடன்வழங்கல் நிறுவனமாகவும் வர்த்தக பணிப்பாளரின் அனுமதியுடன் நடத்தப்படும் ஏஷியா அசெற் பினான்ஸ் பீ.எல்.சீ. நிறுவனத்தின் கீழே குறித்த கிளைகளால் 2021.06.30ஆம் திகதி அல்லது அதற்கு முன் வழங்கப்பட்டு மீள் கொடுப்பனவுக்கு உரிய திகதியிலிருந்து 90 நாட்கள் கடந்தும் கொடுப்பனவு கைவிடப்பட்டுள்ள காப்புறுதி தொகைக்கான பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ள தங்க ஆபரணங்களை அடகுசேவை சட்டத்தின் 85ஆம் பிரிவின் கீழே வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு ஏற்ப கீழே குறித்த கிளை நிலையங்களில் ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

| அடகு வைக்கப்பட்ட கிளை | ஏலவிற்பனை திகதி மற்றும் நேரம் | ஏலவிற்பனை நிலையம் |
| --- | --- | --- |
| கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஒட்டுச்சுட்டான், வவுனியா, புதுக்குடியிருப்பு | 2021 டிசம்பர் 02ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு | கந்தசாமி கோவில் அருகில் A9 வீதி, கிளிநொச்சி. |
| சங்கானை, சாவகச்சேரி, சுன்னாகம், யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை | 2021 டிசம்பர் 04ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு | இலக்கம்.56/228, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| மட்டக்களப்பு, கிண்ணியா, செங்கலடி, வாழைச்சேனை, திருகோணமலை | 2021 டிசம்பர் 07ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு | இல.187, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. |
| அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, களுவாஞ்சிக்குடி, | 2021 டிசம்பர் 08ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு | இல.172, பிரதான வீதி, களுவாஞ்சிக்குடி. |
| பதுளை, மஹியங்கனை, மொனராகலை | 2021 டிசம்பர் 09ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு | இல.141, புதிய பஸ் தரிப்பு நிலையம், மொனராகலை. |
| பேருவளை, காலி, களுத்துறை, மாத்துறை, மந்துகம | 2021 டிசம்பர் 10ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு | இல.79, அனகாரிக தர்மபால மாவத்தை, மாத்துறை. |

குறிப்பு : ஏலவிற்பனைக்காக பிரவேச கட்டணமாக ரூ.5000/= ரொக்கமாக அறவிடப்படும்.

ASIA ASSET FINANCE PLC

Muthoot Finance

உதவி பொது முகாமையாளர் (தங்கக்கடன்)
இல.76, பார்க் வீதி, கொழும்பு -02.
துரித அழைப்பு: 0767 888 222 தொ.பே: 0117 699 000
பதிவு இல.PB139



1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட சட்டம்) 9ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்.

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் P.L.C. பகிரங்க ஏலவிற்பனை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கண்டி மாநகர சபை எல்லைக்குட்பட்ட இல. 251 செங்கடகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் சேர். பொன் சொய்சா வீதியில் (கொழும்பு வீதி) அமைந்துள்ள காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் J.R.ADe.J.செனவிரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 14.07.2012ம் திகதிய 1504ம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட லொட் 01 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கொழும்பு வீதி வரிப்பண இல. 233 மூன்று மாடிக் கட்டிடம், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 7.6 பர்ச்சஸ் பரப்பளவானது.

இவ்வாதனம் கண்டி, கொழும்பு வீதி, இல. 233 எனும் விலாசத்தில் தனது பதிவுக்காரியாலயம் அமைந்துள்ள W.D.R.சமரகோன் அன்ட் சன்ஸ் (பிரைவெட்) லிமிட்டட் கடப்பாடுடையதாக கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் P.L.C. இனால் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

**07.12.2021 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்**

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு 04.10.2019ம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 29.10.2019ம் திகதிய த மவ்பிம, த ஐலண்ட் மற்றும் தினக்குரல் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை:** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.

01. கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து)
02. பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று)
03. ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2.5% (நூற்றுக்கு இரண்டரை)
04. சகல பகிரங்கப்படுத்தல் செலவு
05. இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ.1500/=
06. நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ.3000/=

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் P.L.C இற்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

இந்த ஏலவிற்பனையை நிறுத்துவதற்கு அல்லது ரத்துச் செய்வதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு:** முகாமையாளர்
கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் P.L.C.,
இல. 120, கொட்டுகொடெல்ல வீதி, கண்டி.
தொலைபேசி : 081-2223163, 081-2234392-3

I.W.ஜயசூரிய
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால்
உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்
இல.369/1, துட்டுகெமுனு மாவத்தை, லேவெல்ல பாதை, மாவில்மட, கண்டி
பெக்ஸ் : 081-2210595 / 071-8446374 / 071-4962449
E.mail : wijeratnejayasuriya@gmail.com

## இன்றைய சிந்தனை

**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது**
(திருக்குறள்)

**தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் அல்லாமல், மற்றவர்க்கு மனக் கவலையை மாற்ற முடியாது.**

VIRAKESARI
வீரகேசரி
2021 நவம்பர் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிட்டெட்,
267, ராஜ மாவத்தை, ஏக்கல, ஜா-எல. Tel. : 011 7322750, 011 7322751, 011 7322754, 011 7322755, 0117322736
Fax : 011 7322752 Web Site : www.virakesari.lk
E-mail : editordaily@virakesari.lk, kesari25@virakesari.lk
News On-line : onlinenews@virakesari.lk Advertisment : advertising@virakesari.lk
Circulation : circulation@virakesari.lk

# மீண்டும் அதிகரிப்பை காட்டும் தொற்று பரவல் மற்றுமொரு முடக்கத்தை நாடு தாங்காது

நாட்டில் தற்போதைய சூழலில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் அதிகரித்து செல்வது குறித்து தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. அதாவது மீண்டும் ஒரு அலை ஏற்படுவதற்கான அபாயம் இருப்பதாக தொடர்ச்சியாக சுகாதாரத்துறையினால் சுட்டிக் காட்டப்பட்டு வருகிறது. அதற்கான காரணங்களும் சுகாதார தரப்பினரால் முன்வைக்கப்பட்டு வருவதை அறியமுடிகிறது. முக்கியமாக அண்மைய வாரங்களில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவல் வேகம் அதிகரித்திருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. குறிப்பாக 15 முதல் 20 வீதத்தினால் இந்த தொற்று பரவல் அதிகரித்திருப்பதாக கூறப்படுகிறது. இதனை இலகுவாக கருதிவிட வேண்டாம் என்றும் சுகாதார தரப்பினர் தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். மிக முக்கியமாக மக்கள் சுகாதார பழக்க வழக்கங்களை, சுகாதார அறிவுறுத்தல்களை வழிகாட்டுதலை உரிய முறையில் பின்பற்ற வேண்டும். தேவையற்ற ஒன்றுகூடல்கள் வேண்டாம் என்றும் தொடர்ச்சியாக தெரிவித்து வருகின்றனர். இங்கு மிக முக்கியமாக நாட்டின் சகல தரப்பினரும் சுகாதாரத் தரப்பினர் கூறுகின்ற விடயங்கள், பரிந்துரைகள் மற்றும் எச்சரிக்கைகள் தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. இல்லாவிடின் மீண்டும் தொற்று பரவல் அதிகரித்து நாடு முடக்கப்பட வேண்டிய ஒரு சூழல் ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. இவை தொடர்பில் சுகாதார தரப்பினர், சுகாதார நிபுணர்கள், அரசு சார்பில் கருத்து வெளியிடக்கூடிய நிலையில் இருக்கின்ற சுகாதார துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் தொடர்ச்சியாக பல்வேறு விடயங்களையும் வெளியிட்டு வருவதை காண முடிகிறது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள சுகாதார பணிப்பாளர் அசேல குணவர்த்தன, நாட்டில் மீண்டும் வேகமாக கொவிட் வைரஸ் பரவ ஆரம்பித்துள்ளது. நாடு திறக்கப்பட்டதன் பின்னர் பொதுமக்களின் செயற்பாடுகள் பொறுப்பற்ற விதத்தில் அமைந்துள்ளமையே இதற்கு காரணமாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தடுப்பூசி ஏற்றினாலும், எத்தனை தடவை ஏற்றிக்கொண்டாலும் அவற்றை விடவும் வைரஸின் வீரியம் அதிகமானது என்பதையே நாம் ஆரம்பத்திலிருந்து தெரிவித்துக்கொண்டுள்ளோம். நாம் தடுப்பூசி ஏற்றிவிட்டோம் என்பதற்காக வைரஸ் தொற்று பரவாமல் இருக்கப்போவதில்லை. எமது செயற்பாடுகள் காரணமாக வைரஸ் காவிச்செல்லப்பட்டு ஏனையோருக்கு பரவும் சாத்தியப்பாடுகள் அதிகமாகும். எனவே பொதுமக்கள் மிகக் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இப்போது வைரஸின் பரவல் வேகம் அதிகரித்துள்ளது.

இந்நிலைமை தொடருமாயின் மீண்டும் நாட்டை முடக்கும் நிலைமையே ஏற்படும். அவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்றால் மக்களின் வாழ்வாதாரமும் மோசமாக பாதிக்கப்படும். சம்பள கொடுப்பனவுகள் முதற்கொண்டு அனைத்தையும் மட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே இதனை சகலரும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். இதேவேளை வைரஸ் பரவல் நிலைமைகள் குறித்து சுகாதார அமைச்சின் கொவிட் வைரஸ் பரவல் செயற்பாடுகளின் பிரதான தொடர்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானியும் முக்கிய விடயங்களை குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வெளிப்படுத்தியுள்ள விடயத்தை இலகுவாக எடுத்துக்கொள்ளக்கூடாது. தொடர்ந்து பரவல் அதிகரித்தால் மீண்டும் ஒருமுறை முடக்கத்துக்கு செல்ல வேண்டிய அபாயம் ஏற்படும் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். எனவே இது தொடர்பாக மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும். முக்கியமாக பொது விடயங்களில் ஈடுபடுகின்ற, பொது இடங்களுக்கு சென்று வருகின்ற, வர்த்தக செயற்பாடுகள் உள்ளிட்ட பல விடயங்களில் ஈடுபடுகின்றவர்கள் இந்த விதிமுறைகளை, சுகாதார வழிகாட்டலை பின்பற்றுவது தொடர்பாக பொறுப்புடன் செயற்பட வேண்டும். பொறுப்பற்ற முறையில் செயற்படும் பட்சத்தில் நிச்சயமாக மீண்டும் ஒரு சிக்கலான நிலைமை ஏற்படும் சாத்தியம் உள்ளது. இது குறித்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்.

மேலும் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்தியகுழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம், ஒரு வாரத்திற்குள் தொற்றாளர் எண்ணிக்கையானது 1.3 மடங்கினால் அதிகரித்துள்ளது. இவ்வாறான நிலையில் மீண்டுமொரு கொவிட் அலை ஏற்படாமல் தவிர்க்கும் வகையில் நாம் செயற்பட வேண்டும். தற்போது செயலூட்டியாக மூன்றாம் கட்ட தடுப்பூசிகள் வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றை உரிய வயதினர் உரிய காலத்தில் பெற்றுக்கொள்வதன் மூலம் தொற்றினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்ள முடியும். தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளும் அதேவேளை சுகாதார விதிமுறைகளையும் பொதுமக்கள் முறையாகப் பின்பற்ற வேண்டும். எனினும் தற்போது திருமண வைபவங்கள் உள்ளிட்டவற்றில் மக்கள் எவ்வித சுகாதார விதிமுறைகளையும் பின்பற்றுவதில்லை. இவ்வாறு பொதுமக்கள் பொறுப்பற்று செயற்படும் போது தொற்றானது மீண்டும் தீவிரமடையக் கூடிய நிலைமையே ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில் சுகாதார தரப்பினரின் எச்சரிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். இதனை அலட்சியம் செய்யக்கூடாது. காரணம் கடந்த 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதியிலிருந்து நாடு பாரியதொரு நெருக்கடியை சந்தித்து வருகின்றது. முதலாவது தொற்று அலையானது மூன்று மாதங்களில் கட்டுப்படுத்தப்பட்டது. எனினும் மீண்டும் கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்திலிருந்து இரண்டாவது அலை ஆரம்பமானது. அந்த அலை கடந்த மார்ச் மாதமளவில் கட்டுப்படுத்தப்பட்ட போதும் மூன்றாவது அலை இவ்வருடம் மே மாதத்திலிருந்து ஆரம்பமாகியது. அது இன்னும் இந்த நாட்டை ஆட்டிப் படைத்துக் கொண்டேயிருக்கின்றது. இந்த காலப்பகுதியில் இடைநடுவில் மூன்று முறைகள் நாடு முடக்கப்பட்டது. இதனால் பாரிய பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டன. அன்றாடம் தொழில் செய்து தமது பொருளாதாரத்தை கொண்டு நடத்துகின்ற சுமார் 40 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர். நிவாரணம் வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்ட போதிலும் கடுமையான பாதிப்புக்களை மக்கள் எதிர்கொண்டனர்.

அதுமட்டுமன்றி நாட்டில் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக முயற்சியாளர்களும் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டனர். எனவே மீண்டும் ஒரு முடக்கத்தை இந்த நாட்டினால் தாங்கிக்கொள்ள முடியாது என்பதை சகலரும் தெரிவித்து வருகின்றனர். முக்கியமாக சுகாதார தரப்பினரும் வர்த்தகர்களும் பொருளாதார நிபுணர்களும் அரசாங்க தரப்பினரும் இந்த விடயங்களை வலியுறுத்தி வருகின்றனர்.

இது தொடர்பில் சகலரும் கவனமாக இருக்க வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் தொற்று பரவல் தீவிரம் அடையாமல் இருப்பதற்கு நாம் நமது பங்களிப்பை செலுத்த வேண்டும். இந்த விடயத்தில் சகல பிரஜைகளுக்கும் பாரியதொரு பொறுப்பு காணப்படுகின்றது. ஒரு வீட்டிலிருந்து வெளியே செல்கின்ற ஒருவர் வெளியிலிருந்து தொற்றைக் கொண்டு வரும் பட்சத்தில் அது வீட்டிலிருக்கின்ற சிறுவர்கள், வயதானவர்கள் மத்தியில் தொற்றிவிடும் அபாயமும் இருக்கின்றது. எனவே சுகாதார வழிமுறைகளை சரியான முறையில் பின்பற்றுவதே இதற்கு இருக்கின்ற ஒரே தீர்வாக காணப்படுகின்றது. தற்போது நாட்டில் மூன்றாவது தடுப்பூசியை ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றை சரியான முறையில் பெற்று மக்கள் தமது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக் கொள்வதே தற்போதைய பாதுகாப்புக்கு வழியாகும். எனவே இந்த விடயம் தொடர்பாக சகலரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் மீண்டும் ஒருமுறை முடக்கம் ஏற்படாமல் தடுப்பதற்கும் புதிய அலை ஒன்று ஏற்படாமல் இருப்பதற்கும் சகலரும் பொறுப்புடனும் ஒத்துழைப்புடனும் செயற்பட வேண்டும் என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# அறிவுப் புரட்சியும் கல்விச் செயற்பாடும்

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாகக் கட்டவிழ்த்து விடப்பட்ட அறிவும் புத்தாக்கமும் இன்று அறிவுப் புரட்சி என அழைக்கப்படுகின்றன. இதனால் சமூக, பொருளாதார முறையானது அடிப்படையான சில மாற்றங்களுக்கு உள்ளாகி, புதிய அறிவு உருவாக்கப்பட்டு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டு, அதன் பெறுமதி கூடி வருகின்றது. புரட்சி என்பது இந்த அடிப்படை மாற்றங்களைக் கருதுகின்றது.

மேலும், அறிவுப் புரட்சியானது அண்மைக் காலங்களில் ஏற்பட்டு வருகின்ற, தகவல் புரட்சிக்கு மேலே கட்டமைக்கப்பட்டு, மரபு வழியான நூல் நிலையங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் என்ற எல்லைகளுக்கப்பால் அறிவானது விரிவடைந்து செல்வதையும் காட்டுகின்றது. புதிய அறிவின் உருவாக்கம், புதிய பயன்பாடு என்பனவற்றுடன், அறிவு இன்று யாவருக்கும் கிடைக்கத்தக்கதாக, வெகுஜன மயப்படுத்தப்பட்டிருப்பதும் அறிவுப் புரட்சியின் ஒரு அம்சமாகும்.

முன்னைய தலைமுறையில் அறிவானது ஒரு குறிப்பிட்ட உயர் குழாத்தின் ஏகபோக உரிமையாக இருந்த நிலை ஒரு முடிவுக்கு வந்துள்ளது. அறிவானது எப்போதுமே பெறுமதி மிக்கதாகவும் கிடைத்தற்கரியதாகவும் இருந்தது. ஆனால் இன்று, தகவல் தொழில்நுட்பத்தின் காரணமாக, அறிவானது உலகளாவிய பொருளாதார முறையுடனும் அதில் பணியாற்றும் சகல தரப்பு மக்களுக்கும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. எனவே தான் இன்றைய யுகம் அறிவுப் புரட்சி யுகம் எனப்படுகின்றது.

இன்றைய உலகப் பொருளாதாரத்தில் நிதிச் சந்தைகள், பொழுதுபோக்குத் துறை என்பனவும் கணினியும் மென்பொருட்களும் தொலைத்தொடர்புகளும் உயிர்த்தொழில்நுட்பமும் முக்கியத்துவம் பெறுகின்றன. எனினும் இது முன்னர் கைத்தொழில் உற்பத்தித் துறையிலிருந்து சேவைத்துறை நோக்கிய மாற்றமாகவே கருதப்பட்டது. ஆனால் இன்று இம்மாற்றமானது, வளச் செறிவான பொருளாதாரத்திலிருந்து அறிவுச் செறிவான பொருளாதாரத்தை நோக்கியது எனக் கருதப்படுகின்றது.

**வரலாற்று நோக்கு**

மனித வரலாற்றில் எப்போதுமே மாற்றத்தின் உந்து சக்தியாக அறிவுத் தொகுதி இருந்து வந்துள்ளது. வேட்டைத் தொழில் செய்த பண்டைய சமூகங்கள் விவசாய சமூகங்களாக மாறுவதற்கு விவசாயம், நிலப் பயன்பாடு தொடர்பான அறிவு வளர்ச்சி காரணமாக இருந்தது. விவசாய சமூகத்தின் பிரதான சக்திவலு நிலமாக இருந்தது. அதனை எவ்வாறு பயன்படுத்துவது? என்பது பற்றிய அறிவு பொருளாதார மாற்றங்களுக்குக் காரணமாயிற்று.

பதினெட்டாம் நூற்றாண்டில் விவசாயத்திலிருந்து கைத்தொழில் சமூகத்தை நோக்கிய மாற்றம் ஏற்பட இயந்திரப் பயன்பாடு பற்றிய (நீராவி இயந்திரம், Combustion இயந்திரம்) அறிவு வளர்ச்சி காரணமாயிற்று. நிலக்கரியும் எண்ணெய்யும் சக்தி வலுவினைத் தந்தன. இவை பற்றிய அறிவானது கைத்தொழில் சமூகத்தின் எழுச்சிக்கும் புரட்சிக்கும் உதவின.

விவசாயப் புரட்சிக்கும் கைத்தொழில் புரட்சிக்கும் முறையே நிலம், எண்ணெய் பயன்பாடு பற்றிய அறிவு பொருளாதார முன்னேற்றத்துக்கு இவ்வறிவு காரணமாயிற்று.

**அறிவுச் சமூகம்**

இன்றைய புரட்சியானது அறிவினால் உந்தப்படுவது. புதிதாக உருவாக்கப்படும் அறிவும் அதனைப் பயன்படுத்தும் முறைகளும் அதில் உள்ளடங்கும். அதுவே தகவல் தொழில்நுட்பமாகும். இதுவே அறிவுப்புரட்சிக்கான சக்தி வலு; இது முன்னைய புரட்சிகளின் சக்தி வலுவான நிலம், எண்ணெய், நிலக்கரியிலிருந்து ஒரு வகையில் வேறுபடுகின்றது.

முன்னைய இரண்டும் பௌதீகத் தன்மை வாய்ந்தவை. தகவல் தொழில்நுட்பம் அப்



படிப்பட்டதல்ல. எனவே நவீன பொருளாதார வளர்ச்சியானது பௌதீக வளங்களில் தங்கியிருக்கவில்லை. அறிவுப் புரட்சியானது பௌதீக வளங்களின்றி (நிலம், எண்ணெய்) பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையை சமூகத்துக்கு வழங்குகின்றது.

நிலப்பயன்பாட்டு முறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் விவசாய சமூகத்தை உருவாக்கின. எண்ணெய் வளத்தைப் பயன்படுத்தும் முறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் கைத்தொழில் சமூகத்தை எழுச்சி பெறச் செய்தன. அவ்வாறே, தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் மாற்றங்கள் அறிவுச் சமூகத்தை ஏற்படுத்த வழிவகுக்கின்றன.

இந்த அறிவுச் சமூகமானது, உலகளாவியது, புத்தாக்க சிந்தனையைக் கொண்டது. மனித அறிவைப் பயன்படுத்துவதில் தங்கியிருப்பது. உலகளாவிய அறிவை உள்வாங்குவது, சமூகமெங்கும் அதனை பரப்புவது, புதிய அறிவைத் தேவைக்கேற்ப உருவாக்குவது.

மற்றொரு அம்சம், எவ்வாறு விவசாய சமூகத்தில் நிலமும் கைத்தொழில் சமூகத்தில் எண்ணெய் வளமும் மலிவாகக் கிடைத்ததோ, அவ்வாறே அறிவுச் சமூகத்தின் தகவல் தொழில்நுட்பம் மலிவாகக் கிடைக்கின்றது. எல்லாப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துச் செல்லும்போது, இப்பொருட்களின் விலைகள் குறைந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

அறிவுச் சமூகத்தின் பொருளாதார முறை அறிவுப் பொருளாதாரம் எனப்படும். அவ்வாறே விவசாய சமூகத்தில் விவசாயப் பொருளாதாரம், கைத்தொழில் சமூகத்தில் கைத்தொழில் பொருளாதாரம் என அழைக்கப்படுகின்றது.

அறிவுப் பொருளாதாரத்தின் நவீன துறைகள், தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உற்பத்தியில் ஈடுபடுகின்றன. இதன் காரணமாக தகவல்களைச் சேமித்தல், செய்முறைக்கு உட்படுத்தல், மீட்டெடுத்தல், வழங்குதல் என்னும் பணிகளைச் செய்யும் வகையில் மனித மூளையில் ஆற்றல் விரிவுபடுத்தப்படுகின்றது. இதற்கான உதாரணங்கள்: மென்பொருள், தொலைத் தொடர்புகள், உயிரியல் தொழில்நுட்பம், பொழுதுபோக்குத்துறை என்பன. இத்துறைகளில் உற்பத்திக்கான உள்ளீடுகள் அறிவைக் களஞ்சியப்படுத்தல், ஒழுங்கமைத்தல், செய்முறைக்குள்ளாக்கல், மற்றவர்களுக்கு வழங்குதல் தொடர்பான ஆற்றலாகும்.

**பேராசிரியர் சோ. சந்திரசேகரம்**
(முன்னாள் வேந்தர், ஈ-சொப்ட் வளாகம்)

அறிவு சார்ந்த துறைகள் ஏனைய துறைகளை விடத் துரிதமாக விரிவடையக் கூடியன. எனவே இதன் காரணமாக, எழுச்சியும் சமூகத்தில் உற்பத்தியாகும் பெரும்பாலான பொருட்கள், அறிவைப் பயன்படுத்தியவையாகவே இருக்கும். அதாவது விவசாய சமூகம் அதிக உற்பத்தியை செய்தது விவசாயப் பொருட்களையாகும். அவ்வாறே கைத்தொழில் சமூகம் அதிகளவில் உற்பத்தி செய்தது கைத்தொழிற் பொருட்களையே என்றால் அறிவுச் சமூகத்தின் பொருள் உற்பத்தி பெரும்பாலும் அறிவைப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும். எனவேதான் நவீன சமூகம் அறிவுச் சமூகம் என்ற பெயரைப் பெறுகின்றது.

இதன் காரணமாக, அறிவுச் சமூகத்தில் உணவு உற்பத்தியும் இயந்திரப் பொருள் உற்பத்தியும் நடைபெறமாட்டாது எனக் கூறமுடியாது. அவ்வாறாயின் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விகிதாசாரம் மாற்றமடையும். பெருமளவிலான பொருள் உற்பத்தி அறிவுச் செறிவுடையதாக இருக்க, நிலத்தினதும் இயந்திரத்தினதும் பயன்பாடும் அவற்றின் உற்பத்தியும் விகிதாசார அடிப்படையில் குறையும்.

**அறிவின் பண்புகள்**

அறிவுச் சமூகத்தில் பொருளாதார உற்பத்திக்கான பிரதான உள்ளீடு 'மனித அறிவு' என்பதால், சமூகத்தின் நோக்கில் அறிவின் சில தனித்துவமான பண்புகளைக் குறிப்பிட வேண்டும்.

அறிவு என்பது பொதுவானது. (Public good) எனப்படும். ஏனெனில் 'அள்ள அள்ளக் குறையாது' என்பது போல், ஒருவர் தமது அறிவை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டால் அவரது அறிவு ஒன்றும் குறைந்து விடப் போவதில்லை. எனவே அறிவு என்பதைப் பயமின்றிப் பகிர்ந்து கொள்ள முடியும். பகிர்வதால் குறையாத வளம் அறிவு வளம்; ஆனால் முன்னர் ஆராயப்பட்ட நிலம், எண்ணெய், இயந்திரம் போன்ற பொருள் உற்பத்திக்கான மூல வளங்களைப் பகிரும் போது அவை நிச்சயமாகக் குறைய நேரிடும்; பகிரப்பகிரப் பற்றாக்குறை ஏற்படும். இதன் காரணமாக நிலம் முதலியன தனியாருக்குரியன (Private good) என்றும் அறிவானது 'பொதுவானது' எனப்படும். அறிவுப் புரட்சியானது, இவ்வாறான புதுவகையான உள்ளீட்டை அடிப்படையாகக் கொண்டது.

அறிவு என்பது தனியாட்களால் மட்டுமன்றி சமூகத்தினாலும் உருவாக்கப்படுகின்றது. எமது கலாசார மரபுகள் அத்தகையவை. பல்கலைக்கழகங்கள் ஒரு கல்விச்சமூகம் என்ற முறையில் அறிவை உருவாக்குகின்றன. அறிவானது சமூக ரீதியாக உருவாக்கப்படுவதை ஆராயும் துறை 'அறிவின் சமூகவியல்' எனப்படுவது. அறிவு உருவாக்கத்தின் பொருளாதார அம்சங்கள் பற்றி ஆராயும் 'அறிவின் பொருளியல்' என்ற துறை இன்னும் சரியாக வளர்ச்சி பெறாததொன்று.

மொத்தத்தில் அறிவுச் சமூகத்தில் பொருளாதார வளர்ச்சிக்கு மையப் பொருளாக அமைவது இயந்திரமும் நிலமும் அன்று அறிவானது மனிதனையே மையப் பொருளாகவும் காரணமாகவும் ஆக்கி, அவனுக்கு ஒரு புதிய அந்தஸ்தை வழங்கியுள்ளது.

# பக்தியின் இலக்கணம்

**பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் பிறந்த தினத்தையொட்டி, அவரது அருளுரையின் தொகுப்பு**

பக்தி என்னும் உணர்வுபூர்வமான செயற்பாடு மிகுந்த இனிமையானது, இதமூட்டுவது, புத்துணர்ச்சி அளிப்பது.

பக்தி பொறுமை மிக்கதும் உறுதி வாய்ந்ததுமாகும்.

ஒரு பக்தனானவன், மற்றுமொரு பக்தன் தன்னைவிட, ஏதாவதொன்றில் மேலானவனாய் இருக்கின்றானே என்று ஒரு நாளும் நினைப்பதோ வருந்துவதோ இல்லை.

அவன், 'அனைத்துமானவனும் அனைத்தும் அறிந்தவனுமான எல்லாவற்றிலும் மேலான பரம்பொருள், எதை எப்போது எப்படிச் செய்ய வேண்டும் என்பதை அறிவான்' என்று, உறுதியான நம்பிக்கையுடன் கர்வமற்ற, எளிமையான சுபாவத்துடன் இருப்பவன் ஆவான்.

ஒரு உண்மையான பக்தன் தனது குறைகளை இறைவனிடம் மட்டுமே பேசுவான். ஒரு மனிதனால் எவ்வாறு இன்னொரு மனிதனின் குறைபாடுகளை தீர்த்து வைக்க முடியும்? அதாவது, 'மனிதன்' குறைபாடு கொண்டவனே ஆவான்.

இறைவனிடத்தில் முழுமையான நம்பிக்கை கொண்டவனே இறைவனை அனுபவிக்கத் தகுதி உடையவனாகின்றான்.

ஸ்தூல உடலானது எப்பொழுதும் சத்சங்கத்தில் அமிழ்ந்திருக்க வேண்டும். எண்ணங்களும் உணர்ச்சிகளும் இடைவிடாது இறைவன் மகிமையிலேயே அமிழ்ந்திருக்க வேண்டும்.

இதுவே ஒரு உண்மையான பக்தனின் அடையாளமாகும்.

எவனொருவன் தனது கவலைகளைச் சப்தமிட்டு உறுதிப்படுத்தி விளம்பரப்படுத்துகின்றானோ, அவன், வெறுமனே மற்றையவரின் அனுதாபத்தைப் பெறவே முயற்சி செய்கின்றான். அவன் உண்மையான பக்தன் அல்ல.

இத்தகையவர்கள், இறைவன் மீது ஆர்வமிக்கவர்களின் நம்பிக்கையையும் இழக்கச் செய்கின்றனர். ஒரு பக்தனானவன், இவ்வாறு ஒழுகும் போது ஒரு ஆர்வலன் தன்னை இப்பக்தனைவிட மேலானவனாக நினைப்பதற்கு வழிவகுக்கின்றான்.



ஒரு பக்தனானவன், நேரானதும் உறுதியானதும் எந்தவித பின்னடைப்புக்களோ, பாதியில் நிறுத்திக் கொள்ளும் இயல்போ எண்ணமோ அற்றவனாய், தொடர்ந்து உயர்ந்து மேலேறும் ஒரு மலையின் உச்சியை அடைய நடை போடுபவனாய் இருக்க வேண்டியது ஒரு பாரிய கடமை ஆகும்.

உனது கடமைகள் ஏனையோரின் கடமைகளை விட மிக மிக அதிகமாக இருக்கலாம். அவ்வாறிருந்தால், நீயே மிகுந்த அதிர்ஷ்டசாலி ஆவாய்.

இதயபூர்வமாக விரும்பி அனுபவித்தவற்றை நாவால் மறுக்காதே. உனது, உண்மையாக அனுபவித்த, உணர்ந்த அனுபவங்களுக்குப் பொய் சாட்சியம் சொல்ல முயலாதே.

ஒரு உண்மையான பக்தனால் இறைவனை எந்த இடத்திலும், எந்த வடிவத்திலும் மிக இலகுவாகக் கண்டு கொள்ளலாம். ஆனால், இறைவனால் ஒரு உண்மையான பக்தனை இலகுவில் கண்டு கொள்ள முடியாது.

ஆம்! அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட பரிபூரண சரணாகதி அடைந்த ஒரு பக்தனைக் காண்பது என்பது அரிது.

தனது சுவாசத்தைப் போன்றே, இடைவிடாது, இறைவனது நாமத்தை உச்சரிக்கும் பக்தன் ஒருவன், தனது உண்மையான பக்தியினூடே இவ்வாறான ஒரு நிலையை அடைகின்றான், அடைவான்.

இதுவே ஒரு பக்தனுக்குரிய ஆன்மிகப் பயிற்சியும் தியானமுமாகும்.

இவ்வாறு இறைவன் நாமத்தை உச்சரிக்கும்போது, அமிர்தமானது, நாவில் ஒரு துளியாக அல்ல, பக்தனையே முழுமையாக அமிர்தத்தில் அமிழ்த்திவிடும்.

பிரச்சினைகள், ஆபத்துக்கள், மரணங்கள் என்பன வாழ்க்கையில் தவிர்க்க முடியாத காரணிகள் ஆகும். இவற்றுடன் தைரியமாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

இடைவிடாத பிரார்த்தனை மூலமே இந்நிலையை அடைய வேண்டும்.

உனது இதயம், எண்ணங்கள், உணர்ச்சிகள், உணர்வுகள், பேச்சு எல்லாவற்றையும் தூய்மைப்படுத்துவதன் மூலம், உனது பெறுமதி மிக்க கனத்தாக்கங்களை வலுப் பெறச் செய்வாயாக.

இச்செயற்பாடு எந்தவித சூழ்நிலையிலும் உன்னை உறுதியாக வைத்திருக்கும்.

உனது உறுதிப்பாடு நிலை குலைக்கப்படமாட்டாது என்பது திண்ணம்.

துன்பத்தின் போது, 'எம்மைச் சரியான பாதையில் வழி நடத்துவாயாக' எனப் பிரார்த்திப்பாயாக.

மனிதர்களால், தமது அறிவிற்கு எட்டக்கூடிய வகையில், உனக்கு ஆலோசனைகள் தர முடியும். ஆனால், இறைவனோ உனது புத்தியினுள் மறைந்துள்ள அறியாமையை அகற்றி, ஒளி பெறச் செய்து, நீயே உனது பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளக்கூடிய வல்லமையைத் தருகின்றார்.

பொறுமையைக் கைப்பிடித்து பிரார்த்தனையோடு பொறுத்திரு.

'பிரார்த்தனை' 'முடியாததை' 'முடியும்' என நிரூபித்துக் காட்டும்.

இறைவனின் மகிமையைப் பேசு!
இறைநாமத்தினை இதயத்தின் அகத்தே
இடைவிடாது உச்சரிப்பாயாக!
இன்னல்கள் மறையும்!
இஷ்டங்கள் நிறைவேறும்!

–திருமதி. இராஜினி தேவராஜன்

# யாழ்.மாவட்டத்தில் 66 மில்லியன் ரூபா செலவில் 15 மைதானங்கள் புனரமைப்பு

(வடமராட்சி நிருபர்)

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் சிபாரிசுக்கு அமைவாக யாழ் மாவட்டத்தில் 66மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் 15 விளையாட்டு மைதானங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் நாடு முழுவதும் 200பொது விளையாட்டு மைதானங்களை புனரமைக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் அங்கஜன் எம்.பியின் சிபாரிசில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரான்பற்று கலைமகள் வித்தியாலய மைதானம், நல்லூரர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஆவரங்கால் கிழக்கு வீனஸ் விளையாட்டுக் கழக மைதானம், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சென்.மேரி விளையாட்டுக் கழக மைதானம், தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் வடக்கு கண்ணகை விளையாட்டுக் கழக மைதானம், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொய்ன்ஸ் விளையாட்டுக் கழக மைதானம், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அன்ரனிபுரம் விண்மீன் விளையாட்டுக் கழக மைதானம், காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட யாழ்ற்றன் கல்லூரி மைதானம் மற்றும் ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புனித அந்தோனியார் கல்லூரி மைதானம் ஆகிய பத்து பொது விளையாட்டு மைதானங்கள் தலா 5 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்படுகின்றன.

அதேவேளையில் நாடு முழுவதும் அனைத்துக் கல்வி வலயங்களையும் உள்ளடக்கி 100பாடசாலை விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்யும் தேசிய திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் அங்கஜன் எம்.பியின் சிபாரிசில் 16மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் 5பாடசாலை மைதானங்கள் புனரமைக்கப்படுகின்றன.

யாழ்ப்பாண கல்வி வலயத்திற்குட்பட்ட நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானம், தென்மராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட வரணி மத்திய கல்லூரி மைதானம்,வடமராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானம், வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி மைதானம் மற்றும் தீவக கல்வி வலயத்திற்குட்பட்ட புங்குடுதீவு மகா வித்தியாலய மைதானம் ஆகிய 5 பாடசாலை மைதானங்களே தலா 3.2மில்லியன் ஒதுக்கீட்டில் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் குறித்த மைதான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் யாழ். மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் பிரத்தியேக செயலாளர் ச.இராமநாதனினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# காணாமல்போனவர்கள் தொடர்பில் தகவல்களை சேகரிக்கும் ஓ.எம்.பி.

## உறவினர்களுக்கு கடிதங்கள் அனுப்பிவைப்பு

ஓமந்தை.

காணாமல்போனவர்கள் தொடர்பில் கிடைத்துள்ள முறைப்பாடுகளுடன் தொடர்புடைய மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்வதற்காக தங்களிடமுள்ள மேலதிக விபரங்களை வழங்குமாறு ஓ.எம்.பி. அலுவலகத்தினால் காணாமல்போனோரின் உறவுகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில், உங்களால் எமது நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளோம். இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கு முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள போதிய தகவல்கள் போதுமானதாக இல்லாமையால் குறித்த காணாமல்போன நபர் தொடர்பில் உங்கள் வசமுள்ள ஆவணங்களின் பிரதிகளையும் வேறு தகவல்கள் இருப்பின் அவற்றையும் தாமதமின்றி மேற்படி முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள சரிபார்ப்பு பட்டியலின்படி உங்களால் இது வரை அனுப்பி வைக்கப்படாதுள்ள ஆவணங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், குறித்த கடிதத்தில் அடையாளம் இடப்பட்டுள்ள ஆவணங்களின் பிரதிகள் தம்மிடம் உள்ளதோடு அடையாளம் இடப்படாத ஆவணங்களின் பிரதிகளை மாத்திரம் தமது முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாத்தறை சிறைச்சாலையிலுள்ள தமிழ் கைதியை கொழும்புக்கு மாற்றுங்கள்

## நேரில் சென்று பார்வையிட்ட பின் கஜேந்திரகுமார் எம்.பி. கோரிக்கை

ஓமந்தை

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஒரே ஒரு கைதி மாத்தறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரை கொழும்பு மகசின் சிறைச்சாலைக்கு மாற்றுமாறு அவர் கோரிக்கை முன்வைத்துள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.



மாத்தறை சிறைச்சாலைக்கு சென்று பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள த.நிமலன் என்ற கைதியை பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் நேற்று முன்தினம் பார்வையிட்டனர். இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள வவுனியாவைச் சேர்ந்த தங்கவேல் நிமலன் என்பவரை மாத்தறை சிறைச்சாலையில் பார்வையிட்டு பேசியிருந்தோம். அவர் சார்ந்த வழக்கில் 3 சந்தேகநபர்கள் இருக்கும் நிலையில் அவரை மட்டும் தனிமைப்படுத்தி மாத்தறை சிறைச்சாலையில் தடுப்பில் வைத்துள்ளார்கள். ஏனைய இருவரும் கொழும்பு மகசின் சிறைச்சாலை யில் இருக்கின்றார்கள்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் அவர் மட்டுமே மாத்தறை சிறைச்சாலையில் உள்ளார். ஒரே ஒரு தமிழ் கைதியாகவும் இச்சிறைச்சாலையில் அவரே உள்ளார். அவருக்கு மொழி சார்ந்த வசதிகளும் குறைவாக உள்ள நிலையில் அவர் எம்மிடம் அவசர கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஏனையவர்களை தடுத்து வைத்துள்ள சிறைச்சாலைகளில் தன்னையும் சேர்த்துக் கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார். அது சம்பந்தமாக நாங்கள் நீதிய மைச்சர் அலி சப்ரியுடன் பேசுவோம். அத்துடன், கைதிகளை விடுவிப்பதற்குரிய அழுத்தங்களை நாம் தொடர்ந்தும் கொடுப்போம். அதேசமயம் அது நிறைவேறும் வரை இந்த கைதிகளை அவர்களது சொந்த மாவட்டத்திலுள்ள சிறைச்சாலைகளுக்கு மாற்றுமாறு கோரிக்கையையும் முன்வைத்துள்ளோம். தொடர்ச்சியாக இந்த வரவு, செலவுத் திட்டக் காலப் பகுதியில் கூட உரிய அமைச்சுக்கு கீழ்வரக்கூடிய விடயங்களை வலியுறுத்துவோம் என்பதையும் அவருக்கு தெரிவித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

# மூத்த ஊடகவியலாளர் கானமயில்நாதன் காலமானார்



(வடமராட்சி நிருபர்)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் மூத்த ஊடகவியலாளருமான ம.வ.கானமயில்நாதன் நேற்று திங்கட்கிழமை அதிகாலை யாழ்ப்பாணத்தில் காலமானார்

வட்டுக்கோட்டை மேற்கை பிறப்பிடமாகக் கொண்ட அவர் இறக்கும் போது வயது 79 ஆகும். 1964 ஆம் ஆண்டு யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் பொறியியல் பிரிவில் கற்றுக்கொண்டிருந்தவேளை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்துகொண்டிருந்த ஈழநாடு தினசரியில ஆசிரிய பீடத்தில இரவு நேரப்பணியில ஈடுபட்டு பத்திரிகைத்துறையில் அறிமுகமானார்.

1966 இல கொழும்பில் புதிதாக உருவான சுயாதீன பத்திரிகை சமாசத்தின் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளில உதவி ஆசிரியராக இணைந்துகொண்டார். இந்நிறுவனத்தில மிகக் குறுகிய காலங்களில பிரதம உதவி செய்தி ஆசியராகவும், செய்தி ஆசிரியராகவும் பதவி நிலைக்கு உயர்ந்தார். 1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்துடன் தினபதி நிறுவனத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்த இவர் வீரகேசரி நிறுவனத்தின் யாழ். கிளை அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்ட செய்திப் பிரிவுக்கு பொறுப்பாக நியமனம் பெற்றிருந்தார்.

அதன் பின்னர் 1985 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட உதயன் நாளிதழின் பிரதம ஆசிரியராகப் பொறுப்பேற்று 35 ஆண்டுகளுக்கு மேலாகப்பணியாற்றியிருந்தார். அதேவேளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட காலைக்கதிர் பத்திரிகையிலும் சில ஆண்டுகள் பிரதம ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்று நாவலர் வீதியிலுள்ள தனது இல்லத்தில வாழ்ந்து வந்த வேளை இயற்கை எய்தினர். அவரது இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு செய்திகள்

# பருத்தித்துறையில் விபத்து இளைஞர் உயிரிழப்பு

(வடமராட்சி நிருபர்)

புலோலி, மந்திகை சாரையடிப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணியளவில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் அல்வாய், அத்தாயைச் சேர்ந்த கண்ணன் காந்தன் (22 வயது) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

பருத்தித்துறை பிரதான வீதியில், மந்திகை பக்கத்திலிருந்து வந்த மோட்டார் சைக்கிளும் பருத்தித்துறைப் பக்கத்திலிருந்து வந்த மோட்டார் சைக்கிளும் நேர் எதிரே மோதி விபத்துக்குள்ளானதாக கூறப்படுகிறது. இதில் மூவர் படுகாயம் அடைந்து அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட போது குறித்த இளைஞர் உயிரிழந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது. படுகாயங்களுக்குள்ளான ஏனைய இருவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# பிறந்து 10 நாட்களான குழந்தை உட்பட 14 பேருக்குத் தொற்று

(வடமராட்சி நிருபர்)

பிறந்து 10 நாட்களேயான பச்சிளம் குழந்தை உட்பட 14 பேர் வட மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 212 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட மருத்துவமனையில் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டுள்ள பிறந்து 10 நாட்களேயான பெண் குழந்தை உட்பட இருவரும், செட்டிகுளம் பிரதேச மருத்துவமனையில் இருவரும், மன்னார் மருத்துவமனையில் 4 பேரும் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டனர். முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் 03 பேரும், மல்லாவி ஆதார மருத்துவமனையில் ஒருவர் என முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 பேரும், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் ஒருவரும், ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலையில் ஒருவரும் உறுதி செய்யப்பட்டுள்ளனர்.



வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலய கந்தசஷ்டி உற்சவத்தில் இடம்பெற்ற சூரசங்காரம் மற்றும் திருக்கல்யாணம் நிகழ்வுகளைப் படங்களில் காணலாம். (படப்பிடிப்பு : ஜே.சுஜீவகுமார்)

# பொதுஜன பெரமுனவின் கூச்சல்களை கவனத்தில் கொள்ள வேண்டியதில்லை

## இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

(எம்.மனோசித்ரா)

வீதி சமிஞ்ஞைகளைப் போன்று நாட்டில் இடம்பெறும் அனைத்து செயற்பாடுகளுக்கும் கைகளை உயர்த்த வேண்டிய தேவை எமக்கு கிடையாது. சுதந்திர கட்சி அனைத்து சந்தர்ப்பங்களிலும் மக்களின் சார்பாகவே தீர்மானங்களை எடுக்கிறது. இதனை எதிர்க்கும் வகையில் பொதுஜன பெரமுனவில் எமக்கு எதிராக கூச்சலிட்டுக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் நாம் கவனத்தில் கொள்வதில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்திற்கான புதிய தொகுதி அமைப்பாளர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை நேற்று திங்கட்கிழமை சு.க. தலைமையகத்தில் இடம்பெற்றது. இதன்போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கட்சியாக தனித்து பயணிப்பதற்காக நாம் இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. கட்சியை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கூட்டணியில் இருப்பதற்காக கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்காமலிருக்க முடியாது. காரணம் ஏனையவர்களின் வாக்குகளை நம்பிக் கொண்டிருக்க முடியாது. எமது வாக்குகளை நாம் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

பொதுஜன பெரமுனவிலுள்ள சிலர் வெளியிடும் கருத்துக்களை நாம் கவனத்தில் கொள்வதில்லை. காரணம் நாம் அவர்களுடன் பேசி கூட்டணியமைக்கவில்லை. உரிய நேரத்தில் நாம் உரிய தீர்மானங்களை எடுப்போம். கூச்சலிடுபவர்கள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அதனை மாத்திரமே செய்து கொண்டிருப்பர். ஆனால் அறிவுடைய மக்கள் எமது தீர்மானம் சரியானதா தவறானதா என்பதை நன்கு அறிவர்.

வீதி சமிக்ஞைகளைப் போன்று நாட்டில் இடம்பெறும் அனைத்து செயற்பாடுகளுக்கும் கைகளை உயர்த்த வேண்டிய தேவை எமக்கு கிடையாது. எனவே எமது செயற்பாடுகளை நாம் தொடர்ந்தும் முன்கொண்டு செல்வோம். வரவு, செலவு திட்டத்தில் காணப்படுகின்ற சிக்கல்கள் தொடர்பில் ஆரம்பத்திலிருந்தே நாம் எமது நிலைப்பாட்டினை தெரிவித்திருந்தோம்.

இந்த வரவு, செலவு திட்டத்தை விடுத்து பிறிதொரு வரவு, செலவு திட்டத்தை யாரேனும் ஒருவரால் சமர்ப்பிக்க முடியுமாயின் அதனை செய்ய முடியும். எவ்வாறிருப்பினும் தற்போதுள்ள நிலைமையில் நாம் அனைவரும் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளோம். எனவே பொருளாதாரத்தை உற்பத்தி பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டம் இந்த வரவு, செலவு திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே நாம் அதனை ஆதரிப்போம். சுதந்திர கட்சி மக்களின் சார்பாகவே தீர்மானங்களை எடுக்கிறது என்பதை அவர்கள் அறிவர் என்றார்.

# தாக்குதலுக்கு நீதி வழங்கவே அருட்தந்தைக்கு அழைப்பு

## பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ கூறுகிறார்

(எம்.மனோசித்ரா)

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு துரிதமாக நீதியை நிலைநாட்டுவதற்காகவே அருட்தந்தை சிறில் காமினியிடம் உள்ள தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக அவர் குற்ற விசாரணைப் பிரிவிற்கு அழைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில், அருட்தந்தை சிறில் காமினிக்கு தெரிந்த தகவல்கள் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக அவர் இதற்கு முன்னர் இரு சந்தர்ப்பங்களில் குற்ற விசாரணைப் பிரிவிற்கு அழைக்கப்பட்டார். அதேபோன்று நேற்றைய தினமும் குற்ற விசாரணைப்பிரிவில் முன்னிலையாகுமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த அறிவிப்பு தொடர்பில் வெவ்வேறு தரப்பினரும் பல்வேறுபட்ட கருத்துக்களை வெளியிடுகின்றனர். கடந்த ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி தேசிய மற்றும் சர்வதேச மக்கள் மத்தியில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான திட்டமிடல் மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல்கள் பல தன்வசம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவிற்கு முறைப்பாடொன்று கிடைக்கப் பெற்றிருந்தது. அந்த முறைப்பாட்டுக்கமையவே அவர் குற்ற விசாரணைப் பிரிவிற்கு அழைக்கப்பட்டார்.

எவ்வாறிருப்பினும் இது தொடர்பில் பலர் திரிபுபடுத்தப்பட்ட கருத்துக்களை வெளியிடுவதோடு, பொலிஸார் மற்றும் குற்ற விசாரணைப் பிரிவினரால் அருட்தந்தை சிறில் காமினி கைது செய்யப்படவுள்ளதாகவும், அசௌகரியத்திற்கு உள்ளாக்குவதாகவும் கூறுகின்றனர். எவ்வாறிருப்பினும் அருட்தந்தை சிறில் காமினியிடமுள்ள முக்கியத்துவமுடைய தகவல்களைப் பெற்று, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுப்பதே பொலிஸாரினதும், குற்ற விசாரணைப் பிரிவினரதும் இலக்காகும்.

அதற்காகவே நீதிமன்றத்தில் இடம்பெற்று வரும் வழக்கு விசாரணைகள் மற்றும் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய இடம்பெற்றுவரும் விசாரணைகள் என்பனவற்றுக்காக அருட்தந்தையிடமுள்ள தகவல்களை கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கமைய கடந்த 17 ஆம் திகதி அவரை குற்ற விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அன்றைய தினம் தன்னால் முன்னிலையாக முடியாது என்றும் 22 ஆம் திகதி குற்ற புலனாய்வு திணைக்களத்திற்கு வருவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

அதற்கமைய குற்ற விசாரணைப் பிரிவில் தகவல்களை பாதிக்கப்பட்டவர்களுக்கு துரிதமாக நியாயத்தை வழங்குவதற்கு அருட்தந்தை ஒத்துழைப்பு வழங்குவார் என்று எதிர்பார்க்கின்றோம் என்றார்.

# அமைச்சர் ஜோன்ஸ்டனை சந்தித்த புதிய ஜப்பானியத் தூதுவர்

இலங்கைக்கான புதிய ஜப்பானியத் தூதுவராக அண்மையில் நியமிக்கப்பட்ட மிசு கோஷி ஹிட்டயாகே, ஆளும் கட்சியின் முதற்கோலாசான், நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாந்து அவர்களை நேற்று பாராளுமன்றத்தில் சந்தித்தார்.

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்புக்கள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. இச்சந்திப்பில் ஜப்பானியத் தூதரகத்தின் பிரதித் தலைவர் கட்சுகி கோட்டரோ, பொருளாதாரப் பிரிவின் தலைவரும், முதலாவது செயலாளருமான திருமதி.ஹோஷியாம் சிஹாரு மற்றும் இரண்டாவது செயலாளர் முரகாமி தகாஷி ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.



# சாதனைகளுக்கு புதிய தரங்களை நிர்ணயித்தோம்

## MDRT 2019 மற்றும் 2020 மாநாட்டில் பங்கேற்க அதிசிறப்பாக செயற்பட்டு தகுதி பெற்றுள்ள எமது 111 காப்புறுதித் துறைசார் நிபுணர்களை அறிமுகப்படுத்துவதில் ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் பெருமையடைகின்றது

### 2020 MDRT COURT OF THE TABLE வெற்றியாளர்கள்
(மற்றும் 2019 MDRT வெற்றியாளர்கள் )


ஆயுள் அங்கத்தவர்
திரு.எம்.எஸ்.எஸ்.கே. நவரத்ன
பிரதான கிளை கண்டி


திரு.டபிள்யூ.எஸ். லக்மால்
கம்பஹா


திரு. ஆர்.ஆர். துஷார ரத்நாயக்க
ஹிங்குரங்கொட


திரு. சி. குமசிங்க
நீர்கொழும்பு
2019 மற்றும் 2020


திரு. யு.பி.எஸ். பெரேரா
நீர்கொழும்பு
2019 மற்றும் 2020


திரு.ரீ.டபிள்யூ.எம்.எஸ்.எல். விரசிங்க
பத்தரமுல்ல
2019 மற்றும் 2020


திரு. கே. சுதர்சன்
வவுனியா
2019 மற்றும் 2020

### ஆயுள் அங்கத்தவர்கள்


திரு.டபிள்யூ.கே.டபிள்யூ. ஜெயமோகன்
பம்பலப்பிட்டி
2019 மற்றும் 2020


திரு. என்.ஜீ.டி. நிஸ்சங்க
நகர அலுவலகம்
2019 மற்றும் 2020


திரு. ஜீ.ஏ.ஏ. பியரத்ன
குளியாபிட்டிய
2019 மற்றும் 2020


திரு. என். நாகராஜா
யாழ்ப்பாணம்
2019 மற்றும் 2020


திரு. கே.என். இந்திக
கொழும்பு மெட்ரோ 03
2019 மற்றும் 2020


திரு. கே. கிருஷ்ணபவன்
யாழ்ப்பாணம்
2019 மற்றும் 2020


திரு. கே. திஷன்
சாவகச்சேரி
2019 மற்றும் 2020


திரு. எச்.ஜீ.எல்.கே. விக்ரம
கட்டுகஸ்தோட்டை
2019 மற்றும் 2020


திருமதி. எஸ். அரிகரன்
யாழ்ப்பாணம்
2019 மற்றும் 2020


திரு. சி.எம். அரசரத்னம்
மட்டக்களப்பு
2019 மற்றும் 2020


திருமதி. எஸ். சக்திமாலினி
யாழ்ப்பாணம்
2019 மற்றும் 2020


திரு. எம். ரவி
மன்னார்
2019 மற்றும் 2020


திரு. வி. இளங்கோ
பம்பலப்பிட்டி
2019 மற்றும் 2020


திரு. ஏ.எம். நிரோஷ்த ஜயதிலக
கட்டுகஸ்தோட்டை
2019 மற்றும் 2020


திரு. கே.எம்.எச்.எஸ். பண்டார
கம்பஹா
2019 மற்றும் 2020


திரு. ரீ.ஏ. பீ. தபாபண்டார
வரகாபொல
2019 மற்றும் 2020


திரு. கே. காமினி
மாத்தறை
2019 மற்றும் 2020


திரு. டபிள்யூ.எம். அனுரகுமார
வெள்ளவாய
2019 மற்றும் 2020


திரு. எச்.எம்.கே.சீ. ஹேரத்
திகன
2019 மற்றும் 2020


திரு. எச்.எம்.என். குணவன்ச
வெள்ளவாய
2019 மற்றும் 2020


திரு. ஏ.எம்.பீ.டபிள்யூ. அபேரத்ன
திகன
2019 மற்றும் 2020


திரு. கே.ஜீ.ஆர். விமலரத்ன
அம்பாறை
2019 மற்றும் 2020


திரு. ஆர்.கே.எஸ். பிரேமதிலக
மொனராகலை
2019 மற்றும் 2020


திரு. ஜீ.கே.சீ.பீ. குமார
பத்தேகம
2019 மற்றும் 2020

MDRT
The Premier Association of Financial Professionals®

இவர்கள் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸின் அதிதிறமை
உலகின் முன்னணி சாதனையாளர்களுக்கு ம

Company Register Number: PB289



திரு. டபிள்யூ.எம்.என். வீரசூரிய
குருநாகல் பிரதான கிளை
2019 மற்றும் 2020

திரு. ஆர்.எம்.ஏ.கே. ரத்நாயக்க
ஹோமாகம
2019 மற்றும் 2020

திரு. டபிள்யூ.எல். திந்திகஹவெல
புத்தளம்
2019 மற்றும் 2020

செல்வி. ஜெ. ஜெசிந்தா
சாவகச்சேரி
2019 மற்றும் 2020

திரு. எஸ்.ஜீ. விஜேசூரிய
கிரியுல்ல
2019 மற்றும் 2020

திரு. எஸ்.ஏ. செல்ஜோன்
பம்பலப்பிட்டி
2019 மற்றும் 2020

செல்வி ஏ.எம்.ரீ.எம். விமலகே
வங்கிக் காப்புறுதி - ஆயுள்
2019 மற்றும் 2020

திரு.எச்.ஏ.சீ. ஜயசிங்க
மாத்தறை
2020



திரு. எம்.எஸ். குணரத்னம்
வவுனியா
2020

திருமதி. டீ.ஜீ.எஸ். சங்கா குமாரி
வரகாபொல
2020

திரு. வை. பிரசன்ன
யாழ்ப்பாணம்
2020

திருமதி. எஸ்.எச். ஜெயவர்தன
பெலியத்த
2020

செல்வி. எச்.கே.டி.எஸ்.ஆர். கீர்த்தி
நுகேகொடை
2020

திருமதி. எஸ்.எச்.எஸ். பிரியந்தி
மாத்தறை
2019 மற்றும் 2020

திருமதி. ஜே.எச்.வீ.எல். வதீசூரிய
கண்டி பிரதான கிளை
2019 மற்றும் 2020

திரு. எஸ்.எஸ். சுகதபால
கொழும்பு மெட்ரோ 04
2020



திரு. ஜே.ஏ. நிருஷாந்த
பாணந்துறை
2020

திரு. எச்.டீ.டி.ஏ.ஏ. கொடிப்பிட்டிய
நுகேகொடை
2020

திரு. வீ. நந்தகுமார்
யாழ்ப்பாணம்
2020

திரு. டபிள்யூ.ஜீ.எம். பிரியதர்ஷன
மாத்தறை
2020

திரு. ரீ. வாசுதேவன்
கல்முனை
2020

திருமதி. கே.எம்.டி.எல்.ஏ. ஜீவந்தி
களுத்துறை
2020

திரு. பீ.கே.பீ.ஜே.பீ. குமார
பலாங்கொடை
2020

திரு. பீ. ரமேஷ்
கிளிநொச்சி
2020



திரு. எம்.வை.டி. பிரியந்த
மாத்தறை
2020

திரு. ஐ.டி.பீ.ஏ. பெர்னாண்டோ
கந்தான
2020

திரு. டபிள்யூ.ஜீ.எம்.எல். விஜயந்த
குருநாகல் பிரதான கிளை
2020

திருமதி. வை.ஏ.ஜீ.எஸ்.ஜீ. விஜயரத்ன
நகர அலுவலகம்
2020

திரு. டி.கே.எஸ். பியசிறி
கேகாலை
2020

திரு.டபிள்யூ.எம்.எம்.கே. விக்ரமசிங்க
பதுளை
2020

திரு. ஏ. ஆதரன்
சாவகச்சேரி
2020

திரு. கே. கிருஷ்ணமூர்த்தி
திருகோணமலை
2020



திரு. ஜீ.டபிள்யூ. சமரசிங்க
கிரிபத்கொடை
2020

திரு. எஸ். கஜேந்திரன்
கிளிநொச்சி
2020

திரு. எஸ்.எஸ். ஜஸ்டின்
வவுனியா
2020

திரு. எம். தவசீலன்
கல்முனை
2020

திரு. ஜீ.ஏ.சீ. கணேபொல
கம்பஹா
2020

திரு. சீ. மாதாராச்சி
அலுத்கம
2020

திரு. ஜே.எம்.என்.என். பண்டார
வெள்ளவாய
2020

திருமதி. எச்.பீ.ஜ.எல். விஜேரத்ன
வரக்காபொல
2020



திரு. பீ.கே.வை. எடிலாத்
புறக்கோட்டை
2020

திரு. எல்.ஜீ.எஸ்.பீ. பெரேரா
நுகேகொடை
2020

திரு. ஏ.எம்.பீ.பீ. அலஹகோன்
கண்டி பிரதான கிளை
2020

திருமதி. எம்.ஜீ.எச்.கே. குணதுங்க
மஹியங்கனை
2020

திரு. எம்.ஜீ.டி. சமிந்த
கந்தானை
2020

திரு. ம. சிந்துஜன்
முல்லைத்தீவு
2020

திரு. எச்.எம்.கே. ஜயகொடி
நாரம்மல
2020

திரு. ரீ. சிவராஜன்
கல்முனை
2020



திரு. டபிள்யூ.எம்.ஆர்.ஜீ.டீ. விஜேசிங்க
கண்டி பிரதான கிளை
2020

திரு. ஆர்.எம்.எஸ்.எம். சேனவிரத்ன
நகர அலுவலகம்
2020

திரு. கே.எல். கொதுபண்டா
ஆனைமடு
2020

திரு. டபிள்யூ.எம்.எச்.பீ. கருணாதாச
வெலிகம
2020

திரு. டபிள்யூ.டி. விமலகே
மாத்தளை
2020

திரு. எஸ். ஜதீசேன்
சாவகச்சேரி
2020

திரு. எம்.பீ.பீ. பெர்னாண்டோ
மஹரகம
2019

திரு. எம்.எச்.ஜீ. ஜயலத்
அத்துருகிரிய
2019



திருமதி. எல்.டி.எம்.எல். சேனவிரத்ன
கேகாலை
2019

திரு. எம்.ஏ.டி.கே. சந்திரரத்ன
அலுத்கம
2019

திரு. பீ.டி. ஜயதுங்க
ஹொரணை
2019

திரு. எல்.ஏ.டி.கே. விமலரத்ன
கம்பஹா
2019

திருமதி. கே.எம்.ஜீ.எல். பிரதர்ஷனி
பெலியத்த
2019

திரு. ஏ.எச்.வீ. அகில பிரசாத்
கிரிபத்கொடை
2019

திரு. எல்.கே. லக்ஷ்மன்
கிரிபத்கொடை
2019

திரு. தி. சுதர்ஷன்
யாழ்ப்பாணம்
2019



திரு. எச்.எம்.பீ. பண்டார
கழக உறுப்பினர்கள்
2019

திரு. கை. சஜீவ்
யாழ்ப்பாணம்
2019

திரு. டபிள்யூ.டி.ஆர்.எம். ஜயநாயக்க
பாணந்துறை
2019

திரு. சு.எம்.எஸ். அபேரத்ன
மாத்தறை
2019

திரு. பீ.ஏ. குணசிறி பெரேரா
நகர அலுவலகம்
2019

திரு. [illegible]
மாவனெல்ல
2019

திருமதி. கே. ரஜனி
யாழ்ப்பாணம்
2019

திருமதி. டபிள்யூ.எம்.சீ. செவ்வந்தி
வெலிகம
2019



திரு. கே.எம்.டபிள்யூ. பண்டார
கண்டி பிரதான கிளை
2019

திரு. எச்.எம்.எஸ்.எம். ஹேரத்
புத்தளம்
2019

திரு. எச்.ஜீ.ஆர்.பீ. பண்டார
நீர்கொழும்பு
2019

திரு. ஜீ. நிர்மலதுஜன்
யாழ்ப்பாணம்
2019

திரு. டீ.எச்.எச். விதானகே
மஹரகம
2019

திரு. கே.எல்.எல். நாமல்
கேகாலை
2019

திரு. டபிள்யூ.ஏ.எல். சமந்த்
இரத்மலானை
2019

திரு. ம. பிரதீஸ்
முல்லைத்தீவு
2019

மற்றும் உச்ச சாதனையாளர்களாக திகழ்வதுடன்,
த்தியில் புதிய தரங்களை நிர்ணயித்துள்ளனர்.

SLIC
ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

## உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள்:

# பூஜித், ஹேமசிறியின் வழக்குகள் இன்று முதல் விசாரணைக்கு

### முதல் சாட்சியாளராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன

(எம்.எப்.எம்.பஸீர்)

உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை தடுப்பதற்கு அல்லது அதன் தாக்கங்களை குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் குற்றவியல் பொறுப்புச் சாட்டப்பட்டு, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக தனித்தனியாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இரு வழக்குகளின் சாட்சி விசாரணைகளும் இன்று முதல் இடம்பெறவுள்ளன.

இந்த விவகாரத்தில் தொடரப்பட்டுள்ள வழக்குகளை விசாரிக்க விஷேட ட்ரயல் அட்பார் நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று குறித்த வழக்குகள் கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்லே தலைமையிலான மேல் நீதிமன்றின் ஆதித்ய பட்டபெந்திகே மற்றும் மொஹம்மட் இஸ்ஸதீன் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று முற்பகலும் பிற்பகலுமாக விசாரணைக்கு வந்தன. இதன்போது இருவருக்கும் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் திறந்த மன்றில் வாசித்துக்காட்டப்பட்டன. எனினும் அவர்கள் இருவரும் அந்த குற்றச்சாட்டுக்களை நிராகரித்ததுடன் தாம் சுற்றவாளிகள் என அறிவித்தனர். இதனையடுத்தே இன்று (23) முதல் சாட்சி விசாரணைகளுக்கு தீர்மானிக்கப்பட்டது.

#### பூஜித்தின் வழக்கு

முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிரான வழக்கு முதலில் நேற்று முற்பகல் விசாரணைக்கு வந்தது. 855 குற்றச்சாட்டுக்கள் அடங்கிய குற்றப்பத்திரிகை விசேட மேல் நீதிமன்றத்தில் இதன்போது வாசித்துக் காட்டப்பட்டது.

நீதிபதிகள் குழாமின் உத்தரவின் பிரகாரம் மேல் நீதிமன்றத்தின் மொழிபெயர்ப்பாளரினால் சுமார் ஒரு மணித்தியாலமாக குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டதுடன் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் தாம் நிரபராதி (சுற்றவாளி) என பிரதிவாதியான பூஜித் ஜயசுந்தர தெரிவித்தார்.

இதனையடுத்து, தமது சேவை பெறுநர் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய காலத்தில் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்ட பயங்கரவாதிகளுக்கு ஆதரவளிக்கவில்லை எனவும் கடமைகளை புறக்கணிக்கவில்லை எனவும் பூஜித் ஜயசுந்தரவின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ரொஷான் தெஹிவல, திறந்த நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் முறைப்பாட்டில் முன்வைக்கப்பட்டுள்ள 33 விடயங்களை மட்டும் சாட்சி நெறிப்படுத்தல் இன்றி ஏற்றுக்கொள்வதாக பூஜித் ஜயசுந்தரவின் சட்டத்தரணி இதன்போது நீதிமன்றில் சுட்டிக்காட்டினார்.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி சஹ்ரான் ஹாஷீம் தலைமையிலான இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் கொழும்பு – கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம் உள்ளிட்ட 07 இடங்களில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டமை, பலர் உயிரிழந்தமை மற்றும் மேலும் பலர் காயமடைந்தமை தொடர்பில் பாதிக்கப்பட்டோர் தரப்பு சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார்.

அது தொடர்பான பிரேத பரிசோதனை மற்றும் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை உள்ளிட்ட 33 விடயங்களையே இவ்வாறு சாட்சி விசாரணை இன்றி ஏற்றுக்கொள்வதற்கும் பிரதிவாதியான பூஜித் ஜயசுந்தர தரப்பு தயாரென அவர் கூறினார். வழக்குத் தொடுநர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் மன்றில் பிரசன்னமாகியிருந்தார்.

இதனையடுத்து இந்த வழக்கின் சாட்சி விசாரணைகளை இன்று (23) காலை 09.00 மணி வரை ஒத்திவைப்பதற்கு நீதிபதிகள் குழாம் தீர்மானித்ததுடன் அரச உளவுச் சேவையின் முன்னாள் பிரதானியும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான நிலந்த ஜயவர்தன, இன்றைய தினம் மன்றில் சாட்சியமளிக்கவுள்ளார்.

#### ஹேமசிறியின் வழக்கு

இந்நிலையில் நேற்று பிற்பகல், முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு வந்தது. இவ்வழக்கு விசாரணைக்கு வந்த போது, ஹேமசிறி பெர்னாண்டோ சார்பில் மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மொஹான் வீரசிங்க, அடிப்படை ஆட்சேபனம் ஒன்றினை முன்னெடுத்தார்.

தனது சேவை பெறுநரான ஹேமசிறி பெர்னாண்டோ, உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்ட பயங்கரவாதிகளுக்கு ஆதரவளிக்கவில்லை எனவும் கடமைகளை புறக்கணிக்கவில்லை எனவும் அதற்கான எந்த ஆதாரமும் இல்லாத நிலையில், தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப் பத்திரிகையை விசாரணைக்கு ஏற்காமலேயே நிராகரிக்க வேண்டும் எனவும் அவர் கோரினார்.

எனினும் வழக்கில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரால் சுதர்ஷன டி. சில்வா, கடமைகளை புறக்கணித்தமைக்கான ஆதாரங்கள் உள்ளதாக சுட்டிக்காட்டினார். இந்நிலையில், அந்த அடிப்படை ஆட்சேபனத்தை நிராகரிப்பதாக, சிறப்பு ட்ரயல் அட்பார் நீதிமன்றம் அறிவித்தது.

இதனையடுத்து ஆட்சேபனம் நிராகரிக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக உயர்நீதிமன்றில் மேன்முறையீடு செய்ய எதிர்பார்ப்பதால், இரு வாரங்கள் கால அவகாசம் வழங்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி மொஹான் வீரசிங்க கோரினார். எனினும் அக்கோரிக்கையையும் ட்ரயல் அட்பார் நீதிமன்றம் நிராகரித்தது. தமது உத்தரவுக்கு எதிராக உயர் நீதிமன்றம் செல்ல முடியுமான சூழல் உள்ளதாகவும் எனினும் வழக்கு விசாரணையை ஒத்திவைக்கப்போவதில்லை எனவும் அறிவித்த நீதிபதிகள் குழாம், ஹேமசிறி பெர்னாண்டோவுக்கும் குற்றப் பத்திரிகையை வாசித்துக் காட்டியது.

அக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தான் நிரபராதி என ஹேமசிறி பெர்னாண்டோ அறிவித்த நிலையில், சாட்சி விசாரணைகள் இன்று (23) முதல் இடம்பெறும் என ட்ரயல் அட்பார் நீதிமன்றம் அறிவித்தது.

இவ்விரு வழக்குகளின் போது பூஜித் ஜயசுந்தர மற்றும் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகிய இருவரும் மன்றில் ஆஜராகியிருந்தனர். வழக்குகள், பிரதி சொலிசிட்டர் ஜெனரால் சுதர்ஷன டி. சில்வா ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

பிரதிவாதிகளுக்கு எதிராக தலா 855 குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ளதுடன் 1215 சாட்சியாளர்களின் பட்டியலும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன.

# எம்மை அச்சுறுத்துவதன் மூலம் போராட்டத்தை நிறுத்த முடியாது

### விசாரணை முடிவில் அருட்தந்தை சிறில் காமினி

(எம்.எம்.சில்வெஸ்டர்)

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதலின் உண்மைத் தன்மையை கண்டறியும் வரை, பலியான மக்களுக்கு நீதி கிடைக்கும் வரை போராட்டத்தை தொடர்வோம். எம்மை அச்சுறுத்துவதன் மூலமோ எம்மீது அழுத்தம் பிரயோகிப்பதன் மூலமோ எமது போராட்டத்தை நிறுத்த முடியாது என அருட்தந்தை சிறில் காமினி அடிகள் தெரிவித்தார்.

இணையத்தள சந்திப்பில் நடத்தப்பட்ட கலந்துரையாடலொன்றின்போது அரச புலனாய்வு நிலைக்கள பணிப்பாளர் சுரேஷ் சாலே குறித்து அருட்தந்தை சிறில் காமினி அடிகளால் தெரிவிக்கப்பட்ட கருத்து தொடர்பில் வாக்கு மூலம் அளிப்பதற்காக அருட்தந்தை சிறில் காமினி அடிகளாரிடம் நேற்றைய தினமும் 4 மணித்தியாலங்கள் வாக்கு மூலம் பெறப்பட்டது.

மூன்றாவது தினமாகவும் நேற்றைய தினம் காலை 9.45 மணிக்கு சி.ஐ.டிக்கு சென்றிருந்த அருட்தந்தை சிறில் காமினி, பிற்பகல் 1.35 மணியளவில் வெளியே வந்தார்.

இதன்போது அருட்தந்தை ஊடகங்களுக்கு கூறுகையில்,

என்னுடைய வாக்குமூலத்தை எடுப்பதை சி.ஐ.டியினர் இன்று (நேற்று) நிறைவு செய்தனர். அவர்களின் அநேகமான கேள்விகள் எனக்கு புரிந்து கொள்ள முடியாமல் இருந்தது. சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக நடத்தப்பட்ட கலந்துரையாடல் குறித்து சமூக ஊடகங்கள் வாயிலாக சிலர் (comments கமண்ட்ஸ்) கருத்து தெரிவித்திருந்தனர். அந்த கருத்து தொடர்பில் ஓர் விளக்கமில்லாத கேள்வியை சி.ஐ.டி. யினர் என்னிடம் முன்வைத்தனர். அவர்கள் போடும் கருத்துக்களுக்கு நான் பொறுப்புக்கூற முடியாது. அது அவர்களின் கருத்துச் சுதந்திரம். மக்கள் தாங்கள் நினைப்பதை பல்வேறு விதமாக தெரிவிக்கின்றனர். அது தொடர்பில் நாம் எவருமே பொறுப்புக்கூற முடியாது.

இது போன்ற கேள்விகள் நேரத்தை வீணடிப்பவையாகும். நான் கூற வேண்டிய விடயம் என்னவெனில், இங்கு இடம்பெறும் செயற்பாடுகள் தேவையற்றவை. நடத்தப்பட வேண்டியது என்னவெனில், உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் தொடர்பான விடயங்களாகும். இதன் பின்னணியில் யார் உள்ளனர்? இதன் உண்மைத்தன்மை என்ன? இதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார்? என்பதையே அவர்கள் தேடிப்பார்க்க வேண்டும்.

ஆணைக்குழு அறிக்கை மற்றும் பாராளுமன்ற குழு அறிக்கை ஆகியவற்றைக் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்த விடயங்கள் குறித்து மேலதிகமாக விசாரிக்கப்பட வேண்டும் என்பது குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைத்தான் செய்ய வேண்டும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை சட்ட மா அதிபர் நடைமுறைப்படுத்த வேண்டும். அப்படி செய்தால் இதன் உண்மைத்தன்மையை அறிந்து கொள்ள முடியும். ஆனாலும் அதனை நிறைவேற்றாமல், நியாயத்தை பெற்றுத்தரக் கோரும் நபர்களையும் அமைப்புக்களையும் இலக்காகக் கொண்டு அவர்களை அழுத்தத்துக்கு உள்ளாக்குவது முறையாகாது. இவ்வாறு நடந்துகொண்டால் உண்மைத் தன்மையை கண்டறிய முடியாது போகும்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பாக உண்மைகளை கண்டறிவதா? அல்லது அதனை மூடி மறைப்பதற்கான தேவையா? சட்ட மா அதிபர் மற்றும் அரசாங்கத்துக்கும் உள்ளது என்ற கேள்வி எழுகிறது. ஆகையால், நான் கடைசியாக அங்கு குறிப்பிட்டிருந்த விடயம் என்னவெனில், நாங்கள், ஜனாதிபதிக்கும் கடிதமொன்றை அனுப்பியிருந்தோம். அந்த கடிதத்தில் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை நடைமுறைப்படுத்துமாறு குறிப்பிட்டிருந்தோம். மேலும் பாராளுமன்றத்தில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயுமாறும் முன்னாள் சட்ட மா அதிபர் தப்புல டி லிவேராவினால் குறிப்பிடப்பட்டிருந்த பாரிய சூழ்ச்சி குறித்தும் விசாரணை நடத்துமாறும் அந்த கடிதத்தில் கூறியிருந்தோம். இந்த விசாரணைகள் நடத்தப்பட வேண்டியவை. இவற்றை செயற்படுத்தாது, தேவையில்லாதவற்றை செயற்படுத்துகின்றனர்.

உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை நடத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். அதில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் மீது விசாரணை நடத்துமாறும், ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும் கூறப்பட்டுள்ளது.

# நேற்று 31 கொவிட் மரணங்கள் பதிவு

(எம்.மனோசித்ரா)

நாட்டில் நேற்று திங்கட்கிழமை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட 31 மரணங்களுடன் மொத்த கொவிட் மரணங்களின் எண்ணிக்கை 14 158ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்று உறுதிப்படுத்தப்பட்ட மரணங்களில் 21 ஆண்களும் 10 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்களில் 23பேர் 60 வயதுக்கு மேற்பட்டோராவர்.

நேற்று மாலை வரை 538 கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். அதற்கமைய இது வரையில் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டோர் எண்ணிக்கை 557 164 ஆக உயர்வடைந்துள்ளது.

## மாவீரர்... (தொடர்ச்சி)

சட்டங்களை மீறி செயற்பட்டால் நடவடிக்கை எடுக்க முடியும். எனினும் குற்றமிழைக்கப்படலாம் என்ற அடிப்படையில் தடை உத்தரவு கட்டளை வழங்க முடியாது' என்று விண்ணப்பங்கள் நீதிவான் நீதிமன்றங்களினால் தள்ளுபடி செய்யப்பட்டன.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற எல்லைக்குள் உள்ள இரண்டு பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், மல்லாகம் நீதிவான் நீதிமன்ற எல்லைக்கு உட்பட்ட 8 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் மற்றும் பருத்தித்துறை நீதிமன்ற எல்லையில் உள்ள 3 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளினால் இந்த விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

குற்றவியல் நடவடிக்கை சட்டத்துக்கு அமைவாகவும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் படியும் இந்நிகழ்வை நடத்துவது குற்றம் என்றும் இதனைத் தடை செய்யுமாறும் பொலிஸார் கோரியிருந்தனர்.

தற்போது நாட்டில் நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி பொது மக்களை அணிதிரட்ட முடியாது என்றும் பொலிஸார் குறிப்பிட்டிருந்தனர்.

விண்ணப்பங்களில் பிரதிவாதிகளாக அரசியல் கட்சி பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் சிலர் பெயரிடப்பட்டிருந்தனர். இந்த விண்ணப்பங்கள் தொடர்பில் பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டு நேற்று நீதிமன்றங்களில் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டன. மாவீரர் நாள் நினைவேந்தலை அனுமதித்தால் பெரும் ஆபத்து என்றும் பொலிஸார் சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணிகள் பொலிஸாரின் விண்ணப்பங்கள் அடிப்படையற்றவை என்றும் மன்று தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

இருதரப்புசமர்ப்பணங்களையும் ஆராய்ந்த நீதிமன்றங்கள், குற்றவியல் நடவடிக்கை சட்டம் மற்றும் தனிமைப்படுத்தல் சட்டம் மீறப்பட்டால்நடவடிக்கைஎடுக்கபொலிஸாருக்குஅதிகாரம் உள்ளது என்று சுட்டிக்காட்டி விண்ணப்பங்களை நிராகரித்தன.

# மரண அறிவித்தல்

பிறப்பு | இறப்பு

26 | 22

11 | 11

1948 | 2021



## திருமதி பழனியாய்

அக்கரப்பத்தனை கிளாஸ்கோ மேல்பிரிவைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.நடராஜ் முதலியார் அவர்களின் அன்பு மனைவி திருமதி பழனியாய் அவர்கள் 22.11.2021 திங்கட்கிழமையன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி மாயகிட்ணன் முதலியார் தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும் மகேஸ்வரி, திரு. ந.சந்திரமோகன் முதலியார் உரிமையாளர் (Vahini Textile 3rd Cross Street, Colombo11), தனலெட்சுமி,திரு.ந.சசிகுமார் முதலியார் (Assistant Manager Spencers), ஆகியோரின் அன்பு தாயாரும் சண்முகநாதன், நாகராஜ், சந்திரிக்கா ஆகியோரின் மாமியாரும் கிர்த்திக்கின் பாட்டியும் காலஞ்சென்ற ராமலிங்கம் முதலியார், காலஞ்சென்ற கதிராய் மற்றும் பழனியப்பன் முதலியார், சுந்தரராஜ் முதலியார், அன்னக்கிளி, அங்கப்பன் முதலியார், ஜெயலட்சுமி, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் வத்தனை மஹிந்த மலர்ச்சாலையில் 23.11.2021 இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் ஈமக்கிரியைகள் நடைபெற்று 5.00 மணியளவில் மாதம்பிட்டி பொது மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதனை துக்கத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல் : மகன்மார் - ந.சந்திரமோகன் : 077 8837222
ந.சசிகுமார் : 077 4146763

## எம்.பி.க்கள்... (தொடர்ச்சி)

அதனையும் அரசுடமையாக்க பின்வாங்க மாட்டேன் என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2022 ஆம் வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதிநாள் விவாதத்தில் பதிலளித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டில் எமக்குள்ள சவால்களை நான் முன்வைத்தேன். அதனைத் தான் எதிரணியும் வரவு செலவுத்திட்ட விவாதத்தில் தெரிவித்தது. ஆளும், எதிர்த்தரப்பு முன்வைத்த சகல யோசனைகளும் அமைச்சரவைக்கு சமர்ப்பித்து தேவையான முடிவுகளை எடுப்போம்.

அரச சேவை சம்பள முரண்பாட்டை தீர்க்க புதிய சம்பள முறையொன்றை தயாரிக்க இருக்கிறோம். சம்பள நிர்ணய ஆணைக்குழுவுக்கு யோசனை முன்வைத்து தேவையான மாற்றம் செய்வோம். சுகாதார சேவை சம்பள முரண்பாடு தொடர்பில் ஜனாதிபதி கருத்து தெரிவித்துள்ளார்.

மேலும் வெளிநாட்டு செலாவணி பிரச்சினைக்கு தீர்வு யோசனை எதுவும் எதிர்த்தரப்பால் முன்வைக்கப்படவில்லை. அந்நிய செலாவணி, வெளிநாட்டு முதலீடு தேவையற்ற சட்டங்களை இலகுபடுத்த இருக்கிறோம். இதற்காக ஜனாதிபதி, செயலணி ஒன்றை நியமிப்பார் என எதிர்பார்க்கிறோம்.

கொவிட் காரணமாக அதிகம் பாதிக்கப்பட்ட தரப்பினர் குறித்து வரவு செலவு திட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதில் உள்ளடங்காத சகல தரப்பினருக்கும் நிவாரணம் வழங்க பின்நிற்க மாட்டோம். தமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை நாம் கிராமத்துக்கு வழங்கியுள்ளோம்.

மேலும் வடக்கு கிழக்கு பிரதேச எம்.பி.க்கள் தமது பிரதேசங்களுக்கு விசேட திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை என்று தெரிவித்தனர். முழுநாட்டையும் ஒன்றாக கருதி வடக்கு கிழக்கு உட்பட 14021 கிராமசேவகர் பிரிவுகளுக்கும் 4917 உள்ளூராட்சி பிரிவுகளுக்கும் கட்சி, இன மத குல பேதமின்றி ஒரே அளவான நிதி வழங்கப்பட்டுள்ளது. பின்தங்கிய வடக்கு பிரதேசங்களுக்கு விசேட அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுத்ததாலேயே அப்பகுதிகளை ஏனைய பகுதிகளுக்கு சமமாக அபிவிருத்தி செய்துள்ளோம்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் வடக்கு கிழக்கு அபிவிருத்தி செய்யப்பட்டன. வவுனியாவுக்கு அப்பால் மின்சாரம் இருக்கவில்லை. மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் 24 மணிநேரமும் மின்சாரம் வடக்குக்கு வழங்கப்பட்டது. அவர்கள் எங்களுடன் இருக்கின்றார்களா இல்லையா என்று பார்ப்பதில்லை. அனைவரையும் ஒன்றாகவே பார்க்கின்றோம்.

பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய நிதியை அரசுடமையாக்கியதை போன்று வேறு ஏதேனும் மோசடியுடன் தொடர்புடைய நிதி இருக்குமாக இருந்தால் அதனையும் அரசுடமையாக்க பின்வாங்க மாட்டேன் என்றார்.

## பசுமை... (தொடர்ச்சி)

இரசாயன உரம் ஒருபோதும் அரசாங்க மானியத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட மாட்டாது. அரசாங்கத்தின் கொள்கையின் எவ்வித மாற்றமும் கிடையாது என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெரும்போக பயிர்ச்செய்கை மற்றும் சேதன உர விநியோகம் குறித்து ஜனாதிபதி செயலகத்தில் விவசாயத்துறையுடன் தொடர்புடைய தரப்பினருடன் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

இரசாயன உரம் ஒருபோதும் அரசாங்க மானிய திட்டத்தின்கீழ் வழங்கப்பட மாட்டாது. அரசாங்கத்தின் கொள்கையின் எவ்வித மாற்றமும் கிடையாது. நாட்டின் விவசாயத்தில் சேதன உரத்தைப் பயன்படுத்தி பசுமை விவசாயத்தை மேம்படுத்துவதே அரசாங்கத்தின் கொள்கையாகும். அரசாங்கம் என்ற ரீதியில் சேதன உரத்தை விநியோகித்தல், நிவாரணத்தை வழங்குதல், சேதன விவசாயத்துக்காக மாத்திரமே முன்னெடுக்கப்படும்.

விவசாயிகளுக்கு இது தொடர்பில் உரிய ஆலோசனைகளை வழங்க வேண்டும். அதனை நடைமுறைப்படுத்தும்போது அதற்கு இடையூறாக செயற்படும் இரசாயன உர மாபியாக்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும். அதேவேளை சரியான விடயத்தை போராடி வெற்றி கொள்வதற்கு அதிகாரிகளின் அர்ப்பணிப்பு இன்றியமையாததாகும் என்று தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் சகல மாகாணங்களிலும் விவசாய பயிர்ச்செய்கை தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சகல அதிகாரிகளிடமும் கேட்டறிந்து கொண்டார். நிலவும் அதிக மழையுடனான காலநிலை காரணமாக மரக்கறி உள்ளிட்ட பல பயிர்ச்செய்கைகளிலும் விளைச்சல் குறைவடைந்துள்ளது. அதேபோன்று இரசாயன உர விநியோகத்தில் ஏற்பட்ட தாமதம் காரணமாக விளைச்சல் பாரிய பாதிப்படைந்துள்ளது. எவ்வாறிருப்பினும் மாவட்டத்தில் சுமார் 70 வீதம் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினர்.

விவசாயிகள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தமை மற்றும் பயிர்ச்செய்கையை தாமதப்படுத்தியமைக்கான காரணத்தைக் கூட அவர்கள் சரியாக அறிந்திருக்க வாய்ப்பில்லை. இது தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தாமையின் காரணமாக அதிகாரிகள் தொடர்பில் ஜனாதிபதி அதிருப்தியை வெளிப்படுத்தினார். பசுமை விவசாய கொள்கைக்கு எதிராக போராட்டம் நடத்தும் விவசாயிகள் சார்பில் அதிகாரிகள் பதில் தேட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, அரசாங்கத்தின் கொள்கைக்கு உடன்படாத அதிகாரிகள் பதவி விலகுவதற்கு எந்தத் தடையும் இல்லை என்றும் கூறினார். இந்த வேலைத் திட்டத்தின் வெற்றிக்கு தெளிவான மற்றும் ஒருங்கிணைந்த குழுவின் ஆதரவு மிகவும் அவசியமானது என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகே, இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, ஆளுனர்களான மார்ஷல் ஒப் த எயார் ரொஷான் குணதிலக, அநுராத யஹம்பத், ஜனாதிபதி செயலாளர் பீ.பி. ஜயசுந்தர, ஜனாதிபதி ஆலோசகர் லலித் வீரதுங்க உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் விவசாயத்துறை அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவன பிரதானிகள், சேதன உர உற்பத்தியாளர்கள் உள்ளிட்டோரும் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## பட்ஜட்டின்... (தொடர்ச்சி)

வாக்கெடுப்பில் ஆதரவாக அரச தரப்புடன் இணைந்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் மாவட்ட எம்.பி.யான இஷாக் ரஹுமான்,டயானா கமகே, அரவிந்தகுமார், முஸ்லிம் தேசிய கூட்டணியின் புத்தளம் மாவட்ட எம்.பி.யான அலிசப்ரி ரஹீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட எம்.பி. யான முஷாரப் ஆகியோர் வாக்களித்தனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எம்.பி.க்களான ஹரீஸ்,பைசல் காசிம் ,நசீர் அஹமட் ஆகியோரும் பட்ஜட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

மேலும் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு எதிராக எதிர்க்கட்சிகளான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அநுர குமார திசாநாயக்க தலைமையிலான ஜே .வி.பி., கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பன வாக்களித்தன.

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல வாக்கெடுப்பை கோரியதையடுத்து இலத்திரனியல் முறைப்படி வாக்கெடுப்பு நடத்த கோரம் மணி ஒலிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தமது ஆசனங்களுக்கு வந்து வாக்கெடுப்புக்கு தயாராகினர்.

**வாக்கெடுப்பு**

இதனைத் தொடர்ந்து இலத்திரனியல் முறைப்படி வாக்கெடுப்பு நடத்தப்பட்ட நிலையில் இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவாக 153 வாக்குகள் பதிவாகின. எதிராக 60 வாக்குகள் பதிவாகியிருந்தன. 11 பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

**சுகவீனமுற்ற முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் உற்சாகமாக ஆதரவு**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியாக தாம் எதிர்த்து வாக்களிப்பதாக தீர்மானித்திருந்த போதிலும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மட்டுமே எதிர்த்து வாக்களித்திருந்தார். தாம் சுகவீனமுற்றுள்ளதாக நேற்று முன்தினம் கட்சியின் உயர் பீட கூட்டத்தை நிராகரித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எம்.பி.க்களான ஹரீஸ்,பைசல் காசிம் ,நசீர் அஹமட் ஆகியோர் வெகு உற்சாகமாக வாக்கெடுப்பில் ஆதரவாக வாக்களித்ததுடன், அதனை தமது தொலைபேசி வீடியோ கமராக்களில் பதிவு செய்தும் இருந்தனர்.

**அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கிய எதிர்க்கட்சி எம்.பி.க்கள்**

அதேபோல் வாக்கெடுப்பில் ஆதரவாக அரச தரப்புடன் இணைந்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் மாவட்ட எம்.பி.யான இஷாக் ரஹுமான்,டயானா கமகே, அரவிந்தகுமார், முஸ்லிம் தேசிய கூட்டணியின் புத்தளம் மாவட்ட எம்.பி.யான அலிசப்ரி ரஹீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட எம்.பி. யான முஷாரப் ஆகியோர் வாக்களித்தனர்.

**கூட்டமைப்பு, ஜே.வி.பி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எதிர்ப்பு**

அதேவேளை 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு எதிராக எதிர்க்கட்சிகளான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி,இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அநுர குமார திசாநாயக்க தலைமையிலான ஜே .வி.பி., கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பன எதிர்த்து வாக்களித்தன.

**11 உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை**

எனினும் நேற்று வாக்கெடுப்பில் ஆளும் எதிர்க்கட்சிகளின் 11 உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சாணக்கியன் எம்.பி. ஆகியோர் வெளிநாட்டு விஜயமொன்றில் உள்ள காரணத்தினால் அவர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. கொரோனா வைரஸ் தொற்று காரணமாக சுகவீனமுற்றுள்ள மனோ கணேசன் எம்.பி. யும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் எம்.பி.யும் விக்கினேஸ்வரன் எம்.பி.யும் கலந்துகொண்டிருக்கவில்லை. நிதி அமைச்சர் பஷில் ராஜபக் ஷ உரையாற்றும் வேளையில் சபையில் இருந்த விஜயதாஸ ராஜபக் ஷ எம்.பி.யும் வாக்கெடுப்பு வேளையில் சபையை விட்டு வெளியேறினார்.

**உரையாற்றாத தலைவர்கள்**

இதேவேளை 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் 7 நாட்கள் நடந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோர் உரையாற்றவில்லை.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வாக்களிக்க முற்பட்டபோது அவரினால் வாக்களிக்க முடியவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பாக சபாநாயகருக்கு அறிவித்த நிலையில் பின்னர் சம்பந்தன் வாக்களிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**இன்று தொடக்கம் அமைச்சுக்கள் மீதான விவாதம்**

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு நேற்று நிறைவேற்றப்பட்ட நிலையில் இன்று 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் குழு நிலையிலான விவாதம் ஆரம்பமாகவிருப்பதுடன் சனிக்கிழமை உள்ளடங்கலாக டிசம்பர் 10ஆம் திகதி வரை 16 நாட்கள் விவாதத்தை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. டிசம்பர் 10ஆம் திகதி மாலை 5 மணிக்கு மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி நிதி அமைச்சர் பஷில் ராஜபக் ஷவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் இரண்டாவது வாசிப்பு கடந்த 12 ஆம் திகதி நிதி அமைச்சர் பஷில் ராஜபக் ஷவினால் சபையில் முன்வைக்கப்பட்டு சுமார் இரு மணிநேரம் வரவு செலவுத்திட்ட உரையாற்றியிருந்தார்.

இந்நிலையில் மறுநாள் 13ஆம் திகதி சனிக்கிழமை முதல் நேற்று 22ஆம் திகதி திங்கட்கிழமை வரை ஏழு நாட்கள் வரவுசெலவுத்திட்ட இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்று நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவின் உரையுடன் நிறைவுக்கு வந்தது. நிதி அமைச்சரின் உரை முடிவுக்கு வரும் வேளையிலேயே ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சகலரும் தத்தமது ஆசனங்களில் வந்திருந்த நிலையிலும் எதிர்க்கட்சியின் பக்கம் பலரின் ஆசனங்கள் வெற்றிடமாகவே காணப்பட்டன.

## உணவு... (தொடர்ச்சி)

உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தினால் வாழ்க்கை சுமை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆகவே பொருள் ஏற்றிஇறக்குவதற்கான கூலியை 15 ரூபாவினால் அதிகரிக்குமாறு வலியுறுத்தி புறக்கோட்டை 5ஆம் குறுக்குத் தெரு நாட்டாமைகள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டார்கள்.

1989ஆம் ஆண்டு காலம் முதல் புறக்கணிக்கப்பட்ட நிலையில் உள்ளோம். ஒரு முறை பொருள் ஏற்றி இறக்குவதற்காக 8 ரூபா தொடக்கம் 10 ரூபாய் மாத்திரமே கிடைக்கப்பெறுகிறது.அத்தியாவசியப் பொருட்களின் விலையும் வாழ்க்கைச் செலவும் தினசரி அதிகரித்த நிலையில் உள்ளது. அவ்வாறான நிலையில் சேவை கட்டணத்தை அதிகரிப்பது அவசியமாகும் என போராட்டத்தில் ஈடுபட்ட நாட்டாமைகள் குறிப்பிட்டனர்.

மலைநாடு மற்றும் ஏனைய பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதனால் வியாபார நடவடிக்கைகளில் தாம் நட்டமடைவதாக மரக்கறி சில்லறை வியாபாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மலைநாடு மற்றும் ஏனைய பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் சகல மரக்கறிகளின் சில்லறை விலை கிலோவொன்று 400 ரூபாவை காட்டிலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.உரம் பற்றாக்குறை மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக மரக்கறிகளின் விலை சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

உரப்பிரச்சினை காரணமாக மரக்கறி விளைச்சல் வீழ்ச்சியடைந்துள்ளதை தொடர்ந்து சந்தையில் கரட் ஒருகிலோகிராம் 550 ரூபாவுக்கும் லீக்ஸ் 500 ரூபாவுக்கும்போஞ்சி ஒருகிலோகிராம் 600 ரூபாவுக்கும் கத்தரிக்காய் ஒருகிலோகிராம் 400, கறிமிளகாய் ஒருகிலோகிராம் 600 ரூபாவுக்கும் சில்லறை விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.மரக்கறிகளின் விற்பனை விலை என்றும் இல்லாத வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளன.விலையேற்றத்தின் காரணமாக 250 கிராம் மரக்கறிகளைக் கூட பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பூசணிக்காய்,மரவள்ளிக்கிழங்கு ஆகியவை மாத்திரம் தான் தற்போது குறைந்த விலைக்கு பெற முடிகிறது.அவற்றையும் மூன்று வேளையும் எவ்வாறு உண்பது என நுகர்வோர் கேள்வியெழுப்பியுள்ளனர்.

## புதிய... (தொடர்ச்சி)

உரிமை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சருக்கு உண்டு என வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மாகாண சபைத் தேர்தலையும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலையும் விரைவாக நடத்த அரசாங்கம் உரிய கவனம் செலுத்தியுள்ளது. மக்கள் மத்தியில் செல்வதற்கு பயந்து நல்லாட்சி அரசாங்கத்தை போன்று தேர்தலை பிற்போட வேண்டிய தேவை எமக்கு கிடையாது. உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு எவ்வித சட்ட சிக்கல்களும் கிடையாது. கொவிட் 19 பெருந்தொற்று பரவலை அடிப்படையாகக் கொண்ட சுகாதார பிரச்சினைகள் மாத்திரம் காணப்படுகிறது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் கடந்த 2018ஆம் ஆண்டு இடம்பெற்றது. உள்ளூராட்சிமன்றின் 4வருட கால பதவிக் காலம் 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துடன் நிறைவு பெறுகிறது. அதனடிப்படையில் எதிர்வரும் மார்ச் மாதம் உள்ளூராட்சிமன்ற த்தேர்தலை நடத்த முடியுமா,முடியாதா என்ற தீர்மானம் அப்போதைய சுகாதார காரணிகளை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும். உள்ளூராட்சிமன்றங்களின் பதவிக்காலம் நிறைவு பெறும் காலத்தில் இருந்து மேலும் ஒரு வருட காலத்துக்கு உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தாமல் பதவிக் காலத்தை நீடிப்பதற்கான அதிகாரம் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சருக்கு அரசியலமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் சட்ட சிக்கல் காணப்படுகிறது.மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கு நல்லாட்சி அரசாங்கத்தின் அரச தலைவர்கள் பொறுப்புக்கூற வேண்டும்.மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பான சிக்கல் நிலையை நல்லாட்சி அரசாங்கம் தேர்தலுக்கு பயந்து திட்டமிட்ட வகையில் உருவாக்கியது.

நல்லாட்சி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை காலவரையறையின்றி பிற்போட்டுள்ளமைக்கு எதிராக நீதிமன்றத்தை நாடினோம். தேர்தல் முறைமையில் காணப்படும் சிக்கல் நிலைக்கு பாராளுமன்ற மட்டத்தில் தீர்வு காண வேண்டும் என நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பில் புதிய சட்டத்தை இயற்றாமல் மாகாண சபைத் தேர்தலை ஒருபோதும் நடத்த முடியாது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான புதிய சட்டம் இயற்றுவது குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மறுபுறம் தேர்தல் முறைமை தொடர்பில் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் பாராளுமன்ற தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் நிறைவு பெறும் தருவாயில் உள்ளன. ஆகவே மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் வெகுவிரைவில் சிறந்த தீர்மானம் முன்னெடுக்கப்படும் என்றார்.

## இரசாயன... (தொடர்ச்சி)

விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, அதிக மழைவீழ்ச்சி காரணமாக மரக்கறிகளுக்கு பயன்படுத்த விசேட தாவர உரங்கள் இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதிநாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ ஆட்சிக்கு வந்து 24 மாதங்கள் முடிந்துள்ள நிலையில் 20 மாதங்கள் நாம் கொவிட் வைரஸுடன் போராட வேண்டியிருந்தது. அவ்வாறான நெருக்கடிக்கு மத்தியிலேயே இந்த வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. விவசாயத்துறை அமைச்சர் ஒன்றை கூறுகின்றார், செயலாளர் ஒன்றை கூறுகின்றார், இராஜாங்க அமைச்சர் வேறொன்றைக் கூறுகின்றார் என எதிர்க்கட்சித் தலைவர் கூறினார். நாம் யாரும் மாற்றுக்கருத்துக்களை முன்வைக்கவில்லை. மூவரும் ஒரே நிலைப்பாட்டில் இருந்து ஜனாதிபதியின் கொள்கையுடன் உள்ளோம்.

சீனாவின் இரசாயன உரத்தைக் கொள்வனவு செய்வதை நிறுத்தியவுடன் எமது விவசாயத்தை கருத்தில் கொண்டு இந்தியாவில் இருந்து உரம் இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டது. இது குறித்து பிரச்சினைகள் இருப்பின் அது குறித்து எம்மிடம் கேள்வி கேட்க அவசியம் இல்லை. வேண்டும் என்றால் கோப் குழுவில் முறையிட்டு விசாரணைகளை முன்னெடுக்க முடியும்.இயற்கையுடன் இணைந்த விவசாயத்தை முன்னெடுக்க எடுத்த தீர்மானத்துடன் நான் தொடர்ந்தும் உள்ளேன். அதிலிருந்து நான் மாறமாட்டேன் என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சி உறுப்பினர் சமிந்த விஜயசிறி : உரம் இறக்குமதி செய்வது குறித்து இன்று காலை ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அது குறித்து உங்களின் நிலைப்பாடு என்னவென கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் தெரிவித்த அமைச்சர் மஹிந்தானந்த : நெல் உற்பத்திக்காக இரசாயன உரம் இறக்குமதி செய்ய ஜனாதிபதியுடனான சந்திப்பில் தீர்மானிக்கப்படவில்லை. ஆனால் அதிக மழைவீழ்ச்சி காரணமாக நாசமாகியுள்ள மரக்கறிகளை மீட்டெடுக்க விசேட உரம் இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அது தவிர்ந்து வேறு எந்த உரமும் இறக்குமதி செய்யப்படாது என்றார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் மனுஷ நாணயக்கார தனது உரையில், மீண்டும் உரம் குறித்த கேள்வி எழுப்பிய வேளையில் அதற்கு பதில் தெரிவித்த அமைச்சர் மஹிந்தானந்த : இரசாயன உரம் இறக்குமதி செய்ய ஜனாதிபதி செயலகத்தினால் எந்தவொரு வர்த்தமானி அறிவித்தலும் விடுக்கப்படவில்லை. ஆனால் தாவர உரம் இறக்குமதி செய்யப்படும். அதிக மழைவீழ்ச்சி காரணமாக விசேட தாவர உரங்கள் இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

## 69 இலட்சம்... (தொடர்ச்சி)

இது ஜனாதிபதியை அவமதிக்கும் செயற்பாடு மட்டுமல்ல அவரது விம்பத்தை சிதைக்க எடுக்கும் சதி. இதனை செய்ய வேண்டாம் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதிநாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. நாட்டின் விலை வாசி அதிகரித்துள்ளது. மக்களுக்கு விசேட சலுகைகளை எம்மால் வழங்க முடியாது. மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளை கூட நிறுத்திவிட்டு நெருக்கடிகளுக்கு மத்தியில் பயணிக்க வேண்டியுள்ளது. உலக நாடுகளில் இவ்வாறான தீர்மானங்களை முன்னெடுக்கின்றனர். விலையேற்றத்தை குறைக்க வேண்டும் என்றால் சர்வதேச சந்தையில் பொருட்களின் விலை குறைவடைய வேண்டும். அதேபோல் ஏனைய துறைகள் வழமைக்குத் திரும்ப வேண்டும். குறிப்பாக சுற்றுலாத்துறை மீண்டும் வழமைக்கு திரும்ப வேண்டும்.

சுற்றுலாத்துறையுடன் தொடர்புபட்ட மூன்று மில்லியன் மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். பயங்கரவாத காலத்தில் கூட நாட்டில் சுற்றுலாத்துறை தடைப்படவில்லை. ஆனால் கொவிட் காலத்தில் முற்றுமுழுதாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனினும் அதில் இருந்து மீண்டு வருகின்றோம். நாட்டுக்கான சுற்றுலாத்துறையில் கட்டுப்பாடுகளை விதித்து நிலைமைகளை மீட்டெடுக்க முடியாது. எனவேதான் தடுப்பூசிகளை முழுமையாக வழங்கி நாட்டை வழமைக்கு கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

கடந்த இரண்டு மாதங்களில் சுற்றுலாத்துறையினர் மீண்டும் நாட்டுக்கு வருகை தர ஆரம்பித்துள்ளனர். இலங்கை மீதான நம்பிக்கையில், கொவிட் அச்சுறுத்தல் நிலைமைகள் குறைவாக காணப்படும் நாடாக எம்மால் இதனை முன்னெடுக்க முடிந்துள்ளது. 69 இலட்சம் மக்களின் நம்பிக்கையை பெற்ற ஜனாதிபதியை பைத்தியக்காரன் என கூறுகின்றனர். சேர் பெயில் என்கின்றனர். இது ஜனாதிபதியை அவமதிக்கும் செயற்பாடாகும். இது நியாயமானதா என எதிர்க்கட்சியிடம் கேட்கின்றோம்.

நாட்டின் கொவிட் வைரஸ் பரவலை நாம் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும் வேளையில் இவர்கள் கூட்டம் நடத்தி கொவிட் வைரஸை பரப்ப நினைக்கின்றனர். இன்று மனோ கணேசனுக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளது. அவருடன் தொடர்புபட்ட பலருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. அவரிடம் இருந்து கொத்தணி உருவாகியுள்ளது. இவ்வாறான நிலையில் ஜனாதிபதியை அவமதித்து அவரது விம்பத்தை சிதைக்கவே முயற்சிக்கின்றனர் என்றார்.

## இந்தியாவுக்கு... (தொடர்ச்சி)

கையிருப்பைப் பெற்றுக்கொள்ள கவனம் செலுத்தப்பட்டுள்ளது என பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மூன்றாம் வாரத்தில் புதிய அரசியலமைப்புக்கான மூல வரைபும் தேர்தல் முறைமை தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கையும் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுதலை பெற்ற காலத்துக்குப் பிறகு தற்போது பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளோம்.அதற்கு பல்வேறு பொதுக்காரணிகள் செலுத்துகின்றன சவால்களை வெற்றிகொள்வதற்கு நாட்டை முடக்க வேண்டிய தேவை கிடையாது.

அரசாங்கம் அனைத்து நாடுகளுடன் பொதுவெளிவிவகார கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நட்புறவுடன் செயற்படுகிறது.அனைத்து நாடுகளுடன் முரண்பாடற்ற வகையில் செயற்படும் சூழ்நிலை தற்போது காணப்படுகிறது.விசேடமாக இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் நல்லுறவு காணப்படுகிறது. நெருக்கடியான சூழ்நிலைகளின் போது இந்தியா இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்டுள்ளது. அனைத்து நாடுகளுடன் பொதுக்கொள்கையுடன் செல்வது அரசாங்கத்தின் பிரதான இலக்காகும்.

நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்தியாவுக்கு செல்லவுள்ளார்.இந்திய பிரதமர்,இந்திய வெளிவிவகார அமைச்சர் மற்றும் இந்திய அரச உயர்மட்ட தலைவர்களுடன் விசேட சந்திப்புக்களில் ஈடுபட நிதியமைச்சர் புதுடில்லி செல்லவுள்ளார். கடன் பெறும் நோக்கில் இந்திய விஜயத்தை மேற்கொள்ளவில்லை.

எதிர்வரும் மாதம் 10ஆம் திகதி வரவு செலவுத் திட்டத்தின் மீதான மூன்றாம் வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படும்.பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் முரண்பாடற்ற வகையில் இம்முறை பாதீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பாராளுமன்றம் கூடும்.ஜனவரி மாதம் இரண்டாம் வாரத்தில் புதிய அரசியலமைப்பின் மூல வரைபு பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கிறோம். அதற்கான நடவடிக்கைகளை அரசியலமைப்பு தொடர்பான நிபுணர் குழுவினர் முன்னெடுத்துள்ளனர்.

புதிய அரசியலமைப்பு தொடர்பான நிபுணர் குழுவினர் இவ்வருடத்தின் இறுதியில் அரசியலமைப்பு மூலவரைபு தொடர்பான நடவடிக்கைகளை நிறைவு செய்வார்கள்.ஜனவரி மாதத்தின் இறுதி வாரத்தில் முழுமையான அறிக்கை பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கான சாத்தியம் காணப்படுகிறது.

தேர்தல் முறைமை தொடர்பில் அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் செயற்படும் பாராளுமன்ற தெரிவு குழுவினர் ஜனவரி மாதம் குழு அறிக்கையை பாராளுமன்றில் சமர்ப்பிப்பர்.2022ஆம் ஆண்டு முதல்காலாண்டுக்குள் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்றார்.

## ஒருநாடு... (தொடர்ச்சி)

நாடு முன் செல்ல முடியாது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக செயற்படும் அருட்தந்தை சிறில் காமினி அடிகளாரை வாக்குமூலம் என்ற போர்வையில் அலைக்கழிப்பதை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2022 ஆம் வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதிநாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் தெரிவிக்கையில்,கொரோனா வைரஸ் சூழ்நிலைக்கு பின்னர் நாட்டில் புதிய வறுமை உருவாகியுள்ளது. அரசாங்கத்தின் திட்டமிடப்படாத பொருளாதார முகாமைத்துவமே இந்த புதிய வறுமைக்கு காரணமாகியுள்ளது.

வருமான ரீதியான வறுமை, உணர்வு ரீதியான வறுமை, நாட்டில் பெரும்பாலானவர்கள் மந்த போசணை நிலை உருவாகி அதனால் ஏற்பட்டுள்ள வறுமை நிலை ஆகியன தற்போது தேசிய பிரச்சினையாகி உள்ளன.

எமது அரசாங்க காலத்தில் உலக வங்கியானது ஜனசவிய திட்டத்துக்கு மட்டுமே நிதி வழங்கியது. இத்தகைய வேறு எந்த திட்டங்களுக்கும் அந்த வங்கி நிதி வழங்கியதில்லை. அந்தளவு அந்தத் திட்டம் மிக சிறப்பான வறுமை ஒழிப்புக்கான திட்டமாக இருந்தது.

நாட்டின் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. பொருட்களின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளன. நாட்டின் வருமானம் குறைவடைந்துள்ளது. வருமானத்தை ஏற்படுத்திக்கொள்ள அரசாங்கத்திடம் எந்த திட்டமும் இல்லை. அடுத்த வருடத்துக்கு மொத்தமாக 6721 மில்லியன் டொலர் கடன் செலுத்தவேண்டி இருக்கின்றது. அடுத்துவரும் ஒன்றரை மாதத்துக்கே அந்நிய செலாவணி இருக்கின்றது. இவ்வாறான நிலையில் எவ்வாறு முகம்கொடுப்பது. மக்கள் தாங்க முடியாத பொருளாதார பிரச்சினைக்கு முகம்கொடுத்து வருகின்றனர். அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு. மக்கள் பொருட்களை பெற்றுக்கொள்ள வரிசையில் நிற்கவேண்டிய நிலை. இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு நிலையான தீர்மானத்துக்கு வரவேண்டும்.

அதனால் அரசாங்கம் தொடர்ந்தும் தடுமாறிக்கொண்டிருக்காமல் விரைவாக எடுக்கவேண்டிய தீர்மானங்களுக்கு செல்லவேண்டும். அதற்காக சர்வதேச நாணய நிதியங்களுடன் கலந்துரையாடவேண்டும். அதன்போது எமது தனித்துவத்தை பாதுகாத்துக்கொள்ளவேண்டும். எமது கடன்களை மீள் கட்டமைப்பு செய்யவேண்டும். அதற்காக நாங்களும் உதவத் தயாராக இருக்கின்றோம். நாட்டுக்கு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கக்கூடிய சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்திருக்கின்றது. அதனால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு எந்த நிவாரணமும் இல்லை. அதனால் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் வகையில் வரவு செலவுத் திட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளவேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நாட்டில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவேண்டும். ஆனால் ஒருநாடு ஒருசட்டத்தை ஏற்படுத்துவதாக ஆட்சிக்குவந்த இந்த அரசாங்கம் நாட்டில் இருக்கும் பிரச்சினைகளை மறைப்பதற்கு இனங்களுக்களுக்கிடையில் முறுகலை ஏற்படுத்தி வருகின்றது. ஒருநாடு ஒரு சட்டம் தொடர்பான செயலணியை அமைத்து ஒரு சமூகத்தை முற்றாக புறக்கணித்திருக்கின்றது. நாட்டுக்குள் பாரிய அழிவை ஏற்படுத்தவா அரசாங்கம் முயற்சிக்கின்றது. இனங்களுக்கிடையில் பிரச்சினையை ஏற்படுத்திக்கொண்டு நாட்டுக்கு முன்னுக்குசெல்ல முடியாது. அதேபோன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார் என இனம் காணும் வகையில் பேராயர் மற்றும் கத்தோலிக்க சமூகத்தின் சந்தேகத்தை தீர்க்கும் பாரபட்சமற்ற விசாரணையை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக செயற்படும் அருட்தந்தை சிறில் காமினி அடிகளாரை வாக்குமூலம் என்ற போர்வையில் அலைக்கழிப்பதை அரசாங்கம் நிறுத்த வேண்டும். அருட்தந்தை சிறில் காமினி அடிகளார் நேற்றைய தினமும் சிஐடி யினரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் பெற்றுக்கொடுப்பதை மழுங்கடிக்கச் செய்யும் வகையிலேயே இத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இன்று நாட்டில் பெரும் நெருக்கடி நிலையும் சவால்களும் உள்ளன என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். இந்த நிலையில் அரசாங்கம் சரியானநிலைத்திருக்க வேண்டும். உண்மைக்கு இடமளிக்க வேண்டும்.புதிய வறுமையை விரைவாக ஒழிப்பதற்கு விசேட வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

# பொலிஸ் காவலில் உயிரிழந்த விதுசனின் உடலில் 31காயங்கள்

## நீதிமன்ற விசாரணையில் தெரியவந்துள்ளது; சிரேஷ்ட சட்டத்தரணி சுகாஸ் தகவல்



(பட்டிருப்பு நிருபர்)

மட்டக்களப்பில் பொலிஸ் காவலில் உயிரிழந்த விதுசனின் உடலில் 31காயங்கள் இருந்ததாக நீதிமன்ற விசாரணையில் தெரியவந்துள்ளதாக சிரேஷ்ட சட்டத்தரணி சுகாஸ் தெரிவித்தார்.

இருதயபுரம் கிழக்கு பகுதியில் உள்ள வீட்டில் போதைப்பொருள் வைத்திருந்ததாக தெரிவித்து கடந்த ஜூன் 03ஆம் திகதி இளைஞர் ஒருவர் நள்ளிரவில் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில் குறித்த இளைஞன் பொலிஸ் காவலில் இருந்தபோது உயிரிழந்திருந்தார்.

குறித்த இளைஞன் ஐஸ் போதைப் பொருள் பக்கட்டை விழுங்கியதால் அது வயிற்றினுள் வெடித்து உயிரிழந்துள்ளதாக பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் அதனை குறித்த இளைஞனின் குடும்பத்தினர் மறுத்திருந்ததுடன் குறித்த இளைஞனை பொலிஸார் தாக்கியதாலேயே உயிரிழந்ததாக தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் குறித்த இளைஞனின் சடலம் தோண்டியெடுக்கப்பட்டு இரண்டாவது பிரேத பரிசோதனைக்காக பேராதனை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் நேற்று குறித்த விசாரணை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் விதுசனின் உடலில் 31வகையான காயங்கள் அறியக்கிடைத்துள்ளதாகவும் உயிரிழந்த இளைஞர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி க.சுகாஸ் தெரிவித்தார்.

பொலிஸார் தெரிவித்த விடயங்களுக்கு மாறான சம்பவம் குறித்த இளைஞனுக்கு பொலிஸ் காவலில் நடைபெற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். பொலிஸார் ஏற்கனவே குறித்த இளைஞன் தற்கொலை செய்ததாக நீதிமன்றில் பொய்யான தகவலை வழங்கியிருந்தார்கள். அதுபொய்யென்றும் குடும்பத்தினர் முன்பாக பொலிஸார் குறித்த இளைஞன் தாக்கப்பட்டிருந்தார் என்றும் நாங்கள் ஏற்கனவே நீதிமன்றுக்கு தெரிவித்திருந்தோம். அது இன்று உண்மையாகியிருக்கின்றது. நீதிமன்றம் இந்த வழக்கில் மிகவும் கரிசனையுடன் உள்ளதை நாங்கள் அவதானித்தோம். அதனை நாங்கள் வரவேற்கின்றோம்.

பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியரின் இரண்டாவது உடற்கூற்று பரிசோதனை விரைவாக நீதிமன்றத்துக்கு அனுப்பப்படும் என நாங்கள் நம்புகின்றோம்.

உரிய அறிக்கையை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்க நடவடிக்கையெடுக்கவேண்டும் என பொலிஸாருக்கு நீதிமன்றம் இறுக்கமான உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றது. சரியான நீதி கிடைக்கும் வரையில் நாங்கள் போராடுவோம் எனத் தெரிவித்தார்.

குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் 15ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர் போராட்டத்தை கொச்சைப்படுத்தியவர்கள் இன்று அரசாங்கத்துக்கு எதிராக போராடும் நிலை

## ஏறாவூர் பற்று பிரதேசசபை தவிசாளர் சர்வானந்தன்

(பட்டிருப்பு நிருபர்)

தமிழர்களின் போராட்டங்களை கொச்சைப்படுத்திய சிங்கள மக்கள், இன்று அதே போராட்டங்களை அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கின்றனர் என ஏறாவூர்ப் பற்று பிரதேசசபை தவிசாளர் எஸ்.சர்வானந்தன் தெரிவித்தார்.

சர்வதேச மீனவர் தின நிகழ்வு கித்துள் கிராமத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் இ.திரோசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் செல்வகுமார் நிலாந்தன், மறுமலர்ச்சி பெண்கள் அமைப்பின் அங்கத்தவர்கள், மீனவப் பெண்கள் அமைப்பின் அங்கத்தினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று தென்னிலங்கையில் தேங்காய் உடைத்தும் சிங்கள தலைவர்களின் படங்களுக்கு செருப்புமாலை அணிவித்தும் சிங்கள மக்களினால் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

தமிழ் மக்களின் போராட்டங்களை கொச்சைப்படுத்திய சிங்கள மக்களே அந்த சிங்கள தலைவர்களுக்கு எதிராக இன்று போராடும் நிலைமையை நாங்கள் காண்கின்றோம். தமிழர்கள் தங்களின் உரிமைகளுக்காக போராடினார்கள். சிங்கள மக்கள் சிங்கள தலைவர்களின் செயற்பாடுகளுக்கு எதிராக போராடுகின்றனர்.

இன்று பொருட்களின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளன. அத்துடன் இரசாயனப் பசளை இன்றி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு எதிராக பெரும்பாலான சிங்கள மக்கள் வீதியிலிறங்கி போராடிவருகின்றனர். இதுவொரு ஆரம்ப நிலையாகவே பார்க்கவேண்டியுள்ளது.

இந்நிலையில் தமிழ் மக்கள் எதற்காக பல இழப்புகளை எதிர்கொண்டார்களோ அந்த விடயத்தை வெற்றிகொள்ளும் வகையில் நாங்கள் சிந்தித்து செயற்படவேண்டும் என்றார்.

# மட்டு.மாவட்ட பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம்

(புதிய காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 6 ஆம் தரம் முதல் 9 ஆம் தரம் வரையான மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகள் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தரம் ஒன்று முதல் 5 வரையான வகுப்புகளும் 10 முதல் உயர்தர வகுப்புகளும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையிலேயே மேற்குறித்த தரங்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகள் நேற்று ஆரம்பமாகின.




இந்த நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் 90 சதவீதமான மாணவர்கள் பாடசாலைகளுக்கு சமுகமளித்திருந்ததாக பாடசாலை அதிபர்கள் தெரிவித்தனர்.

கொரோனா தொற்று நிலைமையை அடுத்து, பாடசாலைகள் நீண்ட காலம் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 31.01.1927

இறப்பு 16.11.2019



### திரு. தம்பையா குணரத்தினம்

எங்கள் குடும்ப ஒளி விளக்காய்
இருந்து எங்கள் வாழ்வில் ஒளி வீசிய
தெய்வமே! உங்கள் இழப்பு எங்களை
வாட்டுகிறது. எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் நீங்காது உங்கள் நினைவுகள்
உங்கள் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்
மகன்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும்
உற்றார், உறவினர்கள்.

தகவல்: மகன்மார் - சுரேஸ், ரமேஸ்,
பவானி - 0112 553375
இல.26, 33ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை.





# கல்மெட்டியாவவில் கைக்குண்டு மீட்பு



(திருமலை மேலதிக நிருபர்)

தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மெட்டியாவ வடக்கு பகுதியில் கைக்குண்டு ஒன்று நேற்றுமுன்தினம் (21) மீட்கப்பட்டதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

தனியார் ஒருவர் தனது காணியை துப்புரவு செய்து கொண்டிருந்த போதே மேற்படி குண்டு கண்டெடுக்கப்பட்டது. இது குறித்து காணி உரிமையாளர் தம்பலகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் குண்டை மீட்டெடுத்துள்ளனர் . இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# அம்பாறை விவசாயிகளுக்கு இலவச உரம் விநியோகம்

(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

அம்பாறை மாவட்ட பெரும்போக விவசாயிகளுக்கு சேதன உரம் மற்றும் உயிரியல் திரவநாசினி என்பன விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

நெற்பயிர்களின் மூன்றாங்கட்ட உரப் பிரயோகத்துக்குத் தேவையான கே.சி.எல். சேதன உரம் இதுவாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

கமநல சேவை அபிவிருத்தி நிலையங்கள் ஊடாக, பிரதேச கமக்காரர் அமைப்புக்கள் விநியோகப் பணியில் ஈடுபட்டுள்ளன.

இதேவேளை, ஏனைய பிரதேசங்களில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நனோ நைதரசன் திரவ உரம் வழங்கப்பட்டுவரும் அதேவேளை, அட்டாளைச்சேனை பிரதேச விவசாயிகளுக்கு நனோ திரவ உரம் வழங்கப்படாது, உயிரியல் திரவ நாசினி வழங்கப்படுவது குறித்து விவசாயிகள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

# கல்லடி வடிச்சல் பகுதி அபகரிப்பு முயற்சி மட்டு. மாநகர முதல்வரினால் முறியடிப்பு

(பட்டிருப்பு நிருபர்)



மட்டக்களப்பு, கல்லடி பாலத்துக்கு அருகில் உள்ள வடிச்சல் நிலப்பகுதியை அபகரிக்க முன்னெடுக்கப்பட்ட முயற்சி மாநகர முதல்வரினால் முறியடிக்கப்பட்டுள்ளதுடன் அபகரிப்புக்கு கொண்டுவரப்பட்ட பொருட்களும் மாநகரசபையினால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு, கல்லடி பாலத்துக்கு அருகில் உள்ள வடிச்சல் நிலப்பகுதியை தொடர்ச்சியாக அபகரிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் நிலையில் அவற்றை தடுத்து நிறுத்துவதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் மழைகாலங்களில் ஏற்படும் வெள்ள நீர் குறித்த வடிச்சல் நிலப்பகுதியூடாகவே வாவியை சென்றடைகிறது.

நீண்டகாலமாக குறித்த பகுதியை சிலர் அபகரிக்கும் நோக்குடன் வேலி அடைக்க முற்படும் நிலையில் அவற்றை தடுக்கும் செயற்பாடுகளை பிரதேச மக்களும் மாநகரசபையும் பிரதேச செயலகமும் இணைந்து முன்னெடுத்துவருகின்றன.

இந்நிலையில் நேற்று சிலர் குறித்த வடிச்சல் நிலப்பகுதியை வேலியிட்டு அடைக்கமுற்பட்டபோது அங்கு சென்ற மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் , மாநகரசபை உறுப்பினர்கள் குறித்த நடவடிக்கையை தடுத்து நிறுத்தியதுடன் அது தொடர்பில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவனின் கவனத்துக்குக் கொண்டுசென்றதைத் தொடர்ந்து அப்பகுதிக்கு சென்ற பிரதேச செயலாளர் குறித்த நடவடிக்கையை தடுத்து நிறுத்தினார்.

குறித்த பகுதியானது அரசாங்கத்துக்கு சொந்தமானது எனவும் குறித்த பகுதியில் எந்த நடவடிக்கையையும் முன்னெடுக்க வேண்டாம் எனவும் இதன்போது பிரதேச செயலாளர் அபகரிப்பு முயற்சியில் ஈடுபட்டவர்களுக்கு உத்தரவிட்டார்.

அப்பகுதியானது அரசகாணியாகவும் வடிச்சல் நிலப்பகுதியாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் சிலர் போலியான ஆவணங்களைக்கொண்டு வந்து பொலிஸாரின் ஆதரவுடன் குறித்த பகுதியை அபகரிக்க முனைவதாக மாநகர முதல்வர் தி.சரவணபவன் இதன்போது தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐந்தாவது தடவையாகவும் போலி ஆவணங்களைக்கொண்டுவந்து இந்த செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர். இதற்கு முன்னர் வேலி அடைக்கும் போது அதனை தடுத்த பொதுமக்கள் நான்கு பேருக்கு எதிராக குறித்த நபர்களினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் பொலிஸார் அவர்களுக்கு இந்த காணிக்குள் செல்லக்கூடாது என தடைவிதித்துள்ளனர். காணிவிடயங்களில் தலையிடுவதற்கு பொலிஸாருக்கு அதிகாரமில்லை. அரச காணியை அபகரிப்பவர்கள் ஆதாரம் இருந்தால் நீதிமன்றம் சென்றுவரவேண்டும். அவ்வாறில்லாமல் இவ்வாறு சட்டவிரோத காணி அபகரிப்பை முன்னெடுப்பவர்கள் பொலிஸாரின் துணையுடன் வருவது சட்டத்தை அவமதிக்கும் செயற்பாடாகும். அரசகாணிகளைப் பாதுகாக்கவேண்டிய பொலிஸ் சட்ட விரோத ஆவணங்களைக்கொண்டு காணிகளை அபகரிப்பவர்களுக்கு பக்கபலமாக இருப்பது கவலைக்குரியது. இது தொடர்பில் முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு பொதுமக்களுக்கு தடைவிதித்த பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கையெடுக்கவேண்டும். எதிர்வரும் காலத்தில் குறித்த பகுதியில் மாநகரசபையினால் விசேட வேலைத்திட்டத்தை முன்னெடுத்து பாதுகாக்கவுள்ளதாகவும் மாநகர முதல்வர் தெரிவித்தார்.

# மணல் அகழ்வை தடுத்து நிறுத்துமாறு வெருகலில் கவனயீர்ப்பு போராட்டம்



(சேனையூர் நிருபர்)

வெருகல், நாதன்ஓடை ஆற்றில் முன்னெடுக்கப்பட்டு வரும் மணல் அகழ்வை தடுத்து நிறுத்துமாறு கோரி அப்பகுதிவாழ்மக்கள் வெருகல் பிரதேச செயலகம் முன்பாக நேற்று திங்கட்கிழமை (22) கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். வெருகல் பிரதேச இளைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்போராட்டத்தில் ஈடுபட்டோர் மணல் அகழ்வை தடுக்கக்கோரும் வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கோஷம் எழுப்பினர். வெருகல் ஆற்றில் மணல் அகழ்வு இடம்பெறுவதால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு கிராமங்கள் அழிவடையும் ஆபத்து உள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் சுட்டிக்காட்டினர். இதன்போது வெருகல் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சி.முரளிதரனிடம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

# மாவீரர் நினைவேந்தலை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது

## தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை ஒருங்கிணைப்பாளர் சுவீகரன் நிசாந்தன்

(மாமாங்கம் நிருபர்)

ஆகுதியான மாவீரர்களுக்கு அவர்களின் உறவுகளால் தாயகம், தமிழகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் உள்ள துயிலும் இல்லங்களிலும் பொது இடங்களிலும் வீடுகளிலும் உணர்வுபூர்வமாக சுடரேற்றி நினைவஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும். இதனை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது என தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை தலைமை ஒருங்கிணைப்பாளர் சுவீகரன் நிசாந்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை தலைமை ஒருங்கிணைப்பாளர் சுவீகரன் நிசாந்தன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எம் இனத்தின் விடுதலைக்கான உன்னதமான எழுச்சிமிகு போராட்டம் மௌனிக்கப்பட்டு 12 ஆண்டுகளைக் கடந்துள்ள போதும் மாவீரர்களின் கல்லறைகளை இனவாத அரசாங்கம் இடித்தொழிக்கும் செயற்பாடுகளை இன்னும் கைவிடவில்லை என்பதனையே மன்னார் ஆட்காட்டி துயிலும் இல்லம் உடைப்பு சம்பவம் எடுத்துக்காட்டுகிறது. இதனை தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை வன்மையாகக் கண்டிக்கின்றது.

தமிழ்த் தேசிய பரப்பில் முன்னின்று செயற்படும் செயற்பாட்டாளர்களை, அவர்களது குடும்பத்தினரை, ஆதரவாளர்களை தொடர்ந்தும் அச்சுறுத்துவதும் பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினர் கொழும்புக்கு அழைத்து மிரட்டுவதும் பின் தொடர்வதும் மறுபுறத்தில் காவல்துறை மூலமாக தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களுக்கு எதிராக நீதவான் நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்து அதன் மூலமாக நினைவேந்தல்களுக்கான தடையுத்தரவுகளைப் பெறுவதும் அச்சுறுத்துவதுமாக பேரினவாத அரசின் மிலேச்சத்தனமான அராஜகங்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

தமிழர்களாகிய நாம் எம் மரணித்த மாவீரர்களின் நினைவுகளை இப்பொழுது மட்டுமல்ல இந்த உலகில் மானிடம் உள்ளவரை பல தலைமுறை தாண்டியும் நினைவிற்கொள்வோம். ஆகவே நீங்கள் இடித்தொழிக்க வேண்டியது துயிலும் இல்லங்களை அல்ல. மாறாக உலகத் தமிழர்களின் இதயங்களையும் உணர்வுகளையுமேயாகும். முடிந்தால் அதனைச்செய்யுங்கள். அப்பொழுது தமக்கான உரிமையை கேட்டு போராடிய ஒரு இனத்தை அழித்த சிங்கள அரக்கர்களாக புத்தரின் வரலாறு இந்த உலகில் மாற்றமடையட்டும் .

தமிழர்களாகிய நாம் இந்த நாட்டில் அடக்குமுறைகளையும் அச்சுறுத்தல்களையும் ஆள்கடத்தல்களையும் படுகொலைகளையும் தொடர்ந்தும் அனுபவித்தே வருகின்றோம்.

ஒவ்வொரு ஆட்சியும் ஆட்சியாளர்களும் மாறும் போது இது புதுப்புது விடயங்களாக தென்படலாம். ஆனால் எங்களுக்கு இவ்விடயங்கள் அனைத்தும் பழகிய ஒன்றுதான். எனவே தமிழர்களாகிய நாம் எக்காலத்திலும் இவற்றைக் கண்டு அஞ்சப்போவதில்லை.

ஆகவே வழமை போன்று மாவீரர் நினைவு நாளில் ஆகுதியான மாவீரர்களுக்கு அவர்களின் உறவுகளால் தாயகம், தமிழகம் மற்றும் புலம்பெயர் தேசங்களிலும் உள்ள துயிலும் இல்லங்களிலும் பொது இடங்களிலும் வீடுகளிலும் உணர்வுபூர்வமாக சுடரேற்றி நினைவஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும். இதை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட முடியாதென கருதக்கூடாது

## இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் கம்பனிகளுக்கு எச்சரிக்கை





(எம்.மனோசித்ரா)

கொவிட் நிலைவரம் என்பதால் எம்மால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட முடியாது என்று கருத வேண்டாம். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு தயாராவதாகவும் கம்பனிகள் அவற்றை எதிர்கொள்ள தயாராக வேண்டும் என்றும் முதலாளிமார் சம்மேளனத்துடனான சந்திப்பின்போது தெரிவித்துள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள், கம்பனிகள் மற்றும் முதலாளிமார் சம்மேளனம் ஆகியவற்றுக்கிடையில் நேற்று இடம்பெற்ற விசேட சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

முதலாளிமார் சம்மேளனத்துடனான சந்திப்பில் மக்களின் முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துரைத்தோம். குறிப்பாக சில கம்பனிகள் இதுவரையிலும் 1000 ரூபா சம்பளத்தை முழுமையாக வழங்கவில்லை. ஒரு கிலோ கொழுந்துக்கு 40 ரூபா மாத்திரமே வழங்கப்படுகிறது. எனினும் கம்பனிகள் இந்த 40 ரூபாவைக்கூட முறையாக வழங்குவதில்லை. நாளொன்றுக்கு 20 கிலோ கொழுந்து பறித்தால் மாத்திரமே 1000 ரூபா சம்பளம் வழங்கப்படும் என்று சில கம்பனிகள் நிபந்தனைகளை விதிக்கின்றன. இதுபோன்ற விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை தெளிவாக எடுத்துரைத்துள்ளோம்.

அது மாத்திரமின்றி தற்போது கொவிட் நிலைவரம் என்பதால் எம்மால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட முடியாது என்று கருத வேண்டாம். எவ்வாறிருப்பினும் நாம் மக்களின் பாதுகாப்பிற்கே முன்னுரிமையளித்து சிந்திக்கின்றோம். எனினும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு தயாராவதாகவும் கம்பனிகள் அதனை எதிர்கொள்வதற்கு தயாராக வேண்டும் என்றும் எச்சரித்துள்ளோம்.

தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பான வழக்கு விசாரணையில் எதிர்வரும் வாரங்களில் சிறந்த முன்னேற்றத்தினை அடைய முடியும் என்று எதிர்பார்க்கின்றோம். எமது இலக்கு 1000 அல்லது 1500 ரூபா சம்பளம் அல்ல. மக்களின் நன்மையே எமது இலக்காகும்.

சம்பள நிர்ணய சபையின் ஊடாக 1000 ரூபா வழங்கப்பட்டது. நாமும் அதனை நம்பியே வாக்களித்தோம். அரசாங்கம் இது தொடர்பில் அவதானம் செலுத்தும் என்று எண்ணினோம். தற்போது தொழில் அமைச்சின் கீழ் பல பிரச்சினைகள் உள்ளன. அந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வழங்கப்படுவதாகவும் தெரியவில்லை. கூட்டு ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டால் மாத்திரமே நாடும் மலையகமும் முன்னேறும் என்று பலர் கூறினர். இன்று கூட்டு ஒப்பந்தமும் இல்லாமல் போயுள்ளது. அன்று இவ்வாறான கருத்துக்களை வெளியிட்ட தொழிற்சங்கங்கள் தற்போது அமைதியாகவுள்ளன.

அரசாங்கத்துக்கு எதிராக பாராளுமன்றத்தில் பதாகைகளை ஏந்துபவர்கள் மக்களுக்கு ஆதரவாக பதாகைகளை ஏந்தலாமல்லவா? அந்த வகையில் கூட்டு ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை தற்போது அனைவரும் அறிந்து கொண்டிருப்பர். மக்கள் கூட்டு ஒப்பந்தம் வேண்டும் என்ற நிலைப்பாட்டில் காணப்படுவார்களாயின் எமது நிலைப்பாடும் அதுவேயாகும் என்றார்.




# சம்பள விவகாரத்தில் தீர்ப்பு வரும்வரை காத்திருக்கிறோம்

**முதலாளிமார் சம்மேளனம் தெரிவிப்பு**

## தோட்டக் காணிகளை வெளியாருக்கு தாரைவார்க்க இடமளிக்க முடியாது

(எம்.மனோசித்ரா)




பெருந்தோட்டங்களுக்குள் வெளிநபர்கள் நுழைவதற்கோ, அத்தகையவர்களுக்கு பெருந்தோட்டக் காணிகளை தாரைவார்ப்பதற்கோ இடமளிக்க முடியாது. அவ்வாறே கம்பனிகளும் செயற்பட வேண்டும். வேலை நாட்களை குறைத்து வேலைப்பளுவை அதிகரிப்பதே தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் முரண்பாடுகள் ஏற்படுவதற்கான பிரதான காரணி என்பதை தொழிற்சங்கங்களின் சார்பில் தெளிவுபடுத்தியிருப்பதாகத் தெரிவித்த இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வடிவேல் சுரேஷ், சம்பள விவகாரத்தில் நீதிமன்றத்தின் தீர்ப்பு வரும்வரை காத்திருப்பதாக சம்மேளனம் தெரிவித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைய ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த சந்திப்பு முதலாளிமார் சம்மேளனத்தின் செயலாளர் மங்கலயாபா தலைமையில் இடம்பெற்றது. இதில் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களான இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் கூட்டு தொழிற்சங்க கூட்டமைப்பு என்பன பங்குபற்றின. அத்தோடு கம்பனிகள் சார்பில் லலித் ஒபேசேகர மற்றும் ரொஷான் இராஜதுரை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சம்பள நிர்ணய சபையினூடாக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளம் நிர்ணயிக்கப்பட்டதையடுத்து மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் மற்றும் தோட்ட நிர்வாகத்துக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான பிணக்குகளை பொலிஸ் நிலையத்தின் ஊடாக தீர்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளமை ஆகியவை தொடர்பில் பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் முதலாளிமார் சம்மேளனத்திடம் எடுத்துரைத்தன.

வேலை நாட்களை அதிகரித்து தொழிலாளர்களின் வேலைப்பழுவைக் குறைக்குமாறு இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளதோடு, தொழில் பிணக்குகளை இனங்கண்டு அவை தொடர்பில் எழுத்து மூலம் முதலாளிமார் சம்மேளனத்துக்கு அறிவிப்பதற்கு இணக்கமும் காணப்பட்டுள்ளது.

சந்திப்பு தொடர்பில் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வடிவேல் சுரேஷ் குறிப்பிடுகையில்,

மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கம்பனிகள், தொழிற்சங்கங்களுக்கிடையிலான சந்திப்பு முதலாளிமார் சம்மேளனத்தில் இடம்பெற்றது. இதன்போது அண்மைக்காலமாக பெருந் தோட்டங்களில் நிலவுகின்ற அசாதாரண நிலைமைகளை முழுமையாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தோம். கூட்டு ஒப்பந்தம் இல்லாமலாக்கப்பட்டு சம்பள நிர்ணய சபை மூலமாக தீர்மானிக்கப்பட்ட சம்பளம் கிடைக்கப்பெறாமை, பெருந்தோட்ட மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் மற்றும் பெருந்தோட்ட நிர்வாகங்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான தொழில் பிணக்குகளை பொலிஸ் நிலையத்தின் ஊடாகவே தீர்க்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றமை தொடர்பிலும் இதன் போது அவதானம் செலுத்தப்பட்டது.

இந்த சந்திப்பில் சம்பளம் தொடர்பான வழக்கின் தீர்ப்பு வரும்வரை காத்திருப்பதாக சம்மேளனம் தெரிவித்திருப்பதுடன் தொழிலாளர்கள் எதிர்கொண்டுள்ள அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் இதன்போது இணக்கம் காணப்பட்டது.

அத்தோடு இது தொடர்பில் அடுத்த கட்ட பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கும் எந்தெந்த பகுதிகளில் இவ்வாறான பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதை இனங்கண்டு அது குறித்த தகவல்களை முதலாளிமார் சம்மேளனத்தில் எழுத்து மூலமாக சமர்ப்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் ஊடாகவோ அரச சார்பற்ற தரப்பினர் ஊடாகவோ வெளியார் பெருந்தோட்டங்களுக்குள் நுழைவதற்கு இடமளிக்கக் கூடாது என்பதையும் இதன்போது தெளிவாக எடுத்துரைத்தோம். எக்காரணம் கொண்டும் வெளியாருக்கு பெருந்தோட்டங்களுக்குள் நுழைவதற்கோ, காணிகளை பகிர்ந்தளிப்பதற்கோ தொழிற்சங்கவாதிகள் என்ற ரீதியில் நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. அவ்வாறே கம்பனிகளும் அதற்கு இடமளிக்கக் கூடாது என்பதை உறுதியாக தெரிவித்துள்ளோம்.

மேலும் வேலை நாட்களை அதிகரித்து, வேலைப்பழுவை குறைக்குமாறும் இதன் போது வலியுறுத்தினோம். காரணம் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கும் தோட்ட நிர்வாகத்தினருக்கும் முரண்பாடுகள் ஏற்படுவதற்கு இதுவே பிரதான காரணியாகும். எனவே வழமைக்கு மாறான செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்ளுமாறு நாம் வலியுறுத்தினோம் என்றார்.

# வரவு செலவுத் திட்டத்தில் ஏமாற்றமே கிடைத்துள்ளது

## பழனி திகாம்பரம் எம்.பி. கூறுகிறார்

(மஸ்கெலியா நிருபர்)



இன்றைய பொருளாதார நெருக்கடியில் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ஏதாவது நிவாரணம் கிடைக்கும் என்று எதிர்பார்த்த மக்களுக்கு ஏமாற்றமே கிடைத்துள்ளது என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த குறுகிய காலத்துக்குள்ளேயே மக்களின் பாரிய எதிர்ப்புக்கு ஆளாகியுள்ளது. நல்லாட்சி அரசாங்கத்தை குறைகூறியும் இனவாதம் பேசியும் ஆட்சிக்கு வந்த அரசு அதன் சுயரூபத்தை காட்டத் தொடங்கியுள்ளது. நாட்டுப் பற்று உள்ளவர்கள் போல் பேசினாலும் நாட்டுக்கான நல்லவை நடப்பதாகத் தெரியவில்லை. பெரும்பான்மையான மக்கள் அரசாங்கத்துக்கு எதிராகவே உள்ளனர். சகல துறைகளைச் சார்ந்தவர்களும் தங்களது உரிமைகளுக் காகவும் தேவைகளுக்காகவும் போராடும் நிலைமையே காணப்படுகின்றது.

கடந்த அரசாங்கத்தில் நாங்கள் முன்னெடுத்து வந்த பணிகள் எல்லாமே கிடப்பில் போடப்பட்டுள்ளன. மலையகத்தில் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அபிவிருத்திப் பணிகளான நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச சபைகள் அதிகரிப்பு தவிர, மலையக அபிவிருத்திக்கான அதிகார சபை, பிரதேச செயலகங்கள் அதிகரிப்பு முதலான விடையங்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பள உயர்வை வழங்க வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இன்று வரை அமுலுக்கு வரவில்லை.

வரவு செலவுத் திட்டத்தில் பெருதோட்டக் கம்பனிகளை ஊக்குவிக்கும் அதேவேளை, ஆயிரம் ரூபா சம்பளம் வழங்காத பெருந்தோட்டக் கம்பனிகளின் தனியார் மயப்படுத்தல் ஒப்பந்தத்தை மீளாய்வு செய்து வர்த்தக ரீதியில் அபிவிருத்தி செய்ய ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தாலும் மாற்று முதலீடுகள் என்ற பெயரில் பெருந்தோட்டக் காணிகளை வெளியாருக்கு வழங்குவதை அனுமதிக்க முடியாது. அவை பெருந்தோட்ட மக்களை பாதிக்காத வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை மீறி சென்றுள்ளன. வர்த்தகர்களே பொருட்களின் விலையை நிரணயிக்கும் நிலையில் மக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்றார்.

# வீரகேசரி சிறுவிளம்பரங்கள்

**ஜோதிடம்**

பிரிவால் வேதனையா நல்ல நட்பை இழந்து விட்டீர்களா? வீண் கவலை வேண்டாம் நீங்கள் நினைப்பது நடக்கும் கைரேகை, எண் ஜோதிடம், ஜாதகப்பிரசன்னம் மூலம் தொழில் நஷ்டம், திருமணம், வெளிநாட்டு பயணம், அதிர்ஷ்டம், கடன் தொல்லை நீங்க மற்றும் எதிர்காலத்தை தெளிவாக அறிந்து நிம்மதியுடன் வாழ ஜோதிட மனவள ஆலோசகர் சாமி கங்காதரன் ஐயாவை தொடர்பு கொள்ளுங்கள். 077 2105957 இரகசியம் நூற்றுக்கு நூறு வீதம் பாதுகாக்கப்படும். No. 145/1, Galle Road, Colombo - 06. 0777 310088, 011 2055655

**சேவை**

நீங்கள் அடகு வைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகைத்தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை. AAA Gold Center. 076 5684346

**சேவை**

நீங்கள் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? கவலையை விடுங்கள் நாங்கள் மீட்டு சந்தைப் பெறுமதி அவ்விடத்திலேயே தரப்படும். 077 6151283

**வீடு விற்பனைக்கு**

தெமட்டகொட வேலுவன வீதியில் ஹோல், சமையலறை, படுக்கையறை, நீர், மின்சாரத்துடன் வீடு விற்பனைக்கு உண்டு. 077 2178473

**தேவை**

ஹோட்டலொன்றுக்கு வெயிட்டர் வேலைக்கு ஆட்கள் தேவை. தொடர்பு - 077 9092363

**தேவை**

சாப்பாடு கடைக்கு Rice & Curry, அப்பம், கொத்து Cook தேவை, உதவியாட்கள் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். 076 2194938

**வாடகைக்கு**

வெள்ளவத்தையில் நாள் கிழமை வாடகைக்கு மாடி வீடுகள் உண்டு. சகல வசதிகளும் கொண்டது. பாதுகாப்பானது. 077 2105957, 0777 388860, 011 2055308

**தேவை**

கடவத்தை நகரில் அமைந்துள்ள மிளகாய் மில்லுக்கு மிளகாய் , ஊறவைத்த அரிசி அரைப்பதற்கு அனுபவமுள்ள ஆண்கள் தேவை. நாளொன்றுக்கு ரூ.1800 வழங்கப்படும். வேலை நேரம் காலை 8.00 - மாலை 7.00 வரை தொடர்புகொள்ளவும். ஜயந்தா அரைக்கும் ஆலை கடவத்தை. 076 1644211

**தேவை**

சொக்கலட் Company இற்கு வேலையாட்கள் தேவை. வயதெல்லை 18 - 55 ஆண்/ பெண். உணவு, தங்குமிடம் இலவசம். ஆரம்ப சம்பளம் 55,000/= நாள் சம்பளம் பெறலாம். 076 8152941

**தேவை**

ரைஸ் என்ட் கறி கோக்கி மற்றும் ப்ரைட் ரைஸ் கோக்கி, சமையலறைக்கு கையுதவியாட்கள் தேவை. 077 1190717 - 075 5058888

**தேவை**

Account Assistance தேவை. (பெண்கள்) Colombo-13, Wolfendhal Street இல் உள்ள எலக்ட்ரானிக்ஸ் Sales and Service கடைக்கு Accounts மற்றும் internet & online work செய்யக்கூடிய பெண் ஒருவர் தேவை. Colombo -13 இன் அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. திறமைக்கு ஏற்ப Rs. 40,000/= வரை சம்பளம் கிடைக்கும், மும்மொழி அறிவும், வியாபார திறமையும் விரும்பத்தக்கது. உடன் தொடர்பு கொள்ளவும். T.ராஜ்குமார் : 0777710785

**தேவை**

எமது நிறுவனத்தினால், 06 மாத கால இலவச பயிற்சி வழங்கப்படும், பயிற்சியின்போதுஉங்கள்திறமைக்கேற்பரூபா. 15000.00 - ரூபா. 20,000.00 வரையான சம்பளம் வழங்கப்படும், சாப்பாடு, தங்குமிடம், வைத்திய சேவை இலவசமாக செய்து தரப்படும். பயிற்சியின் பின்னர் எமது நிறுவனத்தில் ரூபா 75,000.00 இற்கு மேல் சம்பளத்துடன் நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்படும். நாங்கள் உங்களிடம் எதிர்பார்க்கும் தகைமைகள்: சாதாரண தரப்பரீட்சையில் (O/Level) 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஆங்கிலம் எழுத , வாசிக்க தெரிந்திருத்தல் வேண்டும். வயதெல்லை : 16 வயதிலிருந்து 28 வயது வரையுள்ளவர்கள் பங்குபற்றலாம். எமது நிறுவனத்தில் நிரந்தர வேலைவாய்ப்பினை பெற்றுக் கொள்ள விருப்பமுள்ளவர்கள் உடனடியாக இன்றே அழைக்கவும். 077 9354400, 075 3154400

**தேவை**

பெக்கிங் வேலைக்கு ஆண்/ பெண் தேவை. உணவு, தங்குமிடம் உண்டு. நாள் சம்பளம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 077 8672816, 075 3270182, 0764217228, 072 8684986

**தேவை**

ஹோமாகம, பணாகொடை Templeburg industrial இல் அமைந்துள்ள உற்பத்தி நிறுவனமொன்றுக்கு பயிற்சியுள்ள / பயிற்சியற்ற பணியாளர்கள் உற்பத்தி பிரிவுக்கு தேவை. 18 - 32 வயதுக்குட்பட்டவர், சிறந்த சம்பளம் மற்றும் சலுகைகள். தொடர்புகளுக்கு - 077 8869803

**தேவை**

அப்பம், ரொட்டி வேலைக்கு மற்றும் பேக்கரி வேலைக்கு பாஸ்மார் தேவை. உயர் சம்பளத்துடன் 071 5982677, 077 9811013, 076 1690014

**தேவை**

கொழும்பு வீடுகளில் தங்கியிருந்து சமையல் வீட்டு வேலைக்கு பெண்கள் தேவை. சம்பளம் 30,000/= - 35,000/= வழங்கப்படும். தோட்ட வேலைக்கு ஆண்கள் தேவை. 071 7539333 ஏஜன்சி







# சாவ் கூடைப்பந்தாட்டத்தில் இலங்கைக்கு இரண்டாமிடம்

பங்களாதேஷின் டாக்காவில் நடைபெற்ற தெற்காசிய கூடைப்பந்து சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை ஆடவர் கூடைப்பந்து அணி இரண்டாம் இடத்தைப் பெற்றது.

இலங்கைக்கு எதிரான இறுதிப் போட்டியில் இந்தியா 114– 48 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

அதன்படி தெற்காசிய கூடைப்பந்து போட்டியில் இந்திய அணி 6ஆவது முறையாக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளது.

இந்தத் தொடரில் இலங்கை அணி நடப்பு சம்பியன் என்ற அந் தஸ்துடனேயே களமிறங்கியிருந் தது. 2018ஆம் ஆண்டு இறுதியாக நடைபெற்ற இந்தத் தொடரில் இலங்கை சம்பியன் பட்டம் வென்றிருந்தது.

இந்தியா, பங்களாதேஷ், இலங்கை, மாலைதீவு, நேபாளம் உள்ளிட்ட ஏழு நாடுகள் பங்கேற்ற இப்போட்டியில் போட்டியை நடத்திய பங்களாதேஷ் அணி மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

இலங்கை வீரர்களான தசுன் நிலந்த, நிமேஷ் பெர்னாண்டோ மற்றும் அதபத்து ஆகியோருடன் அணித்தலைவர் கிளின்டன் ஸ்டலோனின் ஆட்டம் இந்தப் போட்டித் தொடர் முழுவதும் சிறப்பாக அமைந்திருந்தது.

# இலங்கை கிரிக்கெட் அணி வீராங்கனைகள் மூவருக்கு கொரோனா



சிம்பாப்வேயில் நடை பெறும் மகளிர் உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதிச் சுற்றில் பங்கேற்கும் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் மூன்று வீராங்கனைகள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இந்த மூன்று வீராங்கனைகளும் தனிமைப்படுத் தப்பட்டுள்ளனர்.

இலங்கை அணியில் உள்ள ஏனைய வீராங்க னைகள் யாருக்கும் வைரஸ் பாதிக்கப்படவில்லை என்றும் ஆனாலும் தொடர்ந்து நாளாந்தம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் நெதர்லாந்துக்கு எதிரான முதலாவது போட்டி இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின் அபார பந்துவீச்சினால்

# சரிந்த மேற்கிந்தியத் தீவுகள்



Powered by
CDB
Your Friend

இலங்கை அணியின் அபார பந்து வீச்சினால் மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இன் னிங்ஸில் 113 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து திக்கித் திணறி ஆடி வருகின் றது.

இலங்கை மற்றும் மேற்கிந் தியத் தீவுகள் அணிகளுக்கிடை யிலான முதலாவது டெஸ்ட் போட்டி காலியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்ப மானது. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 267 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

இந்நிலையில் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 386 ஓட்டங்களைப் பெற்று சகல விக் கெட்டுக்களையும் இழந்தது. இதில் அணித் தலைவர் திமுத் 147, தனஞ்சய டி சில்வா 61, தினேஷ் சந்திமால் 45 ஓட் டங்கள் வீதம் நேற்றைய நாளில் பெற்றுக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து முதல் இன்னிங்ஸை ஆடக் களமி றங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியை இலங்கையின் பந் துவீச்சாளர்கள் நிலைகுலைய வைத்தனர். மேற்கிந்தியத் தீவுகள் அணி 46 ஓட்டங்களை பெற்றிருந்த வேளையில் முதல் விக்கெட்டாக பிளாக்வுட் 20 ஓட்டங்களுடன் வெளியே றினார். அதனைத் தொடர்ந்து வந்த பூனர் ஒரு ஓட்டத்துடன் வெளியேற, ஷாய் ஹோப் 10, ரொஸ்டன் சேஸ் 2, ஜொமெல் 1 என அடுத்தடுத்து விக் கெட்டுக்களை இழந்தனர்.

பந்துவீச்சில் அசந்திய ரமேஷ் மெண்டிஸ் 3 விக் கெட்டுக்களையும், பிரவீன் ஜயவிக்கிரம 2 விக்கெட்டுக்க ளையும், லசித் எம்புல்தெனிய 1 விக்கெட்டையும் வீழ்த்த, நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்த வேளையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 113 ஓட்டங்க ளுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து 273 ஓட்டங்களால் பின் தங்கியிருந்தது.

களத்தில் கைல் மேயர்ஸ் 22 ஓட்டங்களுடனும் ஹோல்டர் ஒரு ஓட்டத்துடனும் இருந்தனர். இன்று போட்டியின்



# கவுண்டவுன் ஆரம்பம்

2022 நவம்பர் 21 ஆம் திகதி கட் டாரில் கால்பந்து உலகக் கிண்ணப் போட்டி தொடங்கவுள்ளது.

நவம்பர் 21 ஆம் திகதி முதல் டிசம்பர் 18 ஆம் திகதி வரை நடைபெ றுகிறது. லீக் சுற்றில் 12 நாட்களுக்கு தினமும் நான்கு ஆட்டங்கள் நடைபெறு கின்றன.

டோஹாவை சுற்றியுள்ள 8 மைதா னங்கள் இப்போட்டிக்காகப் பயன்படுத் தப்படுகின்றன.

இதுவரை கால்பந்து உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்திய நாடு களிலேயே மிகச்சிறியது கட்டார் தான். இதற்கு முன்பு கட்டாரை விட மூன்று மடங்கு பெரிய நாடான சுவிற்சர்லாந்து 1954இல் உலகக் கிண்ணத்தை நடத்தி யது. ஆனால் அப்போது 16 அணிகளே பங்கேற்றன. இப்போது 32 அணிகள் பங்கேற்கவுள்ளன.

28 இலட்சம் மக்கள் தொகை கொண்ட கட்டார், கால்பந்து உலகக் கிண்ணத்தை நடத்தும் முதல் அரபு நாடாகும்.

இன்னும் ஒரு வருடத்தில் உலகக் கிண்ணப் போட்டி தொடங்குவதால் டோஹாவில் உலகக் கிண்ணத்திற்கான கவுண்ட் டவுன் கடிகாரம் நிறுவப்பட் டுள்ளது.

90 வருட பழைமையும்
பாரம்பரியத்தையும் கொண்டுள்ள
VIRAKESARI
வீரகேசரியினூடாக
தினந்தோறும் ராசிபலன்களை தெரிந்துகொள்ள..
எமது Whatsapp குழுவில்
இணைந்துகொள்ளுங்கள்.



Virakesari Astrology
+9474 0927 382
எமது Whatsapp Group இல் இணைந்துகொள்ள
இந்த QR Code ஐ Scan செய்யவும்.

# அவுஸ்திரேலியா முழுமையாக தடுப்பூசியேற்றிய வெளிநாட்டு மாணவர்கள், பணியாளர்களுக்கு நாடு திரும்புவதற்கு அனுமதி

அவுஸ்திரேலிய அரசாங்கமானது எதிர் வரும் டிசம்பர் மாத ஆரம்பத்திலிருந்து சர் வதேச பயணத்தை மீள ஆரம்பிப்பதையும் நாட்டின் பொருளாதாரத்திற்கு உதவுவ தையும் நோக்காகக் கொண்டு வெளிநாட்டு விசா வைத்திருப்பவர்களை நாட்டுக்குள் அனுமதிக்கவுள்ளதாக அந்நாட்டுப் பிரதமர் ஸ்கொட் மொரிஸன் நேற்று திங்கட்கிழமை அறிவித்துள்ளார்.

கொவிட்-19 வைரஸ் தொற்றுத் தொடர் பான கட்டுப்பாடுகள் எதிர்வரும் வாரம் தளர்த்தப்படுவதையொட்டி அந்த வைரஸ் தொற்றுக்கான தடுப்பூசி மருந்து ஏற்றிய 200,000 வெளிநாட்டு மாணவர்களும் திற மையுள்ள பணியாளர்களும் விரைவில் தனிமைப்படுத்தலின்றி நாடு திரும்புவதை அவுஸ்திரேலியா எதிர்பார்த்துள்ளது.

எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதியி லிருந்து மாணவர்கள், திறன்மிக்க பணி



யாளர்கள் மற்றும் பயணிகள் ஆகியோ ருக்கு அவுஸ்திரேலிய சிட்னி மற்றும் மெல்போர்ன் விமான நிலையங்களில் பயணத் தடை தொடர்பான விதிவிலக் கின்றி தரையிறங்க அனுமதிக்கப்படவுள்ள தாக ஸ்கொட் மொரிஸன் தெரிவித்தார்.

திறன்மிக்க பணியாளர்கள் மற்றும் மாண வர்கள் நாடு திரும்புவது ஒரு பிரதான மைல் கல்லாகவுள்ளதாக தெரிவித்த ஸ்கொட் மொரிஸன், எதிர்வரும் ஜனவரி மாதத் திற்குள் மேற்படி இரு பிரிவிலும் 200,000 பேர் அவுஸ்திரேலியாவுக்கு வருகை தருவா ர்கள் என எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

இதன் பிரகாரம் தடுப்பூசியேற்றிய பயணிகள் நியூ சவுத்வேல்ஸ், விக்டோ ரியா ஆகிய அவுஸ்திரேலியாவின் சனத் தொகை கூடிய மாநிலங்களுக்கு தனிமைப் படுத்தலின்றி வருகை தர முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அவுஸ்திரேலியாவில் 16 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்க ளில் 85 சதவீதமானவர்களுக்கு முழுமையாக தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளது.

## உலகச் செய்திகள்

# அமெரிக்காவில் அணிவகுப்பு நிகழ்வில் காரை மோதி தாக்குதல்; 5 பேர் உயிரிழப்பு; 40 பேர் காயம்



அமெரிக்க விஸ்கொன்சின் மாநிலத் தில் அணிவகுப்பு நிகழ்ச்சியொன்றில் பங்கேற்றவர்கள் மீது காரை மோதி நடத் தப்பட்ட தாக்குதலில் குறைந்தது 5 பேர் உயிரிழந்துள்ளதுடன் 40 பேருக்கும் அதிக மானோர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மில்வோக்கி பிராந்தியத்தின் மேற்கே வோகெஷா நகரில் நத்தார் தின ஊர்வல மொன்றின் மீது பந்தய காரொன்றை மோதி இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது வேகமாக வந்த அந்தக் கார் சிறுவர்கள் உட்பட சுமார் 20 பேர் மீது மோதியதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட ஊர்வலம் முடிவடையும் நிலையை அண்மித்த போதே இந்தத் தாக் குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் தாக்குதலை நடத்திய நபரும் அந்தத் தாக்குதலுடன் தொடர்பு பட்டவராக சந்தேகிக்கப்படும் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தாக்குதலை யடுத்து 11 வயதுவந்தவர்களும் 12 சிறுவர் களும் அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர். இந்நிலையில் இது தொடர்பான விசாரணை அமெரிக்க எப்.பி.ஐ. புலனாய்வுப் பிரிவின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிராந்திய பொலிஸ் திணைக்களம் தெரிவிக்கிறது.

# ஆப்கானில் தொலைக்காட்சி நாடகங்களில் தோன்றுவதற்கு பெண்களுக்குத் தடை



ஆப்கானிஸ்தானில் தலிபான் அரசாங் கத்தால் அமுல்படுத்தப்பட்டுள்ள புதிய விதி களின் பிரகாரம் பெண்களுக்கு தொலைக் காட்சி நாடகங்களில் தோன்றுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தொலைக்காட்சி சேவைகளில் பணியாற்றும் பெண் ஊடகவியலாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் ஆகியோருக்கு முக்காடு அணிவதற்கு உத்தரவிடப்பட் டுள்ளது. இந்நிலையில் இது தொடர்பில் தலிபான் அதிகாரிகளால் வெளியிடப்பட்ட புதிய புதிய வழிகாட்டல் குறிப்புகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பின்னிரவு சமூக வலைத்தளங்களில் பரிமாறிக் கொள் ளப்பட்டன.

அத்துடன் முஸ்லிம்கள், ஆப்கான் விழு மியங்களுக்கு எதிரான திரைப்படங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற் றுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் மதத்தை அவதூறு செய்யும் நகைச் சுவை மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சி சிகள் என்பனவும் ஆப்கானியர்களுக்கு எதி ரானவையாக கருதப்பட்டு அவற்றுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வெளிநாட்டு கலாசார விழு மியங்களை ஊக்குவிக்கும் வெளிநாட்டுத் திரைப்படங்களை ஒளிபரப்பக் கூடாது என தலிபான்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இவை சட்ட விதிகள் அல்ல எனவும் அவை மத ரீதியான வழிகாட்டல்கள் எனவும் அமைச்சு பேச்சாளர் ஹகிக் மொஹாஜிர் கூறினார்.

# மியன்மாரை உள்ளடக்காது ஆசியான் உச்சிமாநாடு

சீனாவுக்கும் தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்குமிடையிலான வருடாந்த (ஆசியான்) உச்சிமாநாடானது மியன் மாரின் உயர் மட்ட ஆளுநரை உள்ளடக்க சீனாவால் விடுக்கப்பட்ட கோரிக்கை யையும் மீறி அந்நாட்டின் பிரதிநிதித்துவம் இன்றி நேற்று திங்கட்கிழமை ஆரம்பமா னது.

சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங்கின் தலைமையில் ஆரம்பமான இந்த உச்சி மாநாட்டில் மியன்மாரின் இராணுவத் தலைவரை உள்ளடக்க சீனாவால் விடுக் கப்பட்ட கோரிக்கையை இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருனே ஆகிய நாடுகள் நிராகரித்துள்ளன.

ஆசியான் உச்சிமாநாடு மியன்மா ரின் இராணுவத் தலைவர் மின் ஆங் ஹலாய்ங்கை உள்ளடக்காது இடம் பெறுவது ஒரு மாத காலப் பகுதியில் இது இரண்டாவது தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

# சூடானில் பாதுகாப்புப் படையினரால் 16 வயது சிறுவன் சுட்டுக் கொலை

சூடானிய நகரான ஓம்டர்மானில் பாது காப்புப் படையினரால் தலையில் துப் பாக்கியால் சுடப்பட்டு 16 வயது சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டுள்ளதாக சூடானிய மருத்துவர்களுக்கான மத்திய சபை தன்னால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிட் டுள்ளது.

இராணுவ ஆட்சி கவிழ்ப்பையடுத்து பல வார காலமாக நிலவிய பதற்றநிலையை த் தொடர்ந்து அனைத்து அரசியல் கைதி களையும் விடுதலை செய்வதாக உறுதிய ளித்துள்ள இராணுவ தலைவர் அப்டெல் பட்டாஹ் அல் புர்ஹானுடன் செய்து கொள் ளப்பட்ட அரசியல் உடன்படிக்கையின் பிர காரம் பிரதமர் அப்டல்லாஹ் ஹம்டொக் மீளப் பதவியில் நியமிக்கப்பட்ட நிலையில் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

தலைநகர் கர்தூமிலும் ஓம்டர்மான் மற்றும் பாஹ்ரி ஆகிய நகர்களிலும் பல்லா யிரக்கணக்கானோர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங் களில் ஈடுபட்டனர்.



இந்நிலையில் மேற்படி உடன்படிக்கை புரட்சியின் நோக்கத்தையே ஹம்டொக் விற்றுவிட்டதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த உடன்படிக்கையானது முழுமை யான மக்கள் ஆட்சியைக் கோரும் ஜனநா யக ஆதரவுக் குழுக்களின் எதிர்ப்பை சம்பா தித்துள்ளது.

மேற்படி ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமை தாங்கிய சூடானிய தொழில்சார் சங்கமானது மேற்படி உடன்படிக்கையை தேசத் துரோகமொன்றாகக் குறிப்பிட் டுள்ளது.

Printed and published by Express Newspapers (Cey) (Pvt) Ltd. at No. 267, Raja Mawatha, Ekala, Ja-Ela. On Tuesday, November 23, 2021